DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan, Sales Representative — kailain.thillai@gmail.com
Ragu Thillainathan, Sales Representative — homesbyraghu@gmail.com

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam, Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999

PYRAMID GROUP
UTHAYAN 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship; Super visa for parents and grandparents including health insurance; Citizenship; Permanent resident card renewal
Kokulan Baskaran, Tax Consultant
403-2855 Markham Road, Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

வீடு வாங்க விற்க...
Buying? Selling?
மோகன் சுப்பிரமணியம்
Mohan Subramaniyam, Broker / President
416 321 2300
MohanTeam.com
6888-14th Avenue, Markham ON, L6B 1A6

TEAM SMART REAL ESTATE PROFESSIONALS
VARATHAN ANUSHAN
THIRU GOBIRAJ
416.219.3333



26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
# உதயன்
தித்திக்கும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
Canadian Media Circulation Audit
$1.00
416-752-1524 www.uthayannews.ca
உதயம் 1444 — CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM — Friday December 8, 2023


## கனடாவில் இடம்பெற்ற நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் 3வது பாராளுமன்றத்தின் 10வது அமர்வு

## இலங்கை அரசின் போர்க்குற்றச் செயல்களுக்கு தகுந்த தண்டனையை பெற்று கொடுக்க வேண்டும் என்ற ஒருமித்த குரல் அங்கு ஓங்கி ஒலித்தது

(ரொறன்ரோவிலிருந்து ஆர். என். லோகேந்திரலிங்கம்)



கனடாவின் மார்க்கம் நகரில் அமைந்துள்ள அரச நூதன சாலை மாநாட்டு மண்டபத்தில் டிசம்பர் 1ம் நடைபெற்ற நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் 3வது பாராளுமன்றத்தின் 10வது அமர்வும் அரசாங்கத்தின் மூதவை உறுப்பினர்களின் அமர்வும் நேர்த்தியான முறையிலும் திட்டமிட்டட வகையிலும் பயனுள்ள உரைகளைக் கொண்டவையாகவும் திகழ்ந்தன என்பது குறிப்பிடத்தக்கது

மேலும் அந்த அமர்வில் இடம்பெற்ற சிறப்பு விருந்தினர்களின் உரைகள் அனைத்தும் மிகுந்த கவனத்துடன் தயாரிக்கப்பெற்ற உரைகளாகவும் ஈழத்தமிழர்கள் அனுபவித்த வலிகள் துன்பங்கள் ஆகியவற்றுக்கு பதில் சொல்லும் வகையில் இலங்கை அரசை சர்வதேச குற்றவியல் நீதி மன்றத்திற்கு விசாரணைக்காக கொண்டு வகையில் தமிழ் மக்கள் மாத்திரமல்ல கொடுமைகளுக்கு எதிராக குரல் கொடுக்கும் அனைத்து தரப்பினரும் கூட்டாக செயற்பட வேண்டும் என்றும் இலங்கை அரசின் போர்க்குற்றச் செயல்களுக்கு தகுந்த தண்டனையை பெற்று கொடுக்க வேண்டும் என்ற ஒருமித்த குரல் அங்கு ஓங்கி ஒலித்தது என்றே கூற வேண்டும்.

.(உள்ளே விபரமான செய்தி 18ம் பக்கத்தில்)

## கனடாவிற்கு வருகை தரும் சர்வதேச மாணவர்களை சிறப்பாகப் பாதுகாப்பதற்கான திட்டங்களை அறிமுகப்படுத்தும் கனடிய அமைச்சுக்கள்



வெளிநாடுகளிலிருந்து கனடாவிற்கு வருகை தரும் சர்வதேச மாணவர்களை சிறப்பாகப் பாதுகாப்பதற்கான திட்டங்களை அறிமுகப்படுத்தும் கனடிய அமைச்சுக்களின் உயர் அதிகாரிகள் பலர் அண்மையில் ஒட்டாவா மாநகரில்கூடி ஆராய்ந்தனர். அவற்றுள் கனடாவின் குடிவரவு மற்றும் பிரஜாவுரிமைகள் மற்றும் அகதிகளுக்கான அமைச்சு முக்கிய பங்கு எடுத்திருந்தது. இந்த திட்டங்கள் தொடர்பாக அண்மையில் மேற்படி அமைச்சின் மாண்புமிகு அமைச்சர் மார்க் மில்லர் ஊடகவியலாளர்களிடம் தனது கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டார்.

அவர் அங்கு உரையாற்றுகையில் பின்வருமாறு தெரிவித்தார்.

”எமது கனடா தேசமானது சர்வதேச மாணவர்களுக்கான சிறந்த இடமாகும், இங்குள்ள உயர்தர கல்வி நிறுவனங்களுக்கு நன்றி. நான் அவர்களைப் பாராட்டுகின்றேன். எங்கள் வரவேற்கத்தக்க, மாறுபட்ட சமூகம் மற்றும் சிலருக்கு பட்டப்படிப்புக்குப் பிறகு நிரந்தரமாக வேலை செய்ய அல்லது குடியேறுவதற்கான வாய்ப்புக்களை வழங்குகின்றது.

(உள்ளே விபரமான செய்தி 23ம் பக்கத்தில்)


Sri Nadarajasundram, Real Estate Broker
RE/MAX ACE
416-276-6666 srinada21@gmail.com

Krishna Punniyam
MORTGAGE ALLIANCE — RIGHT TEAM
MORTGAGE AGENT — ACCOUNTING
Purchase & Refinance, First Mortgage, Second Mortgage, Commercial Mortgage, Equity Loan
Personal Income Tax, Corporate Income Tax, HST Returns, Bookkeeping Service, Payroll Service, Audit preparation, Business Startup service
Mobile: 416.710.9150

RE/MAX ACE
Baskaran Sinnadurai
Commercial · Industrial · Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com

BIG Billyard Insurance Group
Great Coverage. BIG Savings.
Home · Auto · Life · Business
Iggy Thuray, Insurance Broker
416.814.7470
iggy@thebig.ca thebig.ca/iggy

Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள்
பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam, Sales Representative
RE/MAX COMMUNITY

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301, 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

வீடு, வர்த்தக ஸ்தாபனங்கள் வாங்க விற்க அல்லது அவற்றின் பெறுமதிய சட்டப்பூர்வமாக மதிப்பிட்டு அறிக்கையை பெற்றுக்கொள்ள (Appraisal Report) 24 வருட அனுபவம் வாய்ந்த என்னை அழையுங்கள்.
S.K. Bales (Broker) MVA (Market Value Appraiser), FRI, CRES
email: skbales@hotmail.com
Bus: 416-270-1111 Cell: 416-801-3219
3-1286 Kennedy Road, Toronto ON M1P 2L5
RE/MAX ACE REALTY INC., BROKERAGE

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East, Mississauga, ON, L5A 1W7 — 905-272-1222
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1 — 905-794-4404
online service: www.remitbee.com

# இரண்டு சிறார்களின் உயிர்களை காக்க வரிசையில் நின்று $13,833.16 தானம் வழங்கிய கனடா கந்தசாமி கோவிலின் பக்தகோடிகள்!



கடந்த நவம்பர் 18 - 19 திகதிகளில் கனடா கந்தசாமி ஆலயத்தில் நடைபெற்ற சூரன் போர் - பாரணை நேரங்களில், கடும் இருதய நோயுடன் உயிருக்கு போராடி கொண்டிருக்கும் மட்டக்களப்பு மாவட்டத்தினை சேர்ந்த இரண்டு சிறார்களின் இருதய சத்திர சிகிச்சைக்கு நானும் எங்கள் நிவாரண அமைப்பின் தொண்டர்களும் நின்று நிதி சேகரித்தோம். கருணை உள்ளதோடு வரிசை கட்டி வாரி வழங்கிய பக்தர்களின் செயல் எங்களை இன்ப வெள்ளத்தில் திக்கு முக்காட வைத்தது. அந்த சிறு குழந்தைகளின் கடும் நோயினால் அவர்களின் பெற்றோர்கள் படும் துன்பங்களை வெறும் வார்த்தையினால் சொல்லி மாளாது. இணையத்தில் TOF Heart Disease என்று தேடி பார்த்தால் தெரியும் இதன் கடுமையை. பிள்ளைகள் மூச்சு விட முடியாமல் உடலில் சில பாகங்கள் நீலமாக மாறி பெற்றோருக்கு பெரும் பயத்தினை கொடுக்கும். சிறுவர்களாக இருக்கும் பொழுது இந்த சத்திர சிகிச்சையினை செய்து முடிக்காவிட்டால், அவர்கள் உயிரினை காப்பாற்றுவது பெரும் கடினம். அநேகமானோர் தவறி விடுவார்கள். சமீபத்தில் இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் உள்ள சிறார்களின் இதய நோய் நிபுணர் வைத்திய கலாநிதி திரு கார்த்திக் அவர்கள் இந்த நோயினின் சீற்றத்தால் பரிதவிக்கும் குழந்தைகள் - சிறார்களின் சத்திர சிகிச்சைக்கு உதவி புரியும்படி கேட்டிருந்தார். அதனை கருத்தில் கொண்டு சிறார்களின் சத்திர கிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி காஞ்சனா சிங்கப்புலியிடம் இது பற்றி ஆலோசித்து முதற்கட்டமாக இரண்டு பிள்ளைகளை அனுப்புகிறோம். தாயகத்தில் பல பிரதேசங்களிலுள்ள மேலுமுள்ள சில குழந்தைகளுக்கு எதிர் வரும் துயெ 19 திகதி 2024, ஆபுசு 107 இன்னிசை இரவின் ஊடாக நிதி திரட்டி அவர்களுக்கும் சத்திர சிகிச்சையினை செய்து உயிர்களை காப்பாற்ற உள்ளோம். உங்கள் அனைவரின் ஆதரவினையும் அன்புடன் எதிர்பார்க்கின்றோம். எங்களை நிதி திரட்ட அனுமதி தந்து, இன்முகத்துடன் வரவேற்று ஒழுங்கினை செய்த கனடா கந்தசாமி கோவில் நிர்வாக சபையினருக்கும், திரு தனபாலசிங்கம், திரு முத்து ஆகியோருக்கும் தாயக மக்களின் சார்பில் கோடான கோடி நன்றிகளை தெரிவித்து கொள்கின்றோம். டொரோண்டோ மாநகரில் எத்தனையோ கோவில்கள் இருப்பினும், தாயக மக்களின் மருத்துவ தேவைகளை பூர்த்தி செய்ய நாங்கள் எடுக்கும் முயற்சிக்கு தொடர்ச்சியாக தோள் கொடுப்பது கனடா கந்தசாமி ஆலயம் மட்டுமே என்பதனை இங்கு குறிப்பிட விரும்புகின்றேன். சமூக கடமையினை செவ்வனே செய்யும் கோவில் இது. தாங்கள் கொண்டு வந்த தொகை பெரிதோ - சிறிதோஇ அதனை அப்படியே அள்ளி தந்து இந்த நற்பணியில் தங்களையும் இணைத்து கொண்ட பக்த கோடிகளுக்கு தாயகத்தில் உள்ள அந்த நோயாளிகளின் குடும்பங்களின் சார்பில் நன்றியினை கூற கடமைபட்டுளோம். என்னுடன் நின்று நிதி சேகரிக்க தங்கள் நேரத்தினை தந்துதவிய திரு ராசநாதன், திரு ராஜ் மோகன் மற்றும் திரு ஜெயராஜா வல்லிபுரம் ஆகியோருக்கு மனமார்ந்த நன்றியினை தெரிவித்து கொள்கின்றேன். உண்மையில் இது மிகப்பெரிய ஒரு வரம், உதவி கிடைக்கப்பெற்றவர்களுக்கு மட்டுமல்ல, எங்களுக்கும் தான்!

| | | |
|---|---|---|
| Asokamalar Thaniyasingam | 416-298-87_ _ | $1,000.00 |
| Yaso Thurai | 416-554-00_ _ | $1,000.00 |
| Yugan Balachandran | 647-988-33_ _ | $1,000.00 |
| Thillayambalam Selvakumaran | 416-566-23_ _ | $1,000.00 |
| Thangarajah Family | 416-302-99_ _ | $600.00 |
| Anujan & Ananjan Sritharan | 647-401-63_ _ | $500.00 |
| Srirajayogan Rajaratnam | 416-841-03_ _ | $250.00 |
| Vasanthakumar Thambiraja | 647-983-07_ _ | $200.00 |
| Abirami & Arani | 647-924-87_ _ | $200.00 |
| Karunarajah | 416-904-79_ _ | $130.00 |
| Shayanan Nandapalan | 416-274-63_ _ | $101.00 |
| Karthigesu Ganeshwaran | 416-305-71_ _ | $101.00 |
| Hariharan Gnaneswaran | 647 233 15_ _ | $100.00 |
| Thanansayan | 416 662 05_ _ | $100.00 |
| Gnanamalar Gnaneswaran | 647 529 40_ _ | $100.00 |
| Appan Rasalingam | 647 554 32_ _ | $100.00 |
| Sri Nadarajasuntharam | 416-276-66_ _ | $100.00 |
| Srikanthan Rajaratnam | 416-358-06_ _ | $100.00 |
| Wajanthy Sivasupramaniam | 416-301-23_ _ | $100.00 |
| Gowri Sabesan | 647-988-49_ _ | $100.00 |
| Suhitha Sivakaumaran | 647-772-03_ _ | $100.00 |
| Gnanalingam S | 416-938-48_ _ | $100.00 |
| Sukitha Kathir | 647-631-11_ _ | $100.00 |
| Mithuna, Abburna, Sitpana Mylalagan | 647-464-25_ _ | $100.00 |
| Theepan Lingathasan | 416-230-18_ _ | $100.00 |
| S.H.Vaikuntha | 647-828-68_ _ | $100.00 |
| Nithujen Arulnanthy | 416-807-02_ _ | $100.00 |
| Rajaratnam Sivanendran | 416-319-79_ _ | $100.00 |
| Nishanthan | | $100.00 |
| Aiswaryaa & Habish Kuathasan | 416-720-42_ _ | $100.00 |
| Muthu & Family | 416-200-07_ _ | $100.00 |
| Dinesh Kumar | 647-562-03_ _ | $100.00 |
| Mohan Sinnaiah | 905-409-21_ _ | $100.00 |
| Janaki Pratheepan | 416-830-27_ _ | $100.00 |
| Sinthujan | 416-274-74_ _ | $85.00 |
| Thavalingam | 416-818-31_ _ | $80.00 |
| Tharani Tharmalingam | 647-971-74_ _ | $75.00 |
| Latha - Jeyakanna (US $50) | 647-857-26_ _ | $66.16 |
| Pirasanna Ilampooraman | 647-835-29_ _ | $60.00 |
| Vaheesan Jeyaveerasingam | 416-276-99_ _ | $60.00 |
| Thambithurai Varatharajan | 647-909-74_ _ | $51.00 |
| Uthayan Mylvaganam | 416-616-37_ _ | $51.00 |
| Sivalingam | 416 997 60_ _ | $50.00 |
| Mithunan Vamathevan | 416 474 76_ _ | $50.00 |
| Naguleswary | 416 294 76_ _ | $50.00 |
| Thayanithi | 647 655 09_ _ | $50.00 |
| Kugan | 416 856 21_ _ | $50.00 |
| Jegatheeswaran | | $50.00 |
| Nivetha Sivanantha | 416 473 04_ _ | $50.00 |
| Uthayakumar | 416 723 25_ _ | $50.00 |
| Vickneswaran Karthikesu | 416 757 97_ _ | $50.00 |
| Sankar Sakthivel | 416 436 62_ _ | $50.00 |
| Yalini Sujendran | 416-918-92_ _ | $50.00 |
| Mahendran Thavaratnam | 416-346-14_ _ | $50.00 |
| Kumarasingam.M | 416-357-46_ _ | $50.00 |
| Madhanki S | 647-886-94_ _ | $50.00 |
| Sivanithy Tharmalingam | 416-704-49_ _ | $50.00 |
| Sivachandran S | 647-675-55_ _ | $50.00 |
| Ravi Pathmanathan | | $50.00 |
| Sairam & Saiarathana | 647-289-42_ _ | $50.00 |
| Pragith Chenthuran | 416-278-86_ _ | $50.00 |
| Tissan Ravindra | 416-265-69_ _ | $50.00 |
| Ragavy Ananthakumar | 647-339-10_ _ | $50.00 |
| Thangavel Family | 416-261-87_ _ | $50.00 |
| Mithusan Kirupananthan | 416-617-81_ _ | $50.00 |
| Kamalathevy Poopalan | 416-855-20_ _ | $50.00 |
| Mythily Saravanapavan | 647-466-85_ _ | $50.00 |
| Pavithra Saravanapavan | 416-476-16_ _ | $50.00 |
| Thana Kanagasabai | 647-889-27_ _ | $50.00 |
| Sivaram Paramalingam | 416-844-01_ _ | $50.00 |
| Vetha Ratnaraj | 416-258-58_ _ | $50.00 |
| Inthiran Veerasingam | 647-854-84_ _ | $50.00 |
| Ranganathan | 416-659-26_ _ | $50.00 |
| Kirusha Sarveswaran | | $50.00 |
| Sanseeban Selventhiran | 416-788-42_ _ | $50.00 |
| Siva Sivapermal | | $50.00 |
| Rajani | 647-533-84_ _ | $50.00 |
| Sivalingam Ellayathamby | | $50.00 |
| Paviska Kunalingam | 647-293-23_ _ | $50.00 |
| Thayalan Tharmalingam | 647-680-73_ _ | $50.00 |
| Raagavi | 647-239-23_ _ | $50.00 |
| Niranchana U | 416-446-61_ _ | $50.00 |
| Driyan, Vaishali & Shastik | 647-982-31_ _ | $50.00 |
| Ganeshakumar Kumarasamy | 416-269-98_ _ | $50.00 |
| Sorupy Selvarajah | 647-960-86_ _ | $50.00 |
| Jeyaraj Vallipuram | | $50.00 |
| Abilas Asmitha | | $50.00 |
| Santhiya | 416-939-55_ _ | $50.00 |
| Loganathan Nirmala (Swiss) | 7890073_ _ | $50.00 |
| Pathmanathan | 416-875-28_ _ | $50.00 |
| Pooloka Singam | 416-317-74_ _ | $50.00 |
| Ganesan Sivasambu | 647-680-06_ _ | $50.00 |
| Pathmanesan Family | 647-351-58_ _ | $50.00 |
| Kowsikan | 416 873 60_ _ | $45.00 |
| Bavani Lakshman | | $45.00 |
| K.Nakarasa | 647 273 60_ _ | $40.00 |
| Thayaharan Navaratnan | 647 502 01_ _ | $40.00 |
| Gowry Logeswaran | 641 233 61_ _ | $40.00 |
| Rogethan Mahendran | 647-983-93_ _ | $40.00 |
| Seevaratnam Family | 416-930-97_ _ | $40.00 |
| Jeyakumar | 647-741-21_ _ | $40.00 |
| Prema Subramaniyam | 905-940-31_ _ | $40.00 |
| Vijayaraj | | $30.00 |
| Kandiah Paramanathan | | $30.00 |
| Jeeva Hari | 416-831-35_ _ | $30.00 |
| Suresh Nadarajah | 416-294-60_ _ | $30.00 |
| Thenmoly Kandeepan | 416-562-01_ _ | $30.00 |
| Vikneswary Paramthillairajah | 416-567-50_ _ | $30.00 |
| Nisha | 647-825-10_ _ | $30.00 |
| Navaneethan Ponnaiah | 416-371-86_ _ | $30.00 |
| Suganya Thaveswaran | 647-704-18_ _ | $30.00 |
| Theivanthira Shanthini | 647-809-49_ _ | $30.00 |
| Anjana Satheeskumar | 647-854-54_ _ | $30.00 |
| Muttaiya Santhirajah | 416 269 97_ _ | $25.00 |
| Saravanamurthy Puvanenthiran | | $25.00 |
| Rani Joseph | 647 857 26_ _ | $25.00 |
| Kirrtik Mathanaharan | 416-660-43_ _ | $25.00 |
| Rajendran Periyasamy | 416-519-93_ _ | $25.00 |
| Vihas | 647-964-24_ _ | $25.00 |
| Kanakamany Kadatcharam | | $25.00 |
| Saroja Sanmugam | 416-831-05_ _ | $25.00 |
| Aathavi Senthuran | 647-783-27_ _ | $25.00 |
| Murugan | | $25.00 |
| Kowrithas | 416-752-91_ _ | $25.00 |
| Nadarajah | 416-335-60_ _ | $25.00 |
| Santhakumar | 416-826-89_ _ | $25.00 |
| Murugan | | $20.00 |
| Pathma Vathani | 647 982 60_ _ | $20.00 |
| Ananiya | | $20.00 |
| Mouny Veera | 416 265 37_ _ | $20.00 |
| Pavani | 416 265 51_ _ | $20.00 |
| Ramesh K | | $20.00 |
| Mrs.P. Subramaniam | 647 402 16_ _ | $20.00 |
| Ramani Thuraisingam | 416-267-09_ _ | $20.00 |
| Nirusha Sarveswaran | | $20.00 |
| Rajaratnam E | 416-519-23_ _ | $20.00 |
| Kamalan Sabaratnam | 416-986-23_ _ | $20.00 |
| Janany Sasmitha | 647-823-37_ _ | $20.00 |
| Sathu Sutha | 647-393-29_ _ | $20.00 |
| Guruparan | 416-509-66_ _ | $20.00 |
| Logini Sivakumar | 647-641-49_ _ | $20.00 |
| Sathanam Senthilnathan | 437-249-09_ _ | $20.00 |
| Mahendran V | 647-339-56_ _ | $20.00 |
| Bairavi Thavanathan | 416-305-79_ _ | $20.00 |
| Kavitha Balachandran | 905-470-42_ _ | $20.00 |
| Kuna Kunatheeban | 437-989-96_ _ | $20.00 |
| Jeya Karalasingam | 647-913-57_ _ | $20.00 |
| Sivagowry p | 416-565-03_ _ | $20.00 |
| Thaniya | 647-914-70_ _ | $20.00 |
| Meena Ramasamy | 647-344-61_ _ | $20.00 |
| Senthuran Segarasapillai | 647-628-12_ _ | $20.00 |
| Hamsa | | $20.00 |
| Kumaran Chandrakumar | 647-456-48_ _ | $20.00 |
| Jana Ragunathan | 416-425-02_ _ | $20.00 |
| Vilvarajah Sinnadurai | 416-275-14_ _ | $20.00 |
| Gopinath | | $20.00 |
| Jeyaseelan | 416-917-25_ _ | $20.00 |
| Sayona Yogeswaran | | $20.00 |
| Arjun Logeswaran | | $20.00 |
| Kathirgamanathan | | $20.00 |
| Sivagnanam S | 416-836-20_ _ | $20.00 |
| Nantha | 416-269-54_ _ | $20.00 |
| Soma Nadarajah | 647-894-62_ _ | $20.00 |
| Jey (Mathura N) | 647-655-01_ _ | $20.00 |
| Luxmi Sinnathamby | | $20.00 |
| Raveenthiran | 416-856-76_ _ | $20.00 |
| Nila R | 647-763-81_ _ | $20.00 |
| Senthil Murugan | 647-290-17_ _ | $20.00 |
| Keerthana | 416-898-15_ _ | $20.00 |
| Rajathurai | 416-285-60_ _ | $20.00 |
| Mavalan Satheeskumar | 647-706-12_ _ | $20.00 |
| Kavithasan Amuthini | 647-201-00_ _ | $20.00 |
| Nageswary Sivakurunathan | 416-679-24_ _ | $20.00 |
| Kalaivathani | 416-417-40_ _ | $20.00 |
| Sharmila Nanthapalan | 416-878-00_ _ | $20.00 |
| Akshaya Abarnash | 613-770-23_ _ | $20.00 |
| Kaswin Kiruthik | 647-713-60_ _ | $20.00 |
| Mahendran | 416-702-74_ _ | $20.00 |
| Viruthikan Kirupakaran | 647-854-54_ _ | $20.00 |
| Raveendran Sivarasa | 647-608-54_ _ | $20.00 |
| Kumarasami K | 416-301-95_ _ | $15.00 |
| Kajatheepan Selvarajah | 437-218-13_ _ | $13.00 |
| Kamda | | $10.00 |
| Sritharan | | $10.00 |
| Kanakambikai Thurairatnam | | $10.00 |
| Muruga | | $10.00 |
| Puvaneswary | | $10.00 |
| Sarves | | $10.00 |
| Piraisoody | 416-438-96_ _ | $10.00 |
| Suvitha Abiram | 416-550-03_ _ | $10.00 |
| Hari | 647-677-45_ _ | $10.00 |
| Pradees S | 416-473-90_ _ | $10.00 |
| Thusika Sivananthan | 416-264-92_ _ | $10.00 |
| Suren N | 647-656-23_ _ | $10.00 |
| Suhitha Kumar | 647-746-99_ _ | $10.00 |
| Meera Jeganathan | 647-427-53_ _ | $10.00 |
| Saathana Ayngaran | 416-439-60_ _ | $10.00 |
| Kajen | 647-852-84_ _ | $10.00 |
| Ilanchelian Sivapatham | 647-704-97_ _ | $10.00 |
| Nitheesan | | $10.00 |
| Arunthathy Srinivasan | 647-278-92_ _ | $10.00 |
| Kirija | | $10.00 |
| Manchula | 416-414-76_ _ | $10.00 |
| Shamee Rajkumar | 416-904-15_ _ | $10.00 |
| Abirami | 647-924-87_ _ | $10.00 |
| Sekar | 437-237-50_ _ | $10.00 |
| Parthi Riya | | $10.00 |
| Sathanantham | 416-267-32_ _ | $10.00 |
| Kanchana | 647 873 09_ _ | $5.00 |
| Thrshanthan | 647 776 04_ _ | $5.00 |
| Harthini | | $5.00 |
| Abinaya S | 416-807-92_ _ | $5.00 |
| Kumaravelu | 416-662-79_ _ | $5.00 |
| Harish Kugathasan | 416-720-42_ _ | $5.00 |
| Sriganeshan Thambiah | | $5.00 |
| Murugar | | $5.00 |
| Yoeswary Sureshkumar | | $5.00 |
| Swame | | $5.00 |
| Selvakumar S | 647-867-07_ _ | $5.00 |
| Murugar | 647-760-83_ _ | $5.00 |
| Kumar | 416-299-92_ _ | $5.00 |
| Mathisan | 647-870-70_ _ | $5.00 |
| Abimanyu Ariyaretnam | 416-441-18_ _ | $5.00 |
| Abira | 647-517-17_ _ | $5.00 |
| | | $13,833.16 |

நிவாரணம்
செந்தில் குமரன்
416-200-7652
www.Nivaranam.com

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் | Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

Canada

We acknowledge the financial support of the Government of Canada

## உதயன் கதிரோட்டம்

# இலங்கையின் பௌத்த சிங்கள வெறியர்களுக்கு "விளக்கவுரை" வழங்கிய பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் பாராட்டுக்குரியவர்

“தமிழர்கள் பௌத்தத்துக்கு எதிரானவர்கள் அல்ல. சிங்கள மக்களின் உண்மையான நண்பர்களாகவே வாழ விரும்புகின்றார்கள் அத்துடன் தமிழ் மக்கள் பௌத்தத்திற்கு எதிரானவர்களும் அல்லர்.“ இவ்வாறு நமது பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் இலங்கைப் பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை தெரிவித்த கருத்துக்கள் எத்தன சிங்கள பௌத்த வெறியர்களுக்கு மனங்களில் தெளிவை ஏற்படுத்தியிருக்கும் என்பதைபற்றி எண்ணிக் கொண்டிருக்கும் போது அவர் விடுதலைப் புலிகள் “ஆட்சிக் காலத்தில“ அவர்கள் எவ்வளவு தெளிவான இரக்க சிந்தனையோடும் அரசியல் நேர்மையையும் கடைப்பிடித்தார்கள் என்பதைக் காட்டும் சில காட்சிகள் எமது மனத் திரையில் ஓடின.

பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் அவர்கள் தனது உரையின் கருப்பொருளானது. இனவாதப் போக்குள்ள சிங்கள பௌத்த அங்கத்தவர்களுக்கு மாத்திரமல்ல தீவிர மதவாதப் போக்கு கொண்ட ரவுப் ஹக்கீம் போன்ற இஸ்லாமிய கடும் போக்கு கொண்ட அரசியல்வாதிகளையும் சிந்திக்வைத்திருக்கும் என்பதை எதிர்பார்க்க முடியாது.

செல்வராசா கஜேந்திரன் அவர்கள் மேலும் தெரிவிக்கின்றார்“ விடுதலைப் புலிக-ளின் காலத்திலும் கூட வடக்கு கிழக்கில் புராதன பௌத்த நிலையங்கள், வழிபாட்டுத் தலங்கள் பாதுகாக்கப்பட்டுள்ளன. எந்த சந்தர்ப்பத்திலும் பௌத்த விகாரைகள் சேதமாக்கப்படவில்லை. என்று அந்த “வெறியர்களுக்கு“ விளக்கமளித்தார்.

அதனிலும் மேலான பல மனித நேய விடயங்களில் கூட விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர்களும் தளபதிகளும் கண்ணியமாக நடந்து கொண்டார்கள் என்பதை நன்கு அறிந்திருந்த இஸ்லாமி மற்றும் சிங்கள பௌத்த அரசியல்வாதிகள் அவற்றைப் பாராடட வில்லை என்பதே அன்றைய நிஜமாகத் தெரிந்தது. தங்கள் இயக்கத்தின் போராளிகளையும் பொதுமக்களையும் நோக்கி கொடிய ஆயுதங்கள் கைகளில் வைத்துக்கொண்டு குறி பார்த்துக் கொண்டு தமிழர் பிரதேசத்திற்குள் புகுந்து கொண்ட சிங்களச் சிப்பாய்களை விடுதலைப் புலிகள் போராளிகள் கைது செய்து தங்கள் முகாம்களுக்கு கொண்டு சென்று சிறையில் வைததிருந்தபோது கூட அவர்களைச் சித்திரவதை செய்யவில்லை. இது தலைவர் பிரபாகரன் அவர்களின் “கட்டளையாகவும்“ இ.ருந்தது எனலாம். மேலும் தங்களால் கைது செய்யப்பட்டிருந்த சிங்களச் சிப்பாய்கள் சில-ரின் பிறந்தநாட்கள் அவர்கள் கைது செய்யப்பட்டு வன்னி மண்ணில் சிறை வைக்கப்பட்டிருந்த பொழுதும் கூட அவர்களுக்கு தங்கச் சங்கிலிகளை தலை-லவர் பிரபாகரன் அவர்கள் பரிசாக அளித்தார் என்பதை அன்றை செய்திகள் முக்கியத்துவம் கொடுத்திருந்தன. எனினும் விடுதலைப் புலிகளின் தலைமையின் அவ்வாறான மனித நேயப் பண்புகளைக் கூட சாதாரண சிங்கள மக்கள் அறிந்து கொள்ளக் கூடாது என்பதிலேயே சிங்கள பௌதத அரசாங்கமும் அரசியல்வாதிகளும் அன்று கவனத்துடன் செயற்பட்டார்கள் என்பதும் உண்மை. நமது பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் அவர்களின் ஆதங்கள் நன்கு புலப்படுத்துகின்றது. அவர் தமிழ் மக்கள் மீது இனவாத சிங்க பௌத்த அரசு மேற்கொள்ளும் இனவாத நடவடிக்கைகளை எப்போதும் பாராளுமன்றத்தில் கண்டித்து வருபவர். அதற்காக சிங்கள வெறியர்களால் தாக்குதல்களுக்கு உள்ளாக நேரிட்டும் அவர் தனது நேர்மையான அரசியலை கைவிடவிலலை.

, யுத்தம் நிறைவடைந்ததற்கு பின்னர் தொல்பொருள் இடங்களை திரிபுபடுத்தி பௌத்த அடையாளங்களாக சித்தரிப்பதை ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது. அவை பௌத்த அடையாளங்களாக இருந்திருந்தால் அது பௌத்த இடங்களாக பேணிப் பாதுகாக்கப்பட வேண்டுமே தவிர, அவற்றை திரிபு படுத்தி கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. அந்த வகையில் குருந்தூர் மலையில் அமைக்கப்பட்டுள்ள சட்டவிரோத விக-ாரை அகற்றப்பட வேண்டும். தையிட்டியில் தனியார் காணி அபகரிக்கப்பட்டு, கட்டப்பட்டுள்ள விகாரை அகற்றப்பட வேண்டும். மாங்குளத்தில் கட்டப்பட்டுள்ள விகாரை அகற்றப்பட வேண்டும். குருந்தூர் மலையில் ஆதி சிவனார் ஆலயத்தில் தமிழ் மக்கள் ஒரு பொங்கல் வைக்கக் கூட முடியாமல் உள்ளது. தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள் அங்கு தகரம் ஒன்றை வைத்துதான் பொங்கல் செய்ய வேண்டும் என்று குறிப்பிடுகின்றார்கள். அப்படியானால் தமிழர்களுக்கு ஒரு சட்டம் சிங்களவர்களுக்கு ஒரு சட்டமா? என்று நியாயமான கேள்விகளையும் பாராளுமன்றத்தில் கேள்வி நேரத்தில் எழுப்பியுள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் அவர்கள் தனது கட்சித் தலைவரின் வழிகாட்டுதலில் அவரது கருத்துக்களை பாராளுமன்றத்தில் தமிழ் மொழியில் பேசி “தவறாக செயற்படும் சிங்கள பௌத்த அரசியல் வாதிகளுக்கு பாடம் புகட்டக் கிளம்பியுள்ளார். அவருக்கு எமது வாழ்த்துக்களும் பாராட்டுக்களும் நிறையவே உண்டு!

# சிங்கள மக்களின் உண்மையான நண்பர்களாகவே தமிழர்கள் வாழ விரும்புகின்றனர் தமிழர்கள் பௌத்தத்துக்கு எதிரானவர்களும் அல்ல!

### இலங்கைப் பாராளுமன்றத்தில் செல்வராசா கஜேந்திரன் தெரிவிப்பு



தமிழர்கள் பௌத்தத்துக்கு எதிரானவர்கள் அல்ல. சிங்கள மக்களின் உண்மையான நண்பர்களாகவே வாழ விரும்புவதாக பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் இலங்கைப் பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை தெரிவித்தார்.

”நாம் பௌத்த மதத்தை நேசிக்கிறோம். பௌத்த மக்களை நேசிக்கின்றோம். பௌத்தர்களின் உண்மையான நண்பர்களாக இருக்கவே விரும்புகிறோம். நாம் ஒருபோதும் பௌத்தத்திற்கு எதிரானவர்கள் அல்ல ”என்றும் அவர் சபையில் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற புத்தசாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு, காணி சுற்றுலாத்துறை அமைச்சுக்களுக்கான நிதி ஒதுக்கீட்டு குழு நிலை விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

விவாதத்தில் தொடர்ந்தும் செல்வராசா கஜேந்திரன் உரையாற்றியபோது.”விடுதலைப் புலிகளின் நிர்வாகம் வடக்கு கிழக்கில் நிலைத்து நின்றபோதும் அந்த “ஆட்சிக்“ காலத்திலும் கூட வடக்கு கிழக்கில் புராதன பௌத்த நிலையங்கள், வழிபாட்டுத் தலங்கள் பாதுகாக்கப்பட்டுள்ளன. எந்த சந்தர்ப்பத்திலும் பௌத்த விகாரைகள் சேதமாக்கப்படவில்லை.என்பதைக் குறிப்பிட்டார்.

விடுதலைப் புலிகளின் காலத்திலும் கூட வடக்கு கிழக்கில் புராதன பௌத்த நிலையங்கள், வழிபாட்டுத் தலங்கள் பாதுகாக்கப்பட்டுள்ளன. எந்த சந்தர்ப்பத்திலும் பௌத்த விகாரைகள் சேதமாக்கப்படவில்லை.

எனினும், யுத்தம் நிறைவடைந்ததற்கு பின்னர் தொல்பொருள் இடங்களை திரிபுபடுத்தி பௌத்த அடையாளங்களாக சித்தரிப்பதை ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது. அவை பௌத்த அடையாளங்களாக இருந்திருந்தால் அது பௌத்த இடங்களாக பேணிப் பாதுகாக்கப்பட வேண்டுமே தவிர, அவற்றை திரிபு படுத்தி கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. அந்த வகையில் குருந்தூர் மலையில் அமைக்கப்பட்டுள்ள சட்டவிரோத விகாரை அகற்றப்பட வேண்டும். தையிட்டியில் தனியார் காணி அபகரிக்கப்பட்டு, கட்டப்பட்டுள்ள விகாரை அகற்றப்பட வேண்டும். மாங்குளத்தில் கட்டப்பட்டுள்ள விகாரை அகற்றப்பட வேண்டும். குருந்தூர் மலையில் ஆதி சிவனார் ஆலயத்தில் தமிழ் மக்கள் ஒரு பொங்கல் வைக்கக் கூட முடியாமல் உள்ளது. தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள் அங்கு தகரம் ஒன்றை வைத்துதான் பொங்கல் செய்ய வேண்டும் என்று குறிப்பிடுகின்றார்கள். அப்படியானால் தமிழர்களுக்கு ஒரு சட்டம் சிங்களவர்களுக்கு ஒரு சட்டமா? நாட்டில் யுத்தம் நிறைவு பெற்று 15 வருடங்களாகியும் நல்லிணக்கம் ஏற்படாமல் இருப்பதற்கு காரணம் புத்தசாசன அமைச்சும் தொல்பொருள் திணைக்களமும் மேற்கொள்கின்ற இது போன்ற நடவடிக்கைகள்தான்.

**Basement for Rent**

Queen / James Potter
in Brampton

3 bedroom, 2 washrooms with seperate entrance

Available on January 1st 2024

**Call: 289-654-7141**

**For All your Renovation Needs!**

- Drywall Installation
- Painting
- Hardwood Installation
- Bathroom Reno
- Kitchen Reno

Call - Siva

**416-706-8160**

**கொட்டாஞ்சேனையில் வீடு விற்பனைக்கு**

கொழும்பு கொட்டாஞ்சேனையில் உள்ள தொடர்மாடி கட்டடத்தில் (FLATS) ஒரு பெரிய அறை கொண்ட வீடு உடனடியாக விற்பனைக்கு உண்டு. நீர் மற்றும் மின்சாரம் போன்ற அனைத்து வசதிகளும் சிறந்த முறையில் செய்யப்பட்டுள்ளது.

தொடர்புகளுக்கு:- 647 779 1712

**வீட்டில் உள்ள முதிய உறவுகளைப் பராமரிக்கும் சேவை (PSW SERVICE)**

உங்கள் வீட்டில் உள்ள முதியவர்களான உறவுகளைப் பராமரிக்கும் சேவையை (PSW Service) நாங்கள் செய்து வருகின்றோம்.

தொடர்புகளுக்கு- 647 701 9809 அல்லது 437 782 8776 ஆகிய இலக்கங்களை அழைக்கவும்

**பெண் சமையல் உதவியாளர் தேவை**

ஸ்காபுறோவில் உள்ள வீடொன்றில் சிறு குடும்பம் ஒன்றுக்கு பெண் சமையல் உதவியாளராக பணியாற்ற ஒருவர் உடனடியாகத் தேவை. சம்பளம் பேசித் தீர்க்கலாம். மேலதிக விபரங்களுக்கு

பாலா மாஸ்டர்:- 416 418 8425

**வேலை வாய்ப்பு**
**Cook and Kitchen Help Wanted**

Cobourg நகரத்திலும் Downtown Toronto விலும் அமைந்துள்ள கனடிய உணவகங்களுக்கு Cook மற்றும் Kitchen Help ஆகியோர் உடனடியா-கத் தேவைப்படுகின்றார்கள். அனுபவம் விரும்பத்தக்கது. Cobourg நகரத்தில் வேலை செய்ய விரும்புவர்களுக்கு தங்குமிடம் மற்றும் போக்குவரத்து ஆகியன வழங்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு:-
416 294 7887

இலங்கை செய்திகள் Sri Lanka News

# அலெக்ஸிற்கு நீதி வேண்டி கண்டனப் போராட்டம்!

பு. கஜிந்தன்

வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டு உயிரிழந்த சித்தங்கேணி பகுதியைச் சேர்ந்த அலெக்ஸிற்கு நீதி வேண்டி கண்டனப் போராட்டத்தை முன்னெடுப்பதற்கு, தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் கனகரத்தினம் சுகாஷ் அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

அவர் வெளியிட்ட அறிக்கையில் உள்ளதாவது, வட்டுக்கோட்டைப் பொலிசாரின் காட்டுமிராண்டித்தனமான சித்திரவதைகளால் படுகொலை செய்யப்பட்ட நாகராசா அலெக்ஸன் (அலெக்ஸ்) அவர்களின் மரணத்திற்கு நீதி கோரியும் வட்டுக்கோட்டைப் பொலிஸ் நிலையத்தில் தொடர்ச்சியாக அரங்கேற்றப்பட்டு வரும் சட்ட விரோத சித்திரவதைகளை நிறுத்தக் கோரியும் எதிர்வரும் 03.12.2023 ஞாயிற்றுக் கிழமை பி.ப 3.00 மணிக்குக் கண்டனப் போராட்டம் வட்டுக்கோட்டைச் சந்தியில் நடைபெறவுள்ளது.

இந்த போராட்டத்தில் அனைவரும் திரண்டு எமது எதிர்ப்பைப் பதிவு செய்வோம், நீதிக்கான குரலை ஓங்கி ஒலிப்போம்.

அல்லது இன்று அலெக்ஸ், நாளை? - என குறிப்பிடப்பட்டுள்ளது.



# ஊர்காவற்துறை புனித அந்தோனியார் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா



ஊர்காவற்துறை புனித அந்தோனியார் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா நிகழ்வு கடந்த 29.11.2023 அன்று வெகு சிறப்பாக நடைபெற்றது.

கொடி ஏற்றி வைக்கப்பட்டு, மேற்கத்தேய இசை வாத்தியங்கள் முழங்க விருந்தினர்கள் அழைத்து வரப்பட்டு மங்கல விளக்கேற்றலுடன் நிகழ்வு ஆரம்பமானது.

பின்னர் விருந்தினர்களின் உரைகள், மாணவர்களது கலை நிகழ்வுகள், பரிசளிப்பு வைபவம் என்பன இடம்பெற்றன.

கல்லூரியின் அதிபர் அருட்திரு எம்.அன்ரன் அமலதாஸ் அவர்களது தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ்ப்பாண மறைமாவட்ட குரு முதல்வர் அருட்கலாநிதி பி.ஜே.ஜெபரட்ணம் அவர்களும், சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண மின்சார சபையின் பிரதம பொறியியலாளர் ஜேசுதாசன் அமலேந்திரன் அவர்களும், கௌரவ விருந்தினராக தீவக கல்வி வலயத்தின் கல்வி முகாமைத்துவ பிரதிக் கல்விப் பணிப்பாளர் அவர்களும் கலந்து சிறப்பித்ததுடன், இந்த நிகழ்வில் ஆசிரியர்கள், மாணவர்கள், அயற்பாடசாலை அதிபர்கள், அயற்பாடசாலை ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் என பலரும் கலந்துகொண்டனர்.





# வட்டுக்கோட்டை பொலிஸாரின் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்த அலெக்ஸின் மரணத்திற்கு நீதி வேண்டி வட்டுக்கோட்டையில் மாபெரும் கண்டனப் போராட்டம்




வட்டுக்கோட்டை பொலிஸாரின் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்த அலெக்ஸின் மரணத்திற்கு நீதி வேண்டி வட்டுக்கோட்டை சந்தியில் மாபெரும் கண்டனப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் "காவல்துறையா காவாலி துறையா, சுடலையில் வைத்து தாக்காதே, அலெக்ஸ் ஒரு அப்பாவி வட்டுக்கோட்டை பொலிஸ் குற்றவாளி, அலெக்ஸிற்கு நீதி வேண்டும், வாங்காதே வாங்காதே இலஞ்சம் வாங்காதே, வாங்காதே வாங்காதே சாராயப் போத்தல் வாங்காதே, அலெக்ஸ் ஐயோ ஐயோ, செய்யாதே செய்யாதே சித்திரவதை செய்யாதே" என கோஷமிட்டு பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தின்போது ஊர்காவற்துறை பொலிஸ் உப பரிசோதகர் சுஜீவ லித்தமாகொட அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதற்கு, கையில் ஒரு கடிதத்துடன் வருகைதந்தார். இதன்போது போராட்டக்காரர்களுடன் அவர் பேசுவதற்கு முயற்சித்தவேளை அவர்கள் அதற்கு எதிர்ப்பு தெரிவித்தனர். இதன்போது அவர் அவ்விடத்தில் இருந்து அகன்றார்.

பின்னர் அவர் போராட்டத்தின் முடிவில் ஊடகவியலாளர்களுக்கு விளக்கமளித்ததுடன், ஊடகவியலாளர்களின் ஒரு சில கேள்விகளுக்கு பதிலளித்துவிட்டு இறுதியில் பதிலளிக்க முடியாமல் அங்கிருந்து அகன்று சென்றார்.

இந்த போராட்டத்தில் அலிக்ஸின் உறவினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் கனகரத்தினம் சுகாஷ், கட்சியின் ஆதரவாளர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.



# தேவாலயத்திற்கு செல்லவில்லை என பங்குத்தந்தை ஒருவர் தாக்கிய நிலையில் சிறுமி வைத்தியசாலையில் அனுமதிப்பு!

சாகவச்சேரியில் உள்ளவதேவாலயத்திற்கு ஞாயிறு ஆராதனைக்கு செல்லவில்லை எனப் பங்குத் தந்தை ஒருவரால் தாக்கப்பட்ட சிறுமி ஒருவர் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட பகுதியில் உள்ள தேவாலயம் ஒன்றின் பங்குத் தந்தையே இவ்வாறு சிறுமியைத் தாக்கியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறுமியின் தந்தை கத்தோலிக்கராக உள்ளபோதும் தாயார் சைவ சமயத்தைச் சேர்ந்தவர் என்ற வகையில் சிறுமி தேவாலயத்திற்குச் செல்வது கிடையாது. தந்தையாருடன் சில சமயம் தேவாலயம் சென்று வரும் பழக்கம் உடையவர் என்றும் இருந்தபோதும் கடந்த சில நாட்கள் தேவாலயம் செல்லாத சிறுமியை அழைத்து தாக்கியதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன் காரணமாக சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சிறுமியை இன்று மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# சிவஞானம் சிறீதரன் சுமந்திரனுக்கு எதிராக போட்டியிட மாட்டார். பின்வாங்குவார் என்கிறார் ஸ்ரீரங்கேஸ்வரன்



நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் அவர்களும், நாடாளுமன்ற உறுப்பினர் ஆப்ரகாம் சுமந்திரன் அவர்களும் தலைமைத்துவத்துவ பதவிக்கு பரிந்துரைக்கப்பட்டு இருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன. ஆனால் சிவஞானம் சிறீதரன் சுமந்திரனுக்கு எதிராக போட்டியிட மாட்டார். பின்வாங்குவார். இது உறுதி. சிவஞானம் சிறீதரன் அவர்களுக்கு ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினுடைய ஆசன ஒதுக்கீட்டில் தான் இடம் கொடுக்கப்பட்டதாகவும் தமிழ் தேசிய கூட்டமைப்பில் ஏற்கனவே கூறி இருக்கின்றார்கள் என ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் ஸ்ரீரங்கேஸ்வரன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

திரு. சுமந்திரன், தென்னிந்திய திருச்சபை உள்ளிட்ட சில கிறிஸ்தவ அமைப்புக்கள் கொடுத்த அழுத்தத்தின் ஊடாக அவர்கள் தேசியப் பட்டியல் ஊடாக நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்ததாக ஒரு விமர்சனம் இருந்து வருகின்றது.

ஆகவே இரண்டு பேரும் தான் போட்டிக்கு தெரிவாகி இருக்கின்ற சூழலிலே, திரு. பிரபாகரன் அவர்களுக்கு பாலா அண்ணா எப்படி ஒரு பக்க பலமாக இருந்தாரோ அதுபோல திரு. சம்பந்தன் ஐயாவுக்கு திரு. சுமந்திரன் அவர்கள் பக்கபலமாக இருப்பதாக வடமராட்சி கிழக்கு கட்டைக்காட்டிலே நடைபெற்ற சந்திப்பிலே சிவஞானம் சிறீதரன் அவர்கள் கூறியிருக்கின்றார்.

ஆகவே நாங்கள் இந்த இரண்டு விடயங்களையும் ஒப்பீட்டளவில் பார்க்கின்ற பொழுது சிவஞானம் சிறீதரன் அவர்கள் கிளிநொச்சி மாவட்டத்தை சேர்ந்தவராக இருந்தாலும் தீவுப் பகுதிகளிலே அவருக்கு பின்னணியான உறவுகள் இருப்பதாக கூறப்படுகிறது.

இந்தவகையிலே இரண்டு பேரும் தமிழரசுக் கட்சியின் தலைமையை எடுப்பது என்ற விடயத்தில் இறுதிக் கட்டத்தில் இருவரும் ஒரு இணக்கப்பாட்டுக்கு வருவார்கள் என்பதைத்தான் நாங்கள் அவதானிக்க கூடியதாக உள்ளது.

சீ.வி.கே சிவஞானம் ஐயா, மாவை சேனாதிராஜா ஐயா போன்ற தலைவர்கள் பலர் நெருக்கடியான காலகட்டத்திலே இந்த கட்சியை காத்து வந்தவர்கள் என்பதை நாங்கள் ஒரு அரசியல் கட்சி என்ற வகையில் தெரிந்து வைத்திருக்கின்றோம்.

ஆகவே இந்தவகையில் அந்த கட்சியினுடைய முடிவுகள் தான் தீர்வாக இருக்கும் என்பது தெரியும். ஆனாலும் சிவஞானம் சிறீதரன் அவர்கள் பின்வாங்குவார்கள் என்ற கருத்தும் தொண்டர்கள் மத்தியில் கூறப்படுகிறது என்றார்.

# அராலி – பொன்னாலைக்கு இடைப்பட்ட பகுதியில் சுமார் 354 ஏக்கர் காணியை அரசு சுவீகரிக்கத் திட்டம்

இலங்கை செய்திகள் Sri Lanka News

## உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என பா.உ த.சித்தார்த்தன் பாராளுமன்றில் கோரிக்கை

சங்கானைப் பிரதேச செயலகத்திலே அராலி தொடக்கம் பொன்னாலை வரை, ஏறக்குறை பத்து கிலோமீற்றர் அங்கு என்ன நடக்கின்றது என்றால், வன ஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம், அவர்கள் வன ஜீவராசிகள் என்பதை விட்டுவிட்டு வன வளங்கள் பாதுகாப்பு என அந்த இடங்களுக்கு ஏற்றவாறு பெயர்களை மாற்றி அதனை தமது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவரப் பார்க்கின்றார்கள். ஏறக்குறைய 354 ஏக்கர். 07 மயானங்கள், விளையாட்டுத் திடல்கள், தனியார் காணிகள் எல்லாமே அதற்குள் அடங்குகின்றது. இதுபற்றி அரச அதிபர் சங்கானை பிரதேச செயலாளரைக் கேட்டிருக்கின்றார், பொதுமக்களையும் பொது அமைப்புக்களையும் அழைத்து இது சம்பந்தமான அவர்களுடைய அபிப்பிராயங்களை எடுக்கும்படி. அங்கு சென்ற எல்லோருமே அதை செய்யக்கூடாது என்றே சொல்லியிருக்கின்றார்கள்.

ஏனென்றால் பின்பு அப்பகுதி கடலில் மீன்பிடிக்கச் செல்பவர்கள் அங்கு செல்ல முடியாமல் போகும், அந்த மயானங்களை பாவிக்க முடியாமல் போகும் ஏனென்றால் வன வளங்கள் பாதுகாப்பு என்று அவர்கள் விட மாட்டார்கள்.

இது மாத்திரமல்ல, ஜனாதிபதி அவர்கள் சொல்லியிருக்கிறார், அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், 85ஆம் அண்டுக்கு முந்திய நிலைமைக்குத் தான் கொண்டுசெல்லப் போகின்றோம் என்று, ஆனாலும் அங்கு இந்த விடயம் நடந்து கொண்டிருக்கிறது. அவற்றை வனஜீவராசிகள் பாதுகாப்பு வலயமாக எடுப்பதற்கான முயற்சிகள் நடந்துகொண்டிருக்கின்றது. நிச்சயமாக இவைகள் எல்லாம் நிற்பாட்டப்பட வேண்டும். ஏனென்றால் தமிழ் மக்களைப் பொறுத்தமட்டில் நம்பிக்கையை உருவாக்க வேண்டியது உங்களுடைய கடமை.. எனவே அதை கட்டாயமாக செய்ய வேண்டுமென்று கேட்டு கொள்ளுகின்றேன்.

02

பயங்கரவாத தடைச்சட்டத்தினை முழுமையாக நீக்க வேண்டும் அத்துடன் பிடிக்கப்பட்டவர்கள் முழுமையாக விடுவிக்கப்படுவதுடன் கைதுகளையும் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என பா.உ த.சித்தார்த்தன் பாராளுமன்றில் கோரிக்கை.

பயங்கரவாத தடைச்சட்டத்தின்கீழ் பிடிக்கப்பட்டவர்கள் விடுவிக்கப் படுகின்றபோது மீண்டும் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் புதிதாக கைது செய்யப்படுகின்றார்கள். அண்மையில் கூட இவ்வாறு பலர் கைதுசெய்யப் பட்டிருக்கின்றார்கள். இறந்தவர்களை நினைவுகூருகின்ற நிகழ்வுகளிலே கைதுசெய்யப்பட்டிருக்கின்றார்கள்.

மட்டக்களப்பிலே தரவை பகுதியிலே நடாத்தப்பட்ட நிகழ்வுக்கு ஒலிபெருக்கி கட்டுவதற்குச் சென்ற தந்தையும் அவருடன் சென்ற உயர்தர வகுப்பில் படிக்கின்ற மகனும் கைதுசெய்யப்பட்டிருக்கின்றார்கள். அவர்கள் கடந்த வருடமும் கட்டியிருக்கின்றார்கள். இந்த வருடமும் சென்றிருக்கிறார்கள். அவர்களுக்கு தெரியாது இப்படியொரு நிலைமை இருக்கின்றது என்று, இதிலே அந்த மாணவர் இந்த டிசம்பரிலே உயர்தர பரீட்சை எடுக்க வேண்டியிருக்கின்றது. அவர் கைதுசெய்யப்பட்டிருக்கின்றார். அவர் மட்டக்களப்பு வந்தாறுமூலை மகா வித்தியாலயத்தில் படிக்கின்ற நியூட்டன் தனுசன் ஆவர். அவருக்கு அது ஒரு தொழில். அவரின் தந்தைக்கு அதை வைத்துத்தான் அவர்களின் குடும்பம் நடக்கின்றது. அவர் தந்தையுடன் சென்று ஒலிபெருக்கி கட்டுவது வழக்கம். இது கடந்த காலத்திலும் நடந்திருக்கின்றது இம்முறை சென்றபோது அவரும் தந்தையுமாக கைதுசெய்யப்பட்டிருக்கின்றார்கள்.

யுத்தம் முடிகின்றபோது அந்த மாணவனுக்கு ஐந்து, ஆறு வயதுதான் இருந்திருக்கும். அவர் விடுதலைப் புலிகளுக்குமோ, யுத்தத்திற்குமோ எந்தவித சம்பந்தமும் இல்லாதவர். அவர் எந்தவொரு விடயமுமோ தெரியாத ஒருவர். அவரை பயங்கரவாத தடைச்சட்டத்தின்கீழ் கைதுசெய்வது என்பது ஒரு மிக அநியாயமான விடயம் என்றே நான் கருதுகிறேன். அப்படியானவர்களை விடுதலை செய்வதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அடுத்ததாக நகுலேஸ்வரன் சங்கரப்பிள்ளை என்பவர் விடுதலைப் புலிகளின் ஒரு முன்னைநாள் போராளி. இவர் புனர்வாழ்வு பெற்று, ஆயுதப் போராட்டத்தை விட்டு முன்னைநாள் போராளிகள் கட்சி ஒன்றை ஆரம்பித்து, நாங்கள் ஐந்து கட்சிகளாக இயங்குகின்ற எங்களுடைய கூட்டணியிலே அவரும் அதில் இயங்கிக் கொண்டிருக்கின்றார். அவர் முன்னாள் போராளிகள் கட்சியிலே உப தலைவராக இருக்கின்றார். அவர் செய்த குற்றமெல்லாம் அவருடைய அலுவலகத்திலே அதாவது அந்தக் கட்சியினுடைய அலுவலகத்திலே யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் வயோதிபர்களுக்கு உலருணவு வழங்கியது. இதற்காக அவர் பயங்கரவாத தடைச்சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டிருக்கின்றார்.

தமிழ்க் கட்சிகளைப் பொறுத்தமட்டிலே பயங்கரவாத தடைச்சட்டத்தை இல்லாமல் செய்ய வேண்டுமென்று நாங்கள் திரும்பத் திரும்ப கேட்கிறோம். நீங்கள் அதை மாற்ற வேண்டும், திருத்த வேண்டும் என்று கூறுகிறீர்கள்.

ஒரு நேரத்திலே CTA (Counter Terrorism Act) என்று கொண்டு வந்தீர்கள். இப்போது ATA (Anti Terrorism Act)). இவை எல்லாம் இருக்கின்றபோதும் அந்த TA (Terrorism Act) இருக்கின்றது. அதை நிச்சயமாக முழுமையாக நீக்க வேண்டும்.

நீங்கள் இங்கிருந்து எதைச் சொன்னாலும் இந்த சட்டங்கள் இருக்கின்ற வரையும் அந்தப் பகுதிகளிலே வேலைசெய்கின்ற பொலிசார் நிச்சயமாக பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்து கொண்டுதான் இருப்பார்கள். அவர்களை பிணையில்லாமல் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கின்றார்கள்.

ஆகவே இந்த பயங்கரவாத தடைச்சட்டத்தை முழுமையாக இல்லாமல் செய்தால்தான் இந்த நிலைமைகள் இல்லாமல் போகும்.

இன்று நல்லிணக்கம் பற்றி பேசுகின்றபோது, தமிழ் மக்களைப் பொறுத்தமட்டில் ஒரு பயத்தைக் கொடுக்கின்றது. கடந்த காலங்களில் கூட மிக சிறு சிறு விடயங்களுக்கெல்லாம் பல இளைஞர்கள் பயங்கரவாத தடைச்சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்பட்டு காலவரையின்றி சிறைகளில் இருந்தனர். தொடர்ந்து அவர்களை சிறையில் தடுத்து வைத்திருந்த காரணத்தினால் தான் இந்த போராட்டமானது மிகப் பெரிய ஆயுதப் போராட்டமாக உருவானற்கு காரணமாக இருந்தது. அது என்றுமே நிற்பாட்டப்படவில்லை. இன்று கூட அது தொடர்ந்து நடந்து கொண்டுதான் இருக்கின்றது.

ஆகவே, இந்த பயங்கரவாத தடைச்சட்டத்தை இல்லாமல் செய்ய வேண்டியது ஒரு மிக முக்கியமான விடயமாகும்.



இலங்கை செய்திகள்
Sri Lanka News

# அடம்பன் பொலிஸாருக்கு எதிராக குடும்பம் ஒன்று மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு

## வளவிற்குள் துப்பாக்கிச் சூடு நடத்தியதாகவும் குற்றச்சாட்டு




(4-1-2023)

மன்னார் குருவில், வசந்தபுரம் கிராமத்தில் வசிக்கும் குடும்பம் ஒன்று அடம்பன் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸார் தொடர் அச்சுறுத்தல் விடுத்து வருவதாகவும், தங்கள் மீது துப்பாக்கியால் சுட்டதாகவும், தாங்கள் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பியதாகவும் தொடர்ந்தும் தமது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகவும் தமக்கு உரிய பாதுகாப்பு வழங்க கோரி மன்னார் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் திங்கட்கிழமை (4) மதியம் மகஜர் ஒன்றை கையளித்துள்ளனர்.

குறித்த மகஜரின் பிரதிகள் மன்னார் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், மன்னார் மாவட்ட சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனம் ஆகியவற்றிற்கும் கையளித்துள்ளனர்.

குருவில் வசந்தபுரம், வட்டக்கண்டல் என்ற முகவரியை சேர்ந்த ய.சகாயராணி என்ற நான்கு பிள்ளைகளின் தாய் இவ்வாறு மகஜர் ஒன்றை கையளித்துள்ளார்.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரிவிக்கையில், கடந்த 1 ஆம் திகதி (1-12-2023) வெள்ளிக்கிழமை மாலை 6 மணியளவில் அடம்பன் பொலிஸ் நிலையத்தை சேர்ந்த பொலிஸார் 3 பேர் சிவில் உடையில் எனது வீட்டுக்கு வந்து கணவரை கேட்டு விட்டு வீடு மற்றும் வீட்டுச் சூழலை முழுமையாக சோதனை செய்தனர்.

எனது கணவர் தோட்ட வேலை செய்து விட்டு டீசல் வாங்க எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு சென்று விட்டார். நானும் எனது பிள்ளைகளும் வீட்டில் இருந்தோம்.

தொடர்ந்தும் எனது கணவரை எங்களிடம் கேட்டு தகாத வார்த்தைகளினால் எங்களை பேசி அச்சுறுத்தினார்கள். பின்னர் எனது மகனை பார்த்து உனது பாக்கெட்டில் கஞ்சாவை வைத்து உன்னை கைது செய்து 14 நாள் சிறையில் வைப்போம் என மிரட்டி உள்ளனர். அதனைத் தொடர்ந்து வீட்டை விட்டுச் சென்றனர்.

மீண்டும் 2 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 6 மணியளவில் எனது கணவர் தோட்ட வேலை செய்து முடித்து விட்டு மாடு கட்டுவதற்கு சென்றிருந்தார்.

அப்போது பொலிஸார் கூறிக்கொண்டு சிவில் உடையில் வீட்டுக்கு வந்தவர்கள் கணவரையும், மகனையும் தகாத வார்த்தைகளால் பேசி கைது செய்யப் போவதாக கூறினார்கள்.

அதற்கு அவர்களிடம் நான் கேட்டேன் அவர்கள் என்ற குற்றம் செய்தார்கள் என்று? இதன் போது எனது கணவரும் வீட்டுக்கு வந்தார். அதன் போது எனது கணவரை பிடித்து கைவிலங்கு போட எத்தனித்தனர்.

பின்னர் துப்பாக்கியை எடுத்து எங்களை நோக்கி சுட்டனர். எனினும் நாங்கள் மயிரிழையில் தப்பினோம். குறித்த பொலிஸார் மது போதையில் காணப்பட்டனர். பின்னர் எங்களை அச்சுறுத்தி விட்டு சென்றனர்.

3 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று காலை ஆலயத்துக்குச் சென்ற நிலையில் மீண்டும் வீட்டிற்கு சீருடையுடன் 3 பொலிஸாரும், சிவில் உடையில் 6 பேரும் சென்று வீட்டில் உள்ள உடமைகளை சேதப்படுத்தி, வீதியால் சென்றவர்களிடம் எங்களை விசாரணை செய்துள்ளனர்.

மதியம் 12.30 மணி வரை அங்கே நின்றுள்ளனர். இதனால் நாங்கள் அச்சம் காரணமாக வீட்டிற்கு செல்லவில்லை. பாடசாலை செல்லும் பிள்ளைகள், வேலைக்குச் செல்லும் பிள்ளைகளும் வேலைக்குச் செல்லவில்லை. தொடர்ந்தும் அடம்பன் பொலிஸ் நிலையத்தை சேர்ந்த பொலிஸார் எங்களை காரணம் இன்றி அச்சுறுத்தி வருகின்றனர். எனவே எனது குடும்பம் பாதுகாப்புடன் வாழ ஆவணம் செய்யுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# ரணிலின் 10 பேர்ச் வீட்டுக்காணி திட்டம் கொழும்பு அவிசாவளையில் ஆரம்பிக்கப்பட வேண்டும்

## தீப்பிடித்த வீடுகளை பார்வையிட்ட பின் மனோ கணேசன் எம்பி



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பெருந்தோட்ட மக்களுக்கான பத்து (10) பேர்ச் வீடமைப்பு காணி திட்டம் முதலில் எனது கொழும்பு மாவட்ட அவிசாவளை தொகுதி பென்ரித் தோட்டம் கருங்காளி பிரிவில் ஆரம்பிக்கப்பட வேண்டும் என கோருகிறேன். இங்கே இடம்பெற்றுள்ள தீவிபத்தில் எட்டு வீடுகள் பெரும் சேதங்களுக்கு உள்ளாகியுள்ளன. இன்னமும் நான்கு வீடுகள் சிறு சேதங்களுக்கு உள்ளாகி உள்ளன. இங்கே ஏறக்குறைய இருபது குடும்பங்கள் வாழ்வதாக அறிகிறேன். இந்த இருபது குடும்பங்களுக்கும் வீடுகளை கட்டிக்கொள்ள தலா பத்து (10) பேர்ச் காணி துண்டுகள் வழங்கப்பட வேண்டும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தனது பட்ஜெட் உரையில் பெருந்தோட்ட குடும்பங்களுக்கு வீடமைக்க காணி வழங்குவேன் எனக்கூறி, அதற்காக நானூறு கோடி ரூபாயை தனது அமைச்சின் நேரடி கண்காணிப்பில் ஒதுக்கிக்கொண்டுள்ளார். ஆகவே எனது இந்த கோரிக்கையை ஏற்றுக்கொண்டு தனது வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும் என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவரும், கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் கூறியுள்ளார்.

கொழும்பு மாவட்ட அவிசாவளை தொகுதி பென்ரித் தோட்டம் கருங்காளி பிரிவில் ஏற்பட்டுள்ள தீவிபத்தின் சேதங்களை பார்வையிட சென்ற கொழும்பு மாவட்ட எம்பி மனோ கணேசன், ஸ்தலத்தில் இருந்தபடி ஊடகங்களுக்கு கூறியதாவது,

இங்கே அனைவரும் இந்த தோட்டத்தில் பணி புரிபவர்கள் அல்ல. வெளியில் மாற்று தொழில் செய்பவர்களும் இங்கே இருக்கிறார்கள். ஆனால், அனைவரும் இங்கேதான் பரம்பரை பரம்பரையாக நீண்ட காலம் வாழ்பவர்கள். ஆகவே தலா பத்து (10) பேர்ச் காணி துண்டுகள் அனைத்து குடும்பங்களுக்கும் வழங்கப்பட வேண்டும். சொந்தமாக வருமானம் உள்ளவர்கள் அரசாங்கம் தரும் காணியில் வீடு கட்டிக்கொள்ள வேண்டும். இயலாதவர்களுக்கு அரசாங்கம், இலங்கை, இந்திய வீடமைப்பு திட்டங்களின் கீழ் வீடு கட்டிக்கொடுக்க வேண்டும். இதுதான் நிரந்தர தீர்வு. இதுதான் எனது கோரிக்கை.

தற்சமயம் தற்காலிக தீர்வாக, தோட்ட நிறுவன முகாமையாளர் ஹெட்டியாராச்சி உடன் பேசி உள்ளேன். தீக்கிரையான வீடுகளின் சேதங்களை திருத்தி தர அவர் உடன்பாடு தெரிவித்து பணியை ஆரம்பித்துள்ளார். கொழும்பு மாவட்ட செயலாளர் கே.ஜி. விஜயசிறியிடம் இதோ இங்கிருந்தபடியே நான் தொலைபேசியில் உரையாடினேன். அரச தரப்பு நடவடிக்கைகளை எடுப்பதாக உறுதி அளித்துள்ளார். அவிசாவளை பிரதேச செயலாளர் தில்ஹானியிடமும் உரையாடி உள்ளேன்.

உடைமைகளை இழந்த மக்களுக்கு எனது சார்பில் நிதி வழங்கி உணவு மற்றும் சமையல் பாத்திரங்கள், பாடசாலை உபகரணங்கள் ஆகியவற்றை, அவிசாவளை நகரசபை உறுப்பினர் சுனில் செய்கிறார். பிரதேசபை உறுப்பினர் சந்திரகுமார் மற்றும் அவிசாவளை நகர, பிரதேச வலய அமைப்பாளர்கள் உதவிடுகிறார்கள். இது தொடர்பில் கொழும்பு மாவட்ட ஒருங்கிணைப்பு குழு தலைவர் மேஜர் பிரதீப் உதுகொட எம்பியிடமும் நான் அறிவித்துள்ளேன். பத்து (10) பேர்ச் காணி துண்டுகள் வழங்கள் தொடர்பில் அடுத்த வார கொழும்பு மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் உரையாடி முடிவெடுக்க தீர்மானித்துள்ளேன்.



# சமாதானத்தின் செய்தியை தலதா மாளிகையிலிருந்து நல்லூர் நோக்கி எடுத்தும் செல்லும் பயணம் — 100 இளைஞர் அமைப்புக்கள் ஏற்பாடு

சர்வமத தலைவர்களின் ஆதரவுடன் ஜனநாயக இளைஞர் காங்கிரஸ் உள்ளிட்ட 100 இளைஞர்கள் அமைப்புக்கள் கண்டி தலதா மாளிகை தொடக்கம் நல்லூர் கந்தசுவாமி கோவில் வரை உள்ள சர்வமத தலைவர்களுக்கு சமாதானத்தின் செய்தி மற்றும் கோரிக்கைகளை முன்வைத்தல் வேலைத்திட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

கண்டி தலதா மாளிகை மற்றும் கண்டி சிறீ நாட்ட தேவாலத்திற்கருகாமையில் இந்த செயற்திட்டத்தை ஆரம்பித்த இளைஞர்கள் இன்று பிற்பகல் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தை வந்தடைந்தனர்.

அன்பிற்கும் நட்புக்குமான வலையமைப்பின் ஏற்பாட்டில் இந்த வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மன்னாரில் நடன பயிற்சி கல்லூரி அங்குரார்ப்பணம்



- மன்னார் நிருபர்

Dazzling Diamonds

மன்னார் டாஸ்லிங் டைமன் நடன பயிற்சி கல்லூரியின் இரண்டாவது நடன பயிற்சி கல்லூரி மன்னார் நகர் பகுதியில் வைபவரீதியாக அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

மன்னார் நகர் பகுதியில் உள்ள இளைஞர் யுவதிகளின் நடன திறமைகளை மெருகூட்டும் விதமாகவும் சிறுவர்களுக்கு நடன பயிற்சியை வழங்கும் முகமாக குறித்த நடன பயிற்சி கல்லூரி மன்னார் நகர் பகுதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

டாஸ்லிங் டைமன் நடன பயிற்சி கல்லூரியின் நிறுவனர் அர்ஜுன் லெம்பேட் தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் சட்டத்தரணி செல்வராஜ் டினேசன், ஓய்வு பெற்ற அதிபர் ஸ்ரான்லி டிமேல், ஒஸ்ரியா நிறுவன மன்னார் கிளையின் முகாமையாளர், தொழில் அதிபர் தூி மற்றும் பலர் கலந்து கொண்டனர்



குறித்த நிகழ்வில் டைமன் டான்ஸின் பயிற்சி கல்லூரியினால் பயிற்சி பெற்ற மாணவ மாணவிகளின் பல்வேறு நடன நிகழ்வுகள் இடம்பெற்றதுடன் குறித்த கல்லூரியினால் பயிற்றுவிக்கப்பட்ட மாணவர்கள் கடந்த மாதம் இந்திய நடன கலைஞர்களின் நடுவத்துவத்தில் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற நடன நிகழ்வில் மன்னாரை பிரதி நிதித்துவப்படுத்தி கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.




இலங்கை செய்திகள்
Sri Lanka News

# யாழ்ப்பாணத்தில் போதைவஸ்து பாவனை அதிகரிக்கும் போது எயிட்ஸ் தொற்றாளரின் எண்ணிக்கையும் அதிகரிக்கலாம்

## வடபிராந்திய பாலியல் நோய்தடுப்பு சிகிச்சை நிலையவைத்திய நிபுணர் வைத்தியர் ஏ.ரொகான்

உலக எய்ட்ஸ் தினத்தை முன்னிட்டு சிகிச்சை பிரிவில் நடாத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போது மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ்ப்பாண மாவட்டத்தில் நாளத்தின் ஊடாக போதை வஸ்து ஏற்றும் பாவனை அதிகரித்து காணப்படுகின்றது.

இப்பொழுது நாளத்தின் ஊடாக போதைவஸ்து பாவனை ஏற்றுவோரின் எண்ணிக்கை அண்மைய நாட்களில் அதிகரித்துக்கொண்டு வருகின்றது. ஏனெனில் இந்த வருடம் எயிட்ஸ் நோய் தொற்றுக்கு இலக்காகி இனங் காணப்பட்டவர்கள் 30 வயதுக்குட்பட்ட இளைஞர்களாக காணப்படுகிறார்கள்.

எனவே இந்த நாளத்தின் ஊடாக போதை வஸ்து பாவனையாளர் எண்ணிக்கை அதிகரிக்கும் போது எயிட்ஸ் தொற்றாளரின் எண்ணிக்கை அதிகரிக்கும் சாத்தியம் காணப்படுகிறது.

சமூகத்தை வலுப்படுத்துவோம் எய்ட்ஸ் நோயை தடுப்போம் எனும் தொனிப் பொருளில் இம்முறை உலக எயிட்ஸ் தினமானது உலகளாவிய ரீதியில் கொண்டாடப்படுகின்றது.

உலக நிலவரப்படி 2022 ம் ஆண்டுவரை உலகத்தில் நாலு கோடி மக்கள் எயிட்ஸ் நோயினால் பாதிப்படைந்துள்ளார்கள். இந்த எயிட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்டோர் கிட்டத்தட்ட 5 மில்லியன் பேர் சிறுவர்களாக காணப்படுகின்றார்கள். ஒவ்வொரு வருடமும் 1.5 மில்லியன் புதிய நோய்த்தொற்றுக்கு உள்ளாகி கண்டுபிடிக்கப்படுகின்றார்கள்.

இலங்கையில் தற்போது வரை 5500 பேர் பாதிக்கப்பட்டுள்ளார்கள் அதிலே வடக்கு மாகாணத்தை எடுத்துக் கொண்டால் 90 பேர் இன்றுவரைக்கும் எச்ஐவி தோற்றுள்ளவர்களாக இனங்காணப்பட்டுள்ளார்கள்.

யாழ்ப்பாணத்தை பொறுத்தவரை கிட்டத்தட்ட 65 பேர்எயிட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டு அடையாளப்படுத்தப்பட்டுள்ளனர்.

ஒவ்வொரு ஆண்டும் எயிட்ஸ் தொற்றால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை சராசரியாக கூடிக் கொண்டு போகின்றது கடந்த வருடம் 3 பேர் புதிதாக இனம் காணப்பட்டார்கள்.

இந்த ஆண்டு நான்கு பேர் அடையாளம் காணப்பட்டு இருக்கிறார்கள் அவர்களுக்குரிய சிகிச்சைகள் யாழ்ப்பாணபோதனா வைத்தியசாலையில் மேற்கொள்ளப்படுகின்றது. குறிப்பாக இளவயதினரே எயிட்ஸ் நோய்த் தொற்றுக்குள்ளாகி இனங்காணப்படுகின்றார்கள். அதேபோல தொற்றால் இனம் காணப்படுபவர்களுக்கு உரிய முறையில் சிகிச்சைகள் அளிக்கப்படுகின்றது.

அதேபோல நோய்த்தொற்றுக்குள்ளாவோரின் தகவல்கள் மிகவும் ரகசியமாக பேணப்படுகின்றது,

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் ஹோட்டல்ம் வர்த்தக நிலையங்களில் கடமை ஆற்றுவதற்கு இந்த ரத்தப் பரிசோதனையை மேற்கொண்டு வருகின்றோம் எதிர்வரும் காலத்திலும் அபாயமான இடங்கள் என கருதப்படும் இடங்களிலும் இந்த இரத்த பரிசோதனை மேற்கொள்ளவுள்ளோம்,

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் போதை வஸ்து பாவனை அதிகரித்து காணப்படுகின்றது. இப்பொழுது நாளத்தின் ஊடாக போதைவஸ்து பாவனை அதிகரித்துக்கொண்டு வருகின்றது.

ஏனெனில் இந்த வருடம் நோய் தொற்றுக்கு இலக்காகி இனங் காணப்பட்டவர்கள் 30 வயதுக்குட்பட்ட இளைஞர்களாக காணப்படுகிறார்கள். எனவே இந்த நாளத்தின் ஊடாக போதை வஸ்து பாவனையாளர் எண்ணிக்கை அதிகரிக்கும் போது எயிட்ஸ் தொற்றாளரின் எண்ணிக்கை அதிகரிக்கும் சாத்தியம் காணப்படுகிறது.

சாதாரண ஒரு ஸ்ரிஞ் மூலம் ஒரு ஊசியை பலர் பாவிப்பதனால் ஒருவருக்கு எயிட்ஸ் தொற்று இருந்தால் அது அங்குள்ள மற்றவருக்கும் தொற்றக்கக்கூடிய சாத்திய கூறுகள் அதிகமாக காணப்படுகின்றது.

எனவே நாளங்கள் மூலமாக போதை வஸ்து ஏற்றுபவர்கள் நிச்சயமாக எயிட்ஸ் பரிசோதனை மேற்கொள்வது சிறந்ததாக காணப்படுகின்றது என தெரிவித்துள்ளார்.

# வேம்படி மாணவர்களையும் பாடசாலை சமுகத்தையும் பாராட்டிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையின் நூற்றுக்கு மேற்பட்ட மாணவர்கள் க.பொ.த சாதாரணதர பரீட்சையில் 9 ஏ சித்திகளைப்பெற்றுள்ளனர்.

பரீட்சை முடிவுகளை பார்வையிட்ட அமைச்சர் கௌரவ டக்ளஸ் தேவானந்தா, அதிபர் இராஜினி முத்துக்குமாரை யும் மாணவிகளையும் பாராட்டுவதற்காக கல்லூரிக்கு நேற்றையதினம் விஜயம் செய்தார்.



# வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியின் சிறந்த பெறுபேறுகள்


J/VADDU HINDU COLLEGE
BEST RESULTS - G.C.E(O/L) 2023

| | |
|---|---|
| NAVARATHINAM PIRUTHIKSHA | 9A |
| ILANKEERAN ISAIYAMUTHAN | 8AB |
| THEVAPALAN AINKARAN | 7ABC |
| SATKUNARASA DILAKSHANA | 7ACS |
| MUTHTHULINGAM KARSHIKAN | 6A2BS |
| SIVASRINPARAJAKKURUKKAL INPAGOWRISAIYA | 5A2B2C |
| ANTANJOSAPPOORASA PERELILAN | 5A2B2C |
| SITHAMPARESWARAN SINMAGI | 5AB3C |
| SELVAKKUMAR ARCHANA | 5AC3S |
| YOKENTHIRAN NARMATHA | 4A4BS |

வெளியாகிய 2022ஆம் ஆண்டுக்கான க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியின் மாணவர்கள் பெற்ற சிறந்த பெறுபேறுகள் வருமாறு,

நவரத்தினம் பிருதிக்ஸா 9ஏ, இளங்கீரன் இசையமுதன் 8ஏ பி, தேவபாலன் ஐங்கரன் 8ஏ பி சி, சற்குணராசா டிலக்சனா 7ஏ சி எஸ், முத்துலிங்கம் ஹர்சிகன் 6ஏ 2 பி எஸ், சிவசிறி பரண்யக் குருக்கள் இன்பகௌரிசையா 5ஏ 2பி 2சி, அன்ரன் ஜோசப்பூராசா பெரெலிலன் 5ஏ 2பி 2சி, சிதம்பரேஷ்வரன் சின்மயி 5ஏ பி 3சி, செல்வகுமார் அர்ச்சனா 5ஏ சி 3எஸ், யோகேந்திரன் நர்மதா 4ஏ 4பி எஸ்.

THANA INSURANCE Inc.

Thana Insurance Inc

NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 10 K | 22 | 20 | 22 | 20 | 25 | 23 | 34 | 29 | 45 | 37 |
| 25 K | 37 | 34 | 47 | 40 | 54 | 49 | 76 | 64 | 106 | 84 |
| 50 K | 69 | 62 | 89 | 75 | 104 | 92 | 147 | 123 | 206 | 162 |
| 100 K | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 241 | 406 | 318 |
| 200 K | 260 | 231 | 337 | 282 | 398 | 353 | 572 | 476 | 807 | 631 |

20 YEARS TERM - NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | 32 | 26 | 50 | 40 | 86 | 60 | 140 | 94 | 265 | 171 |
| 200 K | 60 | 46 | 103 | 74 | 166 | 115 | 275 | 182 | 468 | 321 |

20 வருடம் மட்டுமே பணம் செலுத்தும் காப்புறுதி

மருத்துவ பரிசோதனை இல்லாத காப்புறுதி

சாரதி அனுமதிப்பத்திரம் பறிமுதல் செய்யப்பட்டு காப்புறுதி செய்யமுடியாமல் இருப்பவர்களிற்கும்

உங்கள் காப்புறுதி முகவர் தற்போது சேவையில் இல்லாவிடின் உங்கள் திட்டத்தை இரத்து செய்யாமல் அதில் இலவசமாக மாற்றங்களை செய்ய என்னை அழையுங்கள்



Call us Today

Cell : 416-728-5772
Office : 416-519-3896

Thana Manickavasagar
Insurance Broker
thana7@gmail.com
www.thana.ca
fax : 647-547-8147
80 Nashdene Road ,#D218,
Scarborough,ON,M1V 5E4

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# ஏ9 வீதி மறிப்புப் போராட்டத்தில் நாம் ஈடுபட மாட்டோம் — பொறியியல் பீட மாணவர்கள் அறிக்கை!


யாழ்ப்பாண பல்கலைக்கழக கிளிநொச்சி வளாக மாணவர்களால் ஏ9 வீதியை மறித்து எதிர்வரும் 7 ஆம் திகதி வியாழக்கிழமை போராட்டம் ஒன்று நடாத்தப்படவுள்ளதாக வெளிவந்த செய்திகளுக்கும், யாழ்ப்பாண பல்கலைக்கழகப் பொறியியல் பீட மாணவர்களுக்கும் எந்த விதமான தொடர்பும் இல்லை என்றும், கிளிநொச்சி வளாக சிங்கள - தமிழ் மாணவர்கள் என்ற பெயரில் அனுப்பப்பட்ட மின்னஞ்சல்கள் அனைத்தும் பொய்யானவை என்றும் யாழ். பல்கலைக்கழகப் பொறியியல் பீட மாணவர் ஒன்றியத்தினர் அறிவித்துள்ளனர்.

யாழ்ப்பாண பல்கலைக்கழக கிளிநொச்சி வளாகத்தில் கடந்த மாதம் 27ஆம் திகதி தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பில் இருந்து உயிரிழந்தவர்களை நினைவு கூரும் வகையில் மாவீரர் நாள் நிகழ்வுகள் நடைபெற்றமை தொடர்பாக, பொறியியல் பீட சிங்கள - தமிழ் மாணவர்கள் என்ற பெயரில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவர் உட்படப் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் பலருக்கு அநாமதேய மின்னஞ்சல்கள் அனுப்பப்பட்டிருந்தன. அதன் தொடச்சியாக 7 ஆம் திகதி வியாழக்கிழமை கிளிநொச்சி, அறிவியல் நகரில் ஏ9 வீதியை மறித்துப் போராட்டமும், பேரணியும் நடாத்தப்படவுள்ளதாகவும், அதனைத் தவிர்ப்பதற்காக கிளிநொச்சி வளாகத்தில் அமைந்துள்ள பீடங்களின் பீடாதிபதிகள் பதவி விலக்கப்படுவதோடு, நிகழ்வுகளில் ஈடுபட்ட மாணவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்றும் கிளிநொச்சி வளாக மாணவர் ஒன்றியம் என்ற பெயரில் பேராட்ட முன்னறிவித்தல் விடுக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பிலேயே, யாழ்ப்பாண பல்கலைக்கழகப் பொறியியல் பீட மாணவர் ஒன்றியம் செவ்வாய்க்கிழமை நண்பகல் தமது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவருக்குக் கடிதமொன்றினை அனுப்பி வைத்துள்ளனர்.

அந்தக் கடிதத்தில், "யாழ். பல்கலைக் கழகப் பொறியியல் பீட மாணவர் ஒன்றியத்தினராகிய நாங்கள் JaffnaEngineering2023@protonmail.com என்ற பெயரில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவர் உட்படப் பலருக்கு முறைப்பாட்டுக் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளதாக அறிகின்றோம். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பொறியியல் பீட மாணவர்களுக்கென ஒரேயொரு மாணவர் அமைப்பாக எமது அமைப்பே இயங்கி வருகிறது. எமது பீட மாணவர்களுக்கென வேறெந்த அமைப்பும் கிடையாது.

அத்துடன் எதிர்வரும் 7 திகதி மேற்கொள்ளப்படவுள்ள பேராட்டங்களுக்கும் எமக்கும் எவ்விதமான தொடர்புகளும் கிடையாது என்பதோடு, எமது மாணவர்கள் எந்தப் போராட்டத்திலும் கலந்து கொள்ள மாட்டார்கள்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.


Engineering Students' Union
University of Jaffna - Sri Lanka

Statement regarding the Rally.

We, the students' union, Faculty of Engineering is writing to make the clarification regarding the "Rally".

Thank you

President,
Engineering students' union,
University of Jaffna.

Secretary,
Engineering students' union,
University of Jaffna.

D.S.D.Kumara
President
Engineering Students' Union
University of Jaffna

# உழவு இயந்திர கலப்பையில் சிக்குண்டு 3 1/2 வயது குழந்தை பரிதாபமாக உயரிழப்பு!

உழவு இயந்திரத்தின் கலப்பையில் சிக்குண்டு 3 1/2 வயது நிரம்பிய குழந்தை ஒன்று உயிரிழந்த சம்பவம் அனைவரையும் துயரத்தில் ஆழ்த்தியுள்ளது.

நெடுங்கேணி பகுதியை சேர்ந்த சிவயோகநாதன் விந்துயன் என்ற குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், கடந்த 23ஆம் திகதி குறித்த குழந்தையின் தந்தை உழவு இயந்திரத்தின் சுழலக் கூடிய கலப்பையை வீட்டில் வைத்து இயக்கிக் கொண்டு இருந்தவேளை குழந்தை தடி ஒன்றினை கலப்பையினுள் வைத்துள்ளது. இந்நிலையில் தடி கலப்பையினுள் இழுக்கப்பட்டவேளை குழந்தையும் சேர்ந்து இழுபட்டதனால் கலப்பையில் சிக்குண்டு படுகாயமடைந்தது.

இவ்வாறு படுகாயமடைந்த குழந்தை ஒட்டுசுட்டான் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் மாஞ்சோலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, இறுதியாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் 4ஆம் திகதி சிகிச்சை பலனின்றி உயிரிழந்தது.

குழந்தையின் சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

# இலங்கைக்கான ஐ.நா வதிவிட ஒருங்கிணைப்பாளர் — மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட் சந்திப்பு!



6-12-2023

பலஸ்தீன மக்களின் அவல நிலை மற்றும் இலங்கையில் நீண்டகால இடம்பெயர்ந்தோரின் மீள்குடியேற்றம் தொடர்பில், ஐக்கிய நாடுகள் சபை தீவிரமாக கவனஞ்செலுத்த வேண்டும் என அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் வலியுறுத்தியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிட ஒருங்கிணைப்பாளரை 05-12-2023 அன்று ஐ.நா தூதரகத்தில் சந்தித்துக் கலந்துரையாடிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த அவர், "ஐ.நா.வின் இலங்கைக்கான வதிவிட ஒருங்கிணைப்பாளரை சந்தித்ததில் மகிழ்ச்சியடைகின்றேன். பலஸ்தீனின் அவல நிலை உட்பட பல்வேறு விடயங்கள் குறித்து இங்கு கலந்துரையாடினோம். பலஸ்தீன் - இஸ்ரேல் மோதலை உடன் நிறுத்தும் வகையில், ஐ.நா. நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனக் கூறி, 159 பாராளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திட்டு அனுப்பிய மகஜர் உரியவர்களிடம் சென்றடைந்துள்ளதாக வதிவிட ஒருங்கிணைப்பாளர் உறுதிப்படுத்தினார்.

அத்துடன், நீண்டகால இடம்பெயர்ந்தோரின் மீள்குடியேற்றத்துக்கு எதிர்காலத்தில் ஐ.நா.வின் ஆதரவு குறித்தும் சமூகங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் வெறுப்புப் பேச்சுக்கள் பற்றியும் இருவரும் கலந்துரையாடினோம்" என்று கூறினார்.

# அரச தமிழ் பாடசாலைகளில் கணித, விஞ்ஞான, ஆங்கில, தொழில்நுட்ப ஆசிரியர்கள் போதுமானளவு இருக்கிறார்களா?

## அதிபர்கள் பதில் சொல்லட்டும் என்கிறார் மனோ கணேசன் எம்பி



தமிழ் பாடசாலைகளில் கணித, விஞ்ஞான, ஆங்கில, தொழில்நுட்ப ஆசிரியர்கள் நாட்டில் போதுமானளவு இருக்கிறார்களா? அல்லது இல்லையா? இது இன்று தமிழ் பாடசாலைகள் எதிர்நோக்கும் பிரதான பிரச்சினையா? அல்லது இல்லையா?

பாராளுமன்றத்தில், தமிழ் பாடசாலைகளில், கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், தொழில்நுட்பம் ஆகிய பாடங்களுக்கான ஆசிரியர் பற்றாக்குறை கடுமையாக நிலவுகிறது என்று சொன்னேன். மலையக பல்கலைகழகம் கட்டாயம் வேண்டும். ஆனால், அதற்கு முன் நமது மாணவர் பல்கலை செல்வதற்கான "கல்வி பாதையை" வெட்டுவோம் என்றும் சொன்னேன். அதுதான் மேலே சொன்ன பாட விதானங்களுக்கான விசேட தமிழ் மொழிமூல ஆசிரியர் பயிற்சி கலாசாலை என்றும் சொன்னேன்.

எனது கருத்துகள் சரியா? பிழையா? என தமிழ் பாடசாலை அதிபர்கள் முதலில் பதில் சொல்லட்டும். அதையடுத்து, அரசாங்க பாடசாலைகளுக்கு தம் பிள்ளைகளை நம்பி அனுப்பும் அப்பாவி தாய்மார், தந்தைமார் பதில் கூற வேண்டும். கல்வியிலாளர்கள், சமூக உணர்வாளர்கள் பதில் கூறட்டும். எனது நேரடி 0777312770 வாட்சப் எண்ணுக்கு அல்லது எனது நேரடி leader@dpflanka.org என்ற மின்னஞ்சலுக்கு பதில்களை அனுப்பட்டும்.

இல்லாவிட்டால், நான் சொல்வதை எல்லாமே எதிர்த்து கட்சி அரசியல் செய்கின்ற, கல்வியை பற்றி எந்தவித தூரப்பார்வையும் இல்லாத அரசியல்வாதிகள் கையில், தமிழ் பிள்ளைகளின் கல்வியை ஒப்படைத்து விட்டு, தந்தை செல்வா சொன்னது போல், "கடவுள் காப்பாற்றுவார்" என ஒதுங்க வேண்டும் என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவரும், கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் கூறியுள்ளார்.

மத்திய கொழும்பு பாடசாலை பெற்றோர்-பழைய மாணவர் மத்தியில் உரையாடிய மனோ கணேசன் எம்பி மேலும் கூறியதாவது,

மலையகம் என்றால், "மலைகளை" மட்டும் தேடி ஓடாதீர்கள். கொழும்பின் அரசாங்க பாடசாலைகளில் படிக்கும் மாணவர்கள் பெரும்பாலும், இங்கு வந்து தொழில் நிமித்தம் குடியேறியுள்ள பாமர மலையக மக்களின் பிள்ளைகள்தான் என்றும் கூறினேன். அதேபோல் கிளிநொச்சி, வன்னி, மட்டக்களப்பு ஆகிய பிரதேசங்களில் இருந்தும் தொழில் நிமித்தம் குடியேறியுள்ள பிள்ளைகள்தான் கொழும்பின் அரசாங்க பாடசாலைகளில் மாணவர்கள்.



எனது நோக்கம், இதுதான். தமிழ் மொழிமூல, இரசாயனம், பௌதிகம், உயிரியல், புவியல், அரசறிவியல், கணக்கீடு, வணிகவியல், இணைந்த கணிதம் ஆகிய பாடங்களுக்கான ஆசிரியர்களை விசேட பயிற்சி அளிக்கும் ஆசிரிய பயிற்ச்சி கலாசாலை அமைய வேண்டும். அவர்களை, கொழும்பு, களுத்துறை, கேகாலை, இரத்தினபுரி, கண்டி, மாத்தளை, பதுளை, கம்பஹா, மொனராகலை, குருநாகலை, புத்தளம், காலி, மாத்தறை ஆகிய மாவட்ட தமிழ் பாடசாலைகளில் ஆசிரியர்களாக நியமிக்க வேண்டும் என்பதாகும். அவசியப்படும் வன்னி, கிழக்கு மாகாண பாடசாலைகளிலும் நியமிக்க வேண்டும்.

நியமிக்கப்படுபவர்கள் குறைந்த பட்சம் பத்து வருடங்கள் அதே பாடசாலையில் பணி செய்ய வேண்டும். தவிர்க்கமுடியாத இடமாற்றம் வேண்டுமென்றாலும்கூட, அதே பாடத்துக்கான மாற்று ஆசிரியர் கிடைத்த பிறகே இடமாறி செல்ல வேண்டும்.

கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்தவை நோக்கி நாடாளுமன்றத்தில், தயவு செய்து பாரத பிரதமர் மோடி, மலையக மக்கள் நல்வாழ்வுக்காக தருவதாக உறுதியளித்துள்ள, இலங்கை ரூபா.300 கோடிக்கும் குறையாத நிதியை "தமிழ் மொழிமூல" ஆசிரியர் பயிற்சிக்கான விசேட ஆசிரியர் பயிற்சி கலாசாலை அமைக்க பயன்படுத்துங்கள் என்றும் சொன்னேன். மலையக பல்கலைக்கழகம் அதையடுத்து வரட்டும். வேண்டாம் என்று சொல்லவில்லை. அதற்கு இப்போது அவசரப்பட வேண்டாம் என்றுதான் சொன்னேன்.

இந்த வருடம், 2023 ஜனவரி மாதமே இதுபற்றி நான் இலங்கையில் உள்ள இந்திய தூதுவர் கோபால் பாகலே உடன் உரையாடியுள்ளேன். எமக்கான விசேட ஆசிரியர் பயிற்சி கலாசாலையும், எமது பெண்களுக்கான விசேட தாதியர் பயிற்சி கல்லூரியும் அமைத்து கொடுங்கள் என எழுத்து மூலம் கோரிக்கை விடுத்தேன். அதற்கான நிதியை பாரத பிரதமர் நரேந்திர மோடியிடம் கேட்டு பெற்று தாருங்கள் எனக்கூறினேன்.

இலங்கை அரசாங்கத்தின் திட்டங்கள் மலையக மக்கள் தொடர்பில் நடக்கட்டும். ஆனால், பாரத பிரதமர் நரேந்திர மோடி வழங்கும் நிதியை, இலங்கையில் உள்ள இந்திய தூதரகமும், இலங்கை அரசின் கல்வி அமைச்சும் இணைந்து பயன்படுத்த வேண்டும். இலங்கையில் உள்ள இந்திய தூதரகத்தில் உள்ள இலங்கை தோட்ட தொழிலாளர் கல்வி அறக்கட்டளையை, மீண்டும் புதுபித்து, அதன் நோக்கங்களை விரிவிபடுதி இதை செய்து தாருங்கள் என நேற்றுக்கூட நான் பாராளுமன்றத்தில் கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்தவை நோக்கி சிங்கள மொழியிலும், ஆங்கில மொழியிலும் கூறினேன்.

நான் கூறிய விடயங்களை புரிந்துக்கொள்ள முடியாத தமிழ் எம்பிக்களை பற்றி எனக்கு அக்கறை இல்லை. ஆனால், அரசாங்க பாடசாலைகளுக்கு தம் பிள்ளைகளை நம்பி அனுப்பும் அப்பாவி பெற்றோருக்கு புரியும் என நினைக்கிறேன். தமிழ் பாடசாலை அதிபர்களுக்கும் புரியும் என நம்புகிறேன்.

# British MPs Debate on the Human Rights Situation in Sri Lanka

Siva Parameswaran

The highly controversial and draconian Law-Prevention of Terrorism Act (PTA) has come in for international focus and condemnation once again. From the UN Human Rights Council to a US Congressman and British MPs along with International organizations and groups, Human Rights activists have called on the island nation to repeal the law and respect its Human Rights obligations.

Deeply concerned British MPs debated the issue about Sri Lankan Tamils and the Human Rights situation in the country on Tuesday last (5) at the Westminster Hall.

This debate came in the backdrop of continuing arrests by the Sri Lankan state security agencies in particular the Counter Terrorism Investigation Department (CTID) dubbed the "Terror Police" in connection with events related to the "Maaveerar Naal" this year, when the Tamils mourn their war-dead every year on the 27th of November.

The event was held on Tuesday the 5th of December 2023, from 2.30-4.00 pm. MP's cutting across parties participated in the debate.

The debate was led by Martyn Day MP from the Scottish National Party.

"Where are the surrendees from 18 May 2009 are if OMP could only find 16 people alive?" he questioned.

Jeremy Corbyn MP and former leader of the Labour Party recalled his question to the late President J R Jayawardane in 1984 about the situation of Human Rights and its abuse in Sri Lanka.

"I have met many Sri Lankan families who have people missing from that period on. Unless they get closure and understanding of what has happened to them, the horror for individual families will ust go on and on" he said.

Carshalton and Wallington MP Elliot Colburn from the Conservatives castigated the Sri Lankan ambassador in London sending a briefing in advance of the debate. He said what happened in Mullivaikkal as a 'genocide'.

"The Sri Lankan Government's continued denial of war crimes, crimes against humanity and genocide necessitates international intervention. Militiraisation remins pervasive with 16 out of the 20 military divisions on the island are in the north and east, otherwise known as Tamil areas. One thing we should push for in the IMF bail-out is a reduction in military spending. That must be a condition of that money".

A detailed briefing note was circulated to the MPs. Allegations of war crimes against the oversized army dominated by the majority Sinhalese people find a mention in the background paper.

"Sri Lanka's relationship with the rest of the world has been strongly shaped since then by allegations that the army committed war crimes and crimes against humanity during the final phase of the civil war. A UN Panel of Experts reported in April 2011 that there were "credible allegations" of those crimes by both government and Tamil Tiger forces".

The Sri Lankan Government in power in the final phase of the war denied many of the accusations of crimes made against the military and civilian Government at the time, and argued Tamil forces had used civilians as "human shields" says the note circulated to the British Members of Parliament.

Asserting Sri Lanka is one of their priority countries on Human Rights issues, it reminds the MPs of its annual report this year.

"Sri Lanka is one of the UK's 32 'human rights priority countries' as identified by the Foreign, Commonwealth and Development Office (FCDO). The FCDO's annual human rights and democracy report published in July 2023, looking back at 2022, highlights the treatment of Tamils and minority religious groups in Sri Lanka as a human rights concern".

In its report for the current year, the FCDO has detailed the continued state oppression on various fronts and how even fundamental religious rights are being denied to minorities.

"Minority communities faced continued marginalization by state authorities. State-supported land appropriation, so-called 'land grabs', sparked concerns over their impact on demographics in the north and east and their impact on the freedom of belief of non-Buddhist denominations. Security forces continued to disrupt Tamil commemorative events for victims of Sri Lanka's armed conflict, and arbitrarily accused Tamils of links to terrorist organizations".

In their 'Debate pack' compiled by 'Subject specialist' John Curtis and circulated by the House of Commons Library, the woes of the families of missing persons and the President's planned meeting with Tamil political parties.

"Activists and families of the disappeared in the north-east faced surveillance, harassment, and intimidation by security forces. President Wickremesinghe committed to pursue a political solution with Tamil parties in December. Eight proscribed Tamil Diaspora organizations were also delisted, although some Muslim welfare organizations and individuals, including poet, Ahnaf Jazeem remained listed".

With hyperlinks to various news reports as well as reports from international Human Rights bodies including the Office of the Commissioner for Human Rights of the UN, the background paper speaks about the draconian nature of the PTA and its brutal misuse.

"Amnesty International in its 2023 assessment of human rights in Sri Lanka, states that despite amendments to the Prevention of Terrorism Act (PTA), Muslim and Tamil minorities remained disproportionately affected by the use of the PTA".

The US State Department's report on human rights in Sri Lanka published in 2023, and looking at the events of 2022, describing how Tamils in the country report systemic discrimination also forms part of the 'Debate pack'

That report from the US State Department describes how the military monitors Tamil journalists, requesting "copies of photographs, lists of attendees at events, and names of sources for articles", and intimidated to "refrain from reporting on sensitive events, such as Tamil war commemorations or land occupation protests, as well as on posting anything related to former LTTE leaders", stating that they "feared repercussions if they did not cooperate".

"Both local and Indian-origin Tamils maintained that they suffered longstanding, systematic discrimination in university education, government employment, housing, health services, language laws, and procedures for naturalization of noncitizens", the US report further adds.

US Congressman Raja Krishnamoorthi, representing the 8th Congressional District of Illinois tweeted on Saturday (1) about the misuse of PTA in Sri Lanka.

"I am deeply concerned by the recent arrest of Tamils in the North-East Sri Lanka during their peaceful commemorations. These arrests under the PTA are the latest in a historical pattern of Sri Lankan Police attempting to prevent Tamil memorialization".

His comments were echoed by the US Ambassador to Sri Lanka Julie Chung. "It's vital to ensure freedom of expression and humane treatment of those in custody" she tweeted.

Ambassadors of Canada and Switzerland too have called upon the government to repeal the PTA and ensure Human Rights are protected.

MORTGAGE

⇒ நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)

⇒ லைன் ஒப் கிரெடிட்(HELOC)

⇒ ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்

⇒ Private Mortgage (No Income Verification)

⇒ 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)

⇒ பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்

⇒ பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட

⇒ எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC
www.mortgageclinicanada.com

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.
416-613-2788 / 416-816-9011

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP
Team Leader/Mortgage & Real Estate Broker

Cell : 416-624-4843

எமது முகவரி
1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)



RIGHT AT HOME REALTY INC.
Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3

MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Lic # 10530
Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# உலங்கு வானூர்தி மூலம் நெடுந்தீவுக்கு விஜயம் செய்த சுற்றுலாப் பயணிகள்

பு. கஜிந்தன்

உலங்கு வானூர்தியொன்றை வாடகைக்கு அமர்த்தி வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் 4-12-2023 அன்று நெடுந்தீவுக்கு விஜயம் செய்து பார்வையிட்டு திரும்பியுள்ளனர்.

நெடுந்தீவில் உள்ள தனியார் சுற்றுலாத்துறை நிறுவனமொன்றின் ஏற்பாட்டிலேயே குறித்த சுற்றுலா பயணிகள் வருகை தந்துள்ளனர்.

இதேபோன்று தொடர்ச்சியாக சுற்றுலா பயணிகள் உலங்கு வானூர்தியில் வருகைதரவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.





நெடுந்தீவின் சுற்றுலாத் துறையின் இது முதன்மையாக ஒரு சிறந்த முன்னேற்ற படிக்கல்லாக இவ் வருகை அமைந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

# யாழ்ப்பாண மாவட்ட கூட்டுறவாளர் வீரசிங்கம் அவர்களுடைய 59ஆவது நினைவு தின நிகழ்வு



யாழ்ப்பாண மாவட்ட கூட்டுறவாளர் சபையின் ஏற்பாட்டில், கூட்டுறவுப் பெரியார் வீரசிங்கம் அவர்களுடைய 59ஆவது நினைவு தின நிகழ்வு யாழ்ப்பாணம் வீரசிங்கமண்டவத்தில் யாழ் மாவட்ட கூட்டுறவுச்சபையின் உபதலைவர் க.மகாதேவன் தலைமையில் இடம்பெற்றது.

இவ்நிகழ்வில் பிரதம அதிதியாக யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் அ.சிவபாலசுந்தரன் கலந்து கொண்டதுடன் கூட்டுறவுப்பெரியார் வீரசிங்கம் அவர்களுடைய திருவுருவ படத்திற்கான மலர்மாலை அணிவித்ததுடன் நினைவேந்தலினை செலுத்தியதுடன் நினைப்பேருரையும் நிகழ்த்தினார்.

அதனை தொடர்ந்து யாழ் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கி. சந்திரசேகரன், யாழ்ப்பாண பல்கலைக்கழக புவியியல்த்துறை விரிவுரையாளர் க. கபிலன், யாழ்ப்பாண மாவட்ட கால்நடை கூட்டுறவு சங்க சமாச தலைவர் கரிஸ்ரர் ஸரீபன் ஆகியோர்களும் கலந்துகொண்டு நினைவுப் பேருரையும், நினைவேந்தலினையும் செலுத்தினர்கள்.

இதனை தொடர்ந்து கடந்த மூன்று வருடங்களில் 440 கூட்டுறவுச்சங்கள் ஊடாக சிறப்பாக செயலாற்றிய 59 கூட்டுறவாளர்கள் இதன் போது கௌரவிக்கப்பட்டனர். மேலும் யாழ்ப்பாண மாவட்ட கூட்டுறவாளர் சபையினால் நடாத்தப்பட்ட மனைப்பொருளியல் பயிற்சிநெறியினை பூர்த்தி 70 மகளிர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

இதில் பனை, தென்னை, சிக்கனகூட்டுறவு, தனியார் கூட்டுறவாளர்கள் சங்க, சமாசம், ஸஉள்ளிட்ட தலைவர்கள், செயலாளர்கள் பயனாளிகள் பலரும் இதில் கலந்துகொண்டனர்.







# ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலைக்கு வன்னி ஹோப் நிறுவனத்தினால் ஸ்பைரோமீட்டர் கையளிப்பு





06.12.2023 புதன்கிழமை அன்று வைத்தியர் வாணி பிறேம்ஜித் (USA) மற்றும் வைத்தியர் மாலதி வரன் ஆகியோரின் நிதிப்பங்களிப்பு உதவியுடன், தொண்டு நிறுவனமாகிய வன்னி ஹோப் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலைக்கு சுமார் 5 இலட்சம் பெறுமதியான ஸ்பைரோமீட்டர் வழங்கி வைக்கப்பட்டது.

மேற்கூறிய வைத்தியசாலை நிர்வாகத்தினரின் வேண்டுகோளுக்கு இணங்கவும், தீவக மக்களின் சுகாதார நலன் கருதியும், தற்போதைய நாட்டு நிலைமையை கருத்திற்கொண்டும் வன்னி ஹோப் நிறுவன உத்தியோகத்தர்களால் ஸ்பைரோமீட்டர் கருவியானது உத்தியோக பூர்வமாக ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலை நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்டது.

# இலங்கையில் உள்ள இந்து ஆலயங்களின் வரலாற்றில் முதன்முறையாக குறுந்தகவல் மூலமாக ஆலய விடயங்களை அறிந்துகொள்ளக் கூடிய சேவை!



இலங்கையில் உள்ள இந்து ஆலயங்களின் வரலாற்றில் முதன்முறையாக குறுந்தகவல் மூலமாக ஆலய விடயங்களை அறிந்துகொள்ளக் கூடிய சேவை முறையானது தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தினால் 06-12-2023 புதன்கிழமை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

தேவஸ்தானத்தின் தலைவர் ஆறு திருமுருகன் அவர்களினால் ஆரம்பிக்கப்பட்ட இச் சேவையின் மூலம் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தினால் ஆற்றப்பட்டு வரும் பல்வேறு சமூக நலத்திட்ட பணிகள், ஆலய விசேட உற்சவங்கள் மற்றும் நிகழ்வுகள் பற்றிய முழுமையான விபரங்களை எவ்வித கட்டண அறவீடுமின்றி இலவசமாக அறிந்து கொள்ள முடியும்.

குறித்த சேவையினை பெற்றுக் கொள்வதற்கு கீழ்வரும் முறை மூலம் இணைந்துகொள்ள முடியும்.

https://www.tellidurga.org என்ற தேவஸ்தானத்தின் இணையத்தள முகவரிக்கு சென்று தங்களுடைய தொலைபேசி இலக்கங்களை பதிவு செய்து கொள்ள முடியும்.

(தொலைபேசி இலக்கங்களை உறுதிப்படுத்தும் நோக்கில் OTP முறை (One-Time Passwords Authenticate System) பயன்படுத்தப்பட்டுள்ளது)

---

# "உண்மையான" உலகத்தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் செயலாளர் நாயகம் ஜேர்மனி வாழ் துரை கணேசலிங்கம் 2024 ஜனவரியில் இலங்கை செல்கின்றார்

உலக செய்திகள்
World News

## இயக்கத்தின் யாழ்ப்பாணக் கிளையை மறுசீரமைக்கும் வகையில் கலந்துரையாடல்களையும் நடத்தவுள்ளார்



2024ம் ஆண்டு பிற்பகுதியில் அமெரிக்காவில் தனது 50வது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடவுள்ள உண்மையான உலகத்தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் செயலாளர் நாயகம் ஜேர்மனி வாழ் துரை கணேசலிங்கம் 2024 ஜனவரியில் இலங்கை செல்கின்றார். அவர் தனது பயணத்தின் போது இயக்கத்தின் யாழ்ப்பாணக் கிளையை மறுசீரமைக்கும் வகையில் கலந்துரையாடல்களையும் நடத்தவுள்ளார்.

சுமார் 25 வருடங்களுக்கு மேலாக உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் செயலாளர் நாயகமாக சிறப்புற பணியாற்றி உலகின் பல நாடுகளிலும் சிறப்பு மாநாடுகளை நடத்துவதற்கு ஒரு முக்கிய சக்தியாக விளங்கிய துரை கணேசலிங்கம். தனது யாழ்ப்பாண விஜயத்தின்போது உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கம் ஆரம்பிக்கப்பெற்ற யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் அதன் கிளைக்கு நூற்றுக்கணக்கான உறுப்பினர்களை இணைக்கும் வகையில் ஆலோசனைக் கூட்டங்களையும் நடத்தவுள்ளார்.

மேலும் கடந்த சில வருடங்களாக எமது உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் இலச்சினையை சட்ட விரோதமாக பாவித்து தமிழ்நாட்டிலும் மலேசியாவிலும் கூட்டங்களை நடத்தியும் மக்களை ஏமாற்றியும் செயற்பட்டு வரும் "போலியான" குழுவொன்று தொடர்பாகவும் தெளிவுபடுத்தும் முகமாக யாழ்ப்பாண பத்திரிகையாளர்களையும் வானொலிச் சேவைகளின் பிரதிநிதிகளையும் சந்தித்து உரையாடவுள்ளார் என்பதும் கவனிக்கத்தக்கது.

Email contact: imtc1974@yahoo.com

---

**ஊடகப் பிரிவு - உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கம்**
**தலைமையகம் - கனடா- 07-12-2023**

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# அரசியலமைப்பு பேரவையினுடைய அனுமதி இல்லாமல் போலீஸ் மா அதிபர் நியமிக்கப்பட முடியாது

## ஜனாதிபதி ஓட்டு மொத்தமாக அரசியலமைப்பை மீறி செயல்படுகிறார்

### *ஜனாதிபதி சட்டத்தரணி பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன்*




(01-12-2023)

அரசியலமைப்பு பேரவையினுடைய அனுமதி இல்லாமல் போலீஸ் மா அதிபர் நியமிக்கப்பட முடியாது. ஒரு பிரதி பொலிஸ்மா அதிபரை கூட நியமிக்க முடியாது. ஜனாதிபதி ஓட்டு மொத்தமாக அரசியலமைப்பை மீறி செயல்படுகிறார். அரசியல் அமைப்பை தெரிந்து கொண்டே மீறினால் ஜனாதிபதி பதவியில் இருந்து அவரை நீக்குவதற்கு அது போதுமான காரணமாக கூட இருக்கிறது என ஜனாதிபதி சட்டத்தரணி பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

மன்னாரில் 01-12-2023 வெள்ளிக்கிழமை (1) மாலை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கட்டுக்கரை குளத்தில் உள்ள பிரச்சினைகள் சம்பந்தமாகவும், அதனுடன் தொடர்பு பட்ட மேய்ச்சல் தரை பிரச்சினை தொடர்பாகவும் வெள்ளிக்கிழமை (1) காலை கட்டுக்கரை குளம் பகுதியில் ஒரு சந்திப்பு இடம் பெற்றது. அதில் சட்டபூர்வமான நடவடிக்கைகள் என்ன எடுக்கலாம் என்பது குறித்து அந்த விவசாய அமைப்புகளோடு நீண்ட ஒரு உரையாடல் நடத்தப்பட்டது.

வருகின்ற நாட்களில் சில சட்ட நடவடிக்கைகள் எடுப்பதாக தீர்மானித் திருக்கிறோம். அத்தோடு மன்னார் மாவட்டத்திற்கு வந்துள்ளமையினால் கட்சி உறுப்பினர் களோடும் இன்றைய அரசியல் சூழ்நிலைகள் சம்பந்தமாக ஒரு சிறு கலந்துரையாடல் ஒன்று நடைபெற்று இருக்கிறது.

*2024 ஆம் ஆண்டு இலங்கையில் பல தேர்தல்கள் இடம் பெறலாம்.*

எங்களுக்கு தெரிந்த படி அடுத்த வருடம் நாட்டிலே தேர்தல்கள் பல நடை பெறுவதற்கான வாய்ப்புகள் உண்டு.

ஜனாதிபதி எந்த தேர்தலை நடைபெறாமல் தடுத்து வைத்திருந்தாலும் கூட 2024 செப்டம்பர், அக்டோபர் மாதம் அளவிலே ஜனாதிபதியினுடைய பதவி காலம் முடிவடைகிறது. அது முடிவடைவதற்கு முன் செப்டம்பர், அக்டோபர் மாதம் அளவிலே ஜனாதிபதி தேர்தல் ஒன்று நடத்தியே ஆக வேண்டும். ஆகையினாலே அதற்கு முன்னதாக பாராளுமன்றம் கலைக்கப்படுமா? அல்லது அதற்குப் பிறகு பாராளுமன்றத்திற்கு இன்னும் ஒரு வருட காலம் இருக்கிறது. பாராளுமன்றம் தொடர்ந்து இயங்குமா? என்பது இப்பொழுது தெரியாமல் இருக்கிறது.

ஆனால் எது எப்படியாக இருந்தாலும் தேர்தல் ஒன்று நிச்சயமாக இன்னும் ஒரு வருட காலத்துக்குள் நடைபெற வேண்டும். ஆகையினாலே தெற்கிலே விசேடமாக அதை குறித்த பலவிதமான வியூக அமைப்புகள் ஏற்படுத்தப்படுகின்றன. இன்றைக்கு இருக்கிற சூழ் நிலையிலே ஒருவருக்கும் 50 சதவீதத்திற்கு கூடுதலான வாக்குகள் எடுப்பது முடியாத ஒரு விடயமாக தோன்று கிற காரணத்தினாலும், தமிழ் மக்களுடைய வாக்குகள் சம்பந்தமாக திரும்பவும் ஒரு முக்கியத்துவம் பெற்றிருக்கிறது.

ஆகையினாலே நாங்கள் எங்களுடைய நிலைப்பாடு குறித்து மிகவும் அவதானமாகவும், ஒரு நீண்ட கால சிந்தனையோடும் செய்ய வேண்டியதாக இருக்கிறது. இது எங்களுக்கு கிடைத்திருக்கிற இன்னொரு சந்தர்ப்பம். ஆகையினாலே இந்த தேர்தல் விடையங்களில் கட்சிகளோடு நாங்கள் ஏற்கனவே பல கலந்துரையாடல்களை மேற்கொண்டு இருக்கின்றோம்.

தமிழ் தேசிய பிரச்சினைக்கான தீர்வு சம்பந்தமாக அவர்கள் நிலைபாடுகள் குறித்து சில பேச்சுவார்த்தைகள் நடைபெற்றிருக்கின்றன. நாட்டிலே இருக்கிற மற்ற பிரச்சினைகள் விசே'மாக பொருளாதார பிரச்சினை சம்பந்தமாக நான் சென்ற ஆண்டில் இருந்து கட்சி தலைவர் கூட்டம் ஒன்றை ஒழுங்கு படுத்தி அழைத் திருக்கின்றேன்.

அதற்கு பல கட்சி தலைவர்கள் வந்திருக்கிறார்கள். சென்ற வாரமும் அதற்கு முதல் வாரமும் கூட அப்படியான ஒரு கூட்டம் ஒன்று நடத்தப்பட்டது. அதிலும் பலர் வந்து கலந்து கொண்டார்கள். அதை தொடர்ந்து மற்ற விடையங்கள் சம்பந்தமாகவும், வேறு கொள்கை நிலைப்பாடுகள் சம்பந்தமாகவும் அப்படியான கூட்டங்கள் நான் அடுத்த வருடத்தில் நடந்த திட்டமிட்டுள்ளேன். ஒரு தனி பாராளுமன்ற உறுப்பினராக அழைப்பு விடுக்கும் போது அவர்கள் வருகிறார்கள்.

ஆகையால் இந்த கொள்கை சம்பந்தமான விஷயங்களை ஆட்சியை அதிகாரங்கள் பிரயோகிக்கப்படுதல், தேசிய பிரச்சினைக்கான தீர்வு என்பவை குறித்தும் நாங்கள் பொதுவான கலந்துரையாடல்களில் ஈடுபடுகிறோம்.தேர்தல்கள் அண்மிக்கும் போது நாங்கள் இந்த கலந்துரையாடல்களை அடிப்படையாக வைத்து மக்களுக்கு எங்களடைய நிலைப்பாடுகளை சொல்லி அந்த வேலைகளை எடுக்க வேண்டிய நிலைப்பாடுகளை எடுக்கலாம் என்று நினைத்திருக்கிறோம்.

*மாவீரர் தின நினைவேந்தலின் போது பயங்கரவாத தடுப்பு சட்டத்தையும் உபயோகித்துள்ளனர்.*

கிளிநொச்சி நீதிமன்றத்தில் ஏழு போலீசில் நிலைய பொறுப்பதிகாரிகள் வழக்குகள் தாக்கல் செய்த போது அங்கே நான் ஒன்றரை மணி நேரம் ஒரு வாதத்தை முன் வைத்து அதன் பிரதிபலனாக அங்கே எந்தவித நிபந்தனையும் விதிக்கப்படவில்லை. அங்கே முழுமையாக பொலிஸாரின் விண்ணப்பங்கள் அனைத்தும் நிராகரிக்கப்பட்டது.

ஏன் என்றால் அவர்கள் குற்றவியல் நடவடிக்கை தண்டனைக் கோவை 106 ஆம் பிரிவின் கீழ் செய்யப்படுகிற விண்ணப்பம் என்பது இப்படியான சூழ்நிலைக்கு முற்றிலும் பொருத்தமற்றது என்பது என்னுடைய வாதமாக இருந்தது.

அதை நீதிபதி அங்கே ஏற்றுக்கொண்டார். ஆனால் வேறு பல நீதிமன்றங்களில் சில நிபந்தனைகளோடு இதைச் செய்யலாம் என்று அனுமதி கொடுக்கப்பட்டது. அந்த நிபந்தனைகள் சில சில இடங்களில் வேறுபட்டன. சில இடங்களில் முல்லைத்தீவில் விசேஷமாக குறிப்பாக சொல்லப்பட்டது சிவப்பு,மஞ்சள் கொடிகள் பயன்படுத்தலாம், கார்த்திகை பூ பயன்படுத்தலாம் என்று குறிப்பாக சொல்லப்பட்டது.

ஆனால் பல இடங்களில் குறிப்பாக சொல்லப்படவில்லை பயங்கரவாத தடுப்பு சட்டத்திற்கு கீழ் செய்யப்பட்ட விதிகளுக்கு மாறாக நடக்காமல் தேசிய பாதுகாப்புக்கு இடைஞ்சல் இல்லாமல் என்று பொதுவான கருத்துக்கள் கூறப்பட்டிருந்தது.சில இடங்களில் சில இலச்சினைகள் பயன்படுத்தியமை, அல்லது படங்களை உபயோகித்தமை போன்றமை மீள் உருவாக்கம் என்று சொல்லி பயங்கரவாத தடுப்பு சட்டத்தையும் உபயோகித்துள்ளனர். அது தவறானது விடயம். அது சம்பந்தமாக நாங்கள் நடவடிக்கைகள் சிலவற்றை மேற்கொண்டு இருக்கிறோம். இதுவரைக்கும் 09 பேர் நாடு பூராகவும் கைது செய்யப்பட்டுள்ளதாக தகவல் கிடைத்துள்ளது.

ஒவ்வொரு விடயமாக நாங்கள் இப்பொழுது அதை கையாளுகிறோம். இது அரசாங்கம் செய்திருக்கும் மிகவும் மோசமான ஒரு விடயம். இதை நாங்கள் வன்மையாக கண்டிக்கிறோம். பயங்கரவாத தடுப்புச் சட்டம் நீக்கப்பட்டது என சொல்லப்படுகிற வேளையிலே பயங்கரவாத தரப்பு சட்டத்தை ஒரு நினைவேந்தல் நிகழ்வு சம்பந்தமாக உபயோகிப்பது என்பது ஒரு பார தூரமான விடயம். அதனை நாங்கள் கண்டிக்கிறோம். அதற்கு எதிர் நடவடிக்கைகளையும் நாங்கள் எடுக்க இருக்கிறோம்.

*பிரதிப் பொலிஸ் மா அதிபர் நியமனம் சட்டத்தை மீறும் செயல்.*

பொலிஸ் மா அதிபர் நியமனம் சட்டத்தை மீறு கின்ற செயல். ஏற்கனவே பாராளுமன்றத்திலும் வெளியிலும் நான் கூறி இருக்கிறேன். சட்டத்தரணிகளுடைய ஒன்றிணைவு என்ற ஒரு குழுவும் இதனை வன்மையாக கண்டித்து இருக்கிறது. அரசியலமைப்பு பேரவையினுடைய அனுமதி இல்லாமல் போலீஸ் மா அதிபர் நியமிக்கப்பட முடியாது. ஒரு பிரதி பொலிஸ்மா அதிபரை கூட நியமிக்க முடியாது.

ஜனாதிபதி ஓட்டு மொத்தமாக அரசியலமைப்பை மீறி செயல்படுகிறார். இந்த விடயத்திலே வெறுமனே பதவி உயர்வு அது யார் கூடுதலாக மூத்தவராக இருக்கின்றார் என்பதை பார்க்காமல் இதற்கு உரியவரை நியமிப்பது அத்தியாவசியமாக இருக்கிறது.

தற்போது அவர் நியமித்த பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் என்பவர் பலவிதமான குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாக்கப்பட்டுள்ள ஒரு நபர்.

அவர் இந்த பதவிக்கு பொருத்தமற்றவர். ஆகையினாலே இந்த நியமனத்தையும் நாங்கள் கண்டிக்கிறோம். அரசியல் அமைப்பை தெரிந்து கொண்டே மீறும் செயல். இதை நான் வெளிப்படையாகவே சொல்லி இருக்கிறேன். ஜனாதிபதி ஒருவர் அரசியல் அமைப்பை தெரிந்து கொண்டே மீறினால் ஜனாதிபதி பதவியில் இருந்து அவரை நீக்குவதற்கு அது போதுமான காரணமாக கூட இருக்கிறது.

*இலங்கை - இந்திய மீனவர்களின் பிரச்சினை.*

இந்திய மீனவர்கள் இலங்கை கடற்பரப்பில் வந்து அத்துமீறி மீன் பிடியில் ஈடுபடுகின்றனர். இந்த பிரச்சனையை நான் பல காலமாக அணுகி வருகிறேன். ஏன் சட்ட மூலங்கள் கொண்டு வந்திருக்கிறேன். இலங்கை அமைச்சர்களோடு டெல்லிக்கு சென்று பேச்சுவார்த்தை நடத்தி இந்திய மத்திய அரசாங்கமும் இழுவைப்படகுகள் நிறுத்தப்பட வேண்டும் என்கிற ஒரு கூட்டறிக்கை செய்யப்பட்ட போது நானும் இலங்கை தூதுக் குழுவில் அங்கம் வகித்திருந்தேன். அதை தொடர்ந்து தான் நான் கொண்டு வந்த சட்டம் இயற்றப்பட்டது.

*தமிழரசு கட்சி தலைமைக்கு இருவர் போட்டியிடுகிறார்கள் என்று சொல்வது தவறு.*

இது எங்களுடைய கட்சியின் யாப்பின் அடிப்படையிலே தலைமை பதவிக்கு சிலருடைய பெயரை ஒரு குறித்த முறையிலே கட்சி உறுப்பினர்கள் பிரரிக்கலாம். அப்படியாக இவருடைய பெயர் பிரரிக்கப்பட்டுள்ளது. எங்களுடைய சம்மதத்தோடு தான்.

ஆனால் மற்றவர்கள் தான் எங்களுடைய பேரை பிரரித்திருக் கிறார்கள். அப்படியாக ஒன்றுக்கு மேற்பட்ட பெயர்கள் பிரரிதிக்கப்படுகிற போது எங்களுடைய யாப்பிலேயே அது எப்படியாக அந்த தெரிவு நடைபெற வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது.

ஜனநாயக கட்சி என்ற அடிப்படையிலே ஜனநாயகத்திலே பரிநாம வளர்ச்சியடைந்தோர், முதிர்ச்சி அடைகிற நிலையிலே ஒரு தலைமை பதவிக்கு பலர் தகுதி உடையவர்களாக இருப்பது அந்த கட்சியினுடைய ஒரு பலமான விடயம். பல கட்சிகளுக்கு இவரை விட்டால் வேறு ஆள் இல்லை என்று வாழ்நாள் தலைவர்களே வைத்துக் கொண்டுள்ள கட்சிகளைப் போல் அல்லாது எங்களுடைய கட்சியிலே பலருக்கு அந்த தகுதி இருக்கிறது.

பலருடைய பெயர் முன்மொழிய படுகிறது. அது கட்சி அடிப்படை உறுப்பினர்கள் 200-க்கும் மேற்பட்டவர்கள் கூடி வாக்களித்து அதை தீர்மானிப்பார்கள். மிகவும் ஆரோக்கியமான ஒரு விஷயமாக நான் அதனை கருதுகிறேன். எவர் வெற்றி பெற்றாலும் மற்றவர்கள் தொடர்ந்து இணைந்து கட்சி அங்கத்தவர்களாக நாங்கள் செயல்படுவோம். என அவர் மேலும் தெரிவித்தார்.

# தெல்லிப்பழைப் பகுதியில் இடம்பெற்ற வாழ்வெட்டு சம்பவத்தின் சிசிடிவி காட்சி

## சைக்கிள் வந்த இளைஞர் மீது சரமாரியாக வாள்வெட்டு தாக்குதல் நடத்தியுள்ளது

யாழ்ப்பாணம் தெல்லிப்பழை பகுதியில் ஹயஸ் வானில் வந்த இனந்தெரியாத குழு மோட்டார் சைக்கிள் வந்த இளைஞர் மீது சரமாரியாக வாள்வெட்டு தாக்குதல் நடத்தியுள்ளது. இதன்போது பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொண்டுள்ளனர்.

தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்திற்கு அருகில் குறித்த வன்முறை சம்பவம் திங்கட்கிழமை மாலை 5.30 இடம்பெற்றுள்ளது. மோட்டார் சைக்கிளில் இளைஞர்கள் சிலர் தெல்லிப்பழை பகுதியில் பயணித்துள்ளனர்.

இதன்போது ஹயஸ் வானில் வந்த வாள்வெட்டு குழுவினரை பார்த்து மோட்டார் சைக்கிளில் வந்த ஏனையவர்கள் தப்பித்து செல்ல ஒருவர் மீது சரமாரியாக வாள்வெட்டு தாக்குதலை நடாத்திவிட்டு கும்பல் மருதனார்மடம் நோக்கி தப்பிச் சென்றுள்ளது.


பொலிஸ் நிலையம் முன்பாக காவல் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் மோட்டார் சைக்கிளில் வாள்வெட்டு குழுவை துரத்தி சென்ற போதும் ஹயஸ் வானில் குறித்த குழு தப்பிச் சென்றுள்ளது.

ஹயஸ் வானை நோக்கி பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியதாகவும் தெரியவருகிறது. சம்பவத்தில் காயமடைந்த இளைஞர் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பாக தெல்லிப்பழை பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# தமிழரசுக் கட்சியின் அடுத்த தலைவர் யார்?

## - யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்



தமிழரசுக் கட்சியின் தலைவர் யார் என்பதை தெரிவு செய்வதற்கு வரும் ஜனவரி மாதம் தேர்தல் நடக்கவிருக்கிறது. தமிழ்த் தேசியப் பரப்பில் உள்ள பெரிய கட்சி அது. அக்கட்சித் தலைவரை இதுவரை காலமும் தேர்தல் இன்றி ஏகமனதாக தெரிவு செய்து வந்தார்கள். அதாவது போட்டிக்கு ஆள் இருக்கவில்லை. ஆனால் இம்முறை போட்டி ஏற்பட்டிருக்கிறது. இப்போட்டிக்குக் காரணம் ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் அந்த பதவியை அடைய விரும்புவதுதான்.

கடந்த 14 ஆண்டுகளாக தமிழரசுக் கட்சியின் பட்டத்து இளவரசர் போல சுமந்திரனே தோன்றினார். அதை நோக்கி அவர் தன்னை வளர்த்துக் கொண்டார். உள்ளூராட்சி சபை, மாகாண சபை போன்ற எல்லா மட்டங்களிலும் அவர் தன்னுடைய ஆதரவுத் தளத்தைப் பெருக்கிக் கொண்டார். அதற்கு முது தலைவராக இருந்த சம்பந்தரின் ஆசிர்வாதமும் இருந்தது. அதாவது பல ஆண்டுகளாகத் தலைமைப் பதவியை இலக்கு வைத்து திட்டமிட்டு உழைத்தவர் சுமந்திரன்.

அவரிடமிருந்த மொழிப்புலமை, சட்டப் புலமை, நிதிப்பலம் போன்றவை காரணமாக அவர் திட்டமிட்டுத் தன்னுடைய நிலையை பலப்படுத்தி வந்தார். சிறீதரன் அவருக்கு சவாலாக எழாத வரை அவர்தான் ஏகமனதாக தெரிவு செய்யப்பட வேண்டிய ஒரு தலைவர். கடந்த நாடாளுமன்றத் தேர்தலின் போது சிறீதரனும் அவரும் இணைந்து செயல்பட்டார்கள். சிறீதரன் அதனை அன்ரன் பாலசிங்கம் என்றும் அழைத்தார். அது கடுமையான விமர்சனங்களை ஏற்படுத்தியது.

கட்சிக்குள் சுமந்திரனின் எழுச்சி என்பது கடந்த 14 ஆண்டுகளிலும் படிப்படியாக திட்டமிட்டு கட்டி எழுப்பப்பட்ட ஒன்று. சம்பந்தர் அதைத் தொடங்கி வைத்தார். கட்சியை தீவிரவாத நீக்கம் செய்ய வேண்டும், சிங்கள மக்களின் நன்மதிப்பை வென்றெடுக்க வேண்டும் என்றெல்லாம் சிந்தித்து சம்பந்தர் உள்ளே கொண்டு வந்தவர்தான் சுமந்திரன். ஆயுதப் போராட்டமானது சிங்கள மக்களைப் பகை நிலைக்குத் தள்ளி விட்டது என்று சம்பந்தர் கருதினார். ஒரு தீர்வை பெறுவதாக இருந்தால் சிங்கள மக்களின் ஒப்புதல் அவசியம் என்றும் அவர் நம்பினார். எனவே சிங்கள மக்களின் மனங்களை வென்றெடுப்பதற்கு கொழும்பை மையமாகக் கொண்ட மொழியாளுமை கொண்ட சுமந்திரனைப் போன்றவர்கள் விக்னேஸ்வரனைப் போன்றவர்கள் அவசியம் என்றும் அவர் நம்பினார். எனவே சுமந்திரன், விக்னேஸ்வரன் போன்றவர்களை சம்பந்தர் கட்சிக்குள் இறக்கியமை என்பது தற்செயலானது அல்ல. அவரிடம் அதற்கென்று தெளிவான ஒரு வழி வரைபடம் இருந்தது. அதன்படியே காரியங்கள் முன்னெடுக்கப்பட்டன. அதனால்தான் சுமந்திரன் பட்டத்து இளவரசராக மேல் எழுந்தார்.

ஆனால் சம்பந்தரின் வழி தோற்றுவிட்டது. அவர் எதிர்பார்த்தது போல ஒரு தீர்வைப் பெற முடியவில்லை. அது மட்டுமல்ல, அவர் உள்ளே இறக்கிய விக்னேஸ்வரன் அவருக்கு எதிராகத் திரும்பினார். அதன்பின் இறக்கப்பட்ட குகதாசன் எதிராகத் திரும்பி விட்டார். சுமந்திரன் சாணக்கியர் கூறியது போல "நண்டாக" மாறிவிட்டார். "இளவரசர்கள் நண்டுகளைப் போன்றவர்கள். அவர்கள் தகப்பனைத் தின்னிகள்" என்று சாணக்கியர் கூறுவார். மொத்தத்தில் சம்பந்தர் ஒரு தோல்வியுற்ற தலைவராக ஓய்வு பெறப் போகின்றாரா?

ஆனால் அவர் தமிழ் அரசியலைச் சீரழித்து விட்டார். கடந்த 14 ஆண்டுகளில் அவரால் உருப்படியான ஒரு தீர்வை பெற்றுத் தரவும் முடியவில்லை. கூட்டமைப்பு என்ற ஐக்கிய கட்டமைப்பையும் பாதுகாக்க முடியவில்லை. அவருடைய வாரிசுகளே அவரைத் தூக்கி எறியும் ஒரு நிலை. அவர் கடந்த 14 ஆண்டுகளாக திட்டமிட்டு முன்னெடுத்த அரசியல் வழியின் விளைவாக அவருடைய சொந்தக் கட்சிக்குள்ளேயே சிதைவுகள் தொடங்கிவிட்டன.

கடந்த நாடாளுமன்ற தேர்தலில் சிறீதரன் சுமந்திரனின் முதன்மையை ஏற்றுக் கொண்டிருந்தார். அதனால்தான் சுமந்திரனை அன்ரன் பாலசிங்கம் என்றும் அழைத்தார். ஆயின் இப்பொழுது சிறீதரனுக்கும் சுமந்திரனுக்கும் இடையே ஏற்பட்டிருப்பது தனிப்பட்ட முரண்பாடா? அல்லது, கொள்கை முரண்பாடா? கூட்டமைப்புத் தேய்ந்து தமிழரசுக் கட்சியாகியதற்கு சுமந்திரனையே பலரும் குற்றஞ்சாட்டுவதுண்டு. சிறீதரனின் செல்வாக்கு அடித்தளமாக காணப்படும் கிளிநொச்சிக்குள் சுமந்திரன் தனக்கு ஆதரவான ஒரு சிறு அணியை உருவாக்கி வைத்திருக்கிறார். ஏற்கனவே சிறீதரனோடு இருந்தவர்கள் அவர்கள். சிறீதரனின் கோட்டைக்குள் சுமந்திரன் ஊடுருவ முற்பட்டமையும், முரண்பாடுகள் தீவிரமடைய ஒரு காரணம்.

முதலில் இருவருக்கும் இடையிலான அடிப்படை வேறுபாடுகளை பார்க்கலாம். சுமந்திரன் புரட்டஸ்தாந்து பாரம்பரியத்தில் வந்தவர். கொழும்பு மைய வாழ்க்கைக்கு அதிகம் பழக்கப்பட்டவர். கொழும்பு மைய உறவுகளைக் கொண்டவர். ஒரு தமிழ் மக்களின் பிரதிநிதியாக கொழும்பில் தன் செல்வாக்கை மேலும் பலப்படுத்திக் கொண்டவர். யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்ட ஓர் ஊடக முதலாளி ஒருமுறை சொன்னார் "தமிழ் மக்களின் வாக்குகளால் அவர் ஒரு நாடாளுமன்ற உறுப்பினராக வருகிறார். அதேசமயம் தென்னிலங்கையில் அவர் அரசியல் உயர் குழாம், படைத்துறை உயர் குழாம்,புத்திஜீவிகள், ஊடகங்கள் மத்தியில் செல்வாக்கு மிக்கவராக வளர்ந்திருக்கிறார். தென்னிலங்கை அரசியலில் அதிகம் செல்வாக்கு மிக்க ஒரு தமிழ் அரசியல்வாதி அவர்தான். தமிழ் மக்களின் வாக்குகளால் அவர் கொழும்பில் ஒரு பிரமுகராக வலம் வருகிறார்".

தனது மொழிப்புலமை வாழ்க்கை பின்னணி காரணமாக சுமந்திரன் தென் இலங்கையில் மட்டுமல்ல உலக அளவில் ராஜதந்திரிகள் மத்தியிலும் ராஜதந்திர வட்டாரங்களிலும் அதிகம் தெரிய வந்த ஒருவராக காணப்படுகிறார்.

இப்பொழுது சிறீதரனைப் பார்க்கலாம். அவருடைய வேர் தீவுகளில் இருக்கிறது. ஆனால் அவர் தன்னைப் பலப்படுத்திக் கொண்டது கிளிநொச்சியில். போராட்டப் பாரம்பரியத்தில் வந்தவர். அதிகம் உள்ளூர் பண்புடையவர். உள்ளூர் உணர்வுகளை அதிகம் பிரதிபலிப்பவர். தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டம் தோற்கடிக்கப் பட்ட பின்னரான ஒரு காலகட்டத்தில் போரினால் அதிகம் பாதிக்கப்பட்ட ஒரு மாவட்டத்தை பிரதிநிதித்துவ படுத்தியவர் என்ற அடிப்படையில் அவருடைய பாரம்பரியம் அவருடைய வாழ்க்கைமுறை போன்றன சுமந்திரனிடமிருந்து வேறுபாடானவை.

இந்த வேறுபாடுகளை சிறீதரனை ஆதரிப்பவர்கள் கொள்கை வேறுபாடுகளாக வியாக்கியானம் செய்கிறார்கள். சுமந்திரனின் அணுகுமுறை அதிகம் மிதவாதத் தன்மை மிக்கது இணங்கி செல்லும் தன்மை மிக்கது. அதனை அவருடைய கொழும்பு மைய நிலையான நலன்கள் பெருமளவுக்குத் தீர்மானிக்கின்றன. ஆனால் சிறிதரனின் அணுகுமுறை அதிகம் எதிர்ப்பு தன்மை மிக்கது. ஒப்பீட்டளவில் சுமந்திரனை விடத் தீவிரமானது.

எதுவாயினும் ஒரு தேர்தல் நடக்குமாக இருந்தால், அதாவது தேர்தலை தவிர்ப்பதற்கு எடுக்கப்படும் முயற்சிகள் வெற்றி பெறவில்லை என்றால், தேர்தலில் இருவருக்கும் இடையிலான முரண்பாடு கொள்கை முரண்பாடாகவே காட்டப்படும். சிலசமயம் அது பிரதேச வாதமாகவோ அல்லது மத வாதமாகவோ மாறக்கூடிய ஆபத்துகளும் உண்டு.

அதை ஒரு கொள்கை வேறுபாடாக காட்டுவது சிறீதரனுக்கு ஒப்பீட்டளவில் பாதுகாப்பாக இருக்கும். அனுகூலமாகவும் இருக்கும். தமிழ்த் தேசிய நிலைப்பாட்டுக்கும் கொழும்பு மைய தமிழ் நிலைப்பாட்டுக்கும் இடையிலான ஒரு மோதலாக அதை உருவகித்தால் தனக்கு அதிகரித்த ஆதரவு கிடைக்கலாம் என்று அவர் நம்பக்கூடும். அதாவது கொள்கை அடிப்படையில் தன் பக்கம் பலமாக உள்ளது என்று அவர் நம்பக்கூடும்.

ஆனால், கடந்த 14 ஆண்டுகளிலும் அப்படியெல்லாம் கொள்கை வழியில் கட்சிகள் கட்டியெழுப்பப்பட்டனவா? தமிழ் மக்கள் கொள்கைகளுக்கு வாக்களிக்கிறார்கள் என்பது ஒரு டெம்ப்லட் வகை வசனமாக மாறி வருகிறதா? ஏனெனில் தமிழ் அரசியல்வாதிகள் தமது விசுவாசிகள் கூட்டத்தை கொள்கை அடிப்படையில் கட்டியெழுப்பவில்லை. மாறாக எதிர்கால நலன்களின் அடிப்படையில்தான் கட்டியெழுப்பி வைத்திருக்கிறார்கள்.

எந்த நாடாளுமன்ற உறுப்பினரோடு நின்றால் தனக்கு உள்ளூராட்சி சபையில் ஆசனம் கிடைக்கும் அல்லது மாகாண சபையில் ஆசனம் கிடைக்கும் அல்லது நாடாளுமன்றத்தில் ஆசனம் கிடைக்கும் என்று கணக்குப் பார்த்தே பெரும்பாலான தொண்டர்கள் தலைவர்களைச் சூழ்ந்து காணப்படுகிறார்கள். அதாவது தேர்தல் மைய நோக்கு நிலையில் இருந்து சிந்தித்தே பெரும்பாலான கட்சி வலைப்பின்னல்கள் கட்டியெழுப்பப்பட்டுள்ளன. யாரோடு நின்றால் கட்சிக்குள் தங்களுடைய அடுத்தடுத்த கட்டப் பதவி உயர்வுகளைப் பாதுகாக்கலாம் என்றுதான் பெரும்பாலான கட்சித் தொண்டர்கள் சிந்திக்கிறார்கள்.

கொள்கைகளால் உருகிப் பிணைந்த ஒரு கட்டமைப்பாக கட்சி இருந்திருந்தால் கட்சிக்குள் உடைவு வரும் பொழுது அதை நாகரிகமாக கடந்து போக தெரிந்திருக்கும். சமூக வலைத்தளங்களில் நிகழும் மோதல்களில் தேசத் திரட்சியைப் பாதுகாக்கும் குறைந்தபட்ச அரசியல் நாகரீகமாவது பேணப்பட்டு இருந்திருக்கும்.

ஆனால் அதைக் காணவில்லை இது தமிழரசு கட்சிக்குள் மட்டும் நடக்கவில்லை. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்குள்ளும் நடந்தது. மணிவண்ணன் பிரிந்தபோது அதைக் காண முடிந்தது. நேற்றைய தோழன் இன்றைய துரோகி. இவ்வாறு முன்னாள் தோழர்களை இந்நாள் துரோகிகளாக்கும் அரசியல் பண்பாடு புதியது அல்ல. இது தமிழ் ஆயுத அரசியலில் இருந்து மிதவாத அரசியல் வரை உண்டு.

ஏற்கனவே பல தசாப்தங்களுக்கு முன்பு தமிழரசுக் கட்சிக்கும் தமிழ் கொங்ரசுக்கும் இடையே மோதல்களின் போது, இரு கட்சி ஆதரவாளர்களும் மல முட்டிகளை பயன்படுத்துவார்கள். அதாவது மண் முட்டிகளுக்குள் மலத்தை நிரப்பிக் கொண்டு வந்து எதிராளியின் வீட்டு முற்றத்தில் உடைத்து விட்டுப் போவார்கள். அதே மலமுட்டிப் பாரம்பரியம் இப்பொழுது சமூக வலைத்தளங்களுக்கும் வந்துவிட்டது. முன்பு கட்சிகளுக்கு இடையே அது இருந்தது. இப்பொழுது கட்சிகளுக்குள்ளேயே வந்துவிட்டது. அது தேசத் திரட்சியைப் பாதுகாக்கும் ஓர் அரசியல் பண்பாடு அல்ல. கொள்கைப் பற்றுறுதி இருந்தால் அப்படியெல்லாம் பொது வெளியில் விமர்சனங்கள் வராது. தமிழ்க் கட்சிகளின் விசுவாசக் கட்டமைப்புக்கள் பெருமளவுக்கு கொள்கையை விடவும் எதிர்காலப் பதவி உயர்வுகளை மையமாகக் கொண்டு வளர்த்தெடுக்கப்பட்டவைதான்.

இப்படிப்பட்டதோர் அரசியற் சூழலில் தமிழரசுக் கட்சிக்குள், தலைவருக்கான ஒரு தேர்தல் நடந்தால், அது தமிழரசியலின் ஜனநாயகச் செழிப்பை நிரூபிக்குமா? அல்லது தேசத் திரட்சியை உடைக்குமா?

## பனையின் புலம்பல்
## (நிலைமண்டில ஆசிரியப்பா)

---

காவோலை வீழக் குருத்தோலை சிரித்ததென்று
போவோர் வருவோரிடம் பொல்லாங்கு சொல்கிறீர்
நீவீர் செய்யும் நீதியற்ற செயலை
நாவினால் சொல்ல நாதியற்று நிற்கிறேன்
கள்ளுடன் கருப்பனீர் கணக்கிலாக் கொடுக்கிறேன்
கொள்ளியாய் வந்து குசினியில் உதவுறேன்
பதமான சுவைமிகு பனங்கட்டி தருகிறேன்
இதமாக உமக்கு இளநுங்கு ஈகிறேன்
வீட்டை வேயவும் வேலி அடைக்கவும்
மாட்டுக்கு உணவாய் மறுக்காமல் ஓலையும்
பனம்பழப்பனாட்டும் பழுதறப் பகர்கிறேன்
கனகம் போன்ற கல்லாக் காரமும்
பல்லுக்குப் பதமாய்ப் புழுக்கிய ஒடியலும்
எல்லோரும் விரும்பும் இதமான கூழுக்கு
பல்லோர் போற்றும் பதமான ஒடியலும்
அல்லும் பகலும் அளவிலா அளிக்கிறேன்
பன்னம் செய்யப் பருவமாய்க் குருத்தோலையும்
தன்னார்வத் தொண்டனாய்த் தயங்கிடாத் தருகிறேன்
உண்ண உங்களிடம் உணவு கேட்டேனா?
தண்ணீர் தரும்படி தயவாய் இரந்தேனா?
கற்பகத் தருவென காலமெலாம் போற்றுகிறீர்
சற்றேனும் யோசியாமல் தறித்து வீழ்த்துகிறீர்
நூறாண்டு காலம் நோயின்றி வாழுமெனை
கூறாமல் வந்து கொலைதானே செய்கிறீரே!.

---

**ஆக்கம் ... கவிஞர் மார்க்கம் சந்திரன்**
(416) 844-7453

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# அராலியில் தவறான முடிவெடுத்து உயிர்மாய்த்த மாணவியின் இறுதிச் சடங்கு!



வெளியாகிய க.பொ.த சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் மாணவி ஒருவர் குறைவான பெறுபேற்றினை பெற்றதாக தெரிவித்த பெற்றோர் குறித்த மாணவியை கண்டித்த நிலையில் அவர் தவறான முடிவெடுத்து தூக்கிட்டு உயிர்மாய்த்துள்ளார்.

வாலை அம்மன் வீதி, அராலி கிழக்கினைச் சேர்ந்த சிவகுமார் பானுப்பிரியா (வயது 17) என்ற மாணவியே தவறான முடிவெடுத்து 05-12-2023 தினம் இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

அவரது இறுதிச் சடங்குகள் அன்றையதினம் அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக் கிரியைகள் மினங்குப்பிட்டி இந்து மயானத்தில் நடைபெற்றது.

குறித்த மாணவியின் மரணம் ஒட்டுமொத்த ஊரையும் துயரத்தில் ஆழ்த்தியுள்ளது.




# புதிதாக அமைக்கபட்ட பாலம் உடைந்து விழுந்ததில் இருவர் காயம்





புதிதாக அமைக்கபட்ட பாலம் உடைந்து விழுந்ததில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் காயமடைந்த நிலையில் சிகிக்சை பெற்று வருகின்றனர். குறித்த சம்பவம் 07-12-2023 அன்று காலை 5 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட பாரதிபுரம் கிராமத்தில் உள்ள வீதி ஒன்றில் அமைக்கப்பட்ட பாலமே இவ்வாறு உடைந்து விழுந்துள்ளது.

செபஸ்தியார் வீதி என அழைக்கப்படும் குறித்த வீதி ஊடாக நாளாந்தம் நூற்றுக்கணக்கான மக்கள் பயணிக்கின்றனர்.

இரணைமடு பொதுச்சந்தை, பாடசாலை மற்றும் தொழில் உள்ளிட்ட அன்றாட செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதற்கு குறித்த வீதி இன்றியமையாததாக உள்ளது.

இந்த நிலையில், குறித்த பாலம் 2019ம் ஆண்டு கரைச்சி பிரதேச சபையினால் அமைக்கப்பட்டதுடன், அதன் பாதுகாப்பிற்கான பணிகள் 2022ம் ஆண்டு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்த பணிக்காக ஏறத்தாழ 11 லட்சம் செலவு செய்யப்பட்டுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர். ஆயினும், 07-12-2023 அன்றுஅதிகாலை உடைந்து விழுந்துள்ளது.

தொழிலுக்கு மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் பாலம் உடைந்து விழுந்ததில் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மோட்டார் சைக்கிளில் பயணிக்கும்போது இடம்பெற்ற இந்த சம்பவம், ஆடைத் தொழிற்சாலை ஊழியர்களை ஏற்றி செல்லும் பேருந்து உள்ளிட்ட வாகனங்கள் பயணிக்கும் போது இடம் பெற்றிருந்தால், பாரிய ஆபத்தான நிலை ஏற்பட்டிருக்கும் என மக்கள் ஆதங்கம் வெளியிடுகின்றனர்.

தமது வரிப்பணத்தில் பாரிய நிதியில் அமைக்கப்பட்ட இந்த பாலம் உடைந்தமை தொடர்பில் ஆதங்கம் வெளியிடும் மக்கள், தமது வரிப்பணத்தில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்திகள் உரிய கண்காணிப்பில் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கின்றனர்.

உடைந்த இந்த பாலத்தை உடனடியாக கரைச்சி பிரதேச சபையினர் சீர் செய்து, நிரந்தரமான அபிவிருத்தி ஊடாக தமது போக்குவரத்து இலகுபடுத்தலை உடன் சீர்செய்து தர வேண்டும் எனவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

குறித்த பாலம் உடைந்து விழுந்த நிலையில் காணப்படுவதால், மக்கள் போக்குவரத்து செய்வதில் சிரமங்களை எதிர்கொண்டுள்ளதுடன், வெள்ள அனர்த்தம் ஏற்படக்கூடிய அப்பாயமும், வீதி மேலும் சேதமடையும் அபாயமும் காணப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# வரலாற்றுச் சிறப்புமிக்க கோண்டாவில் ஈழத்து சபரிமலை சபரீச ஐயப்பன் தேவஸ்தானத்தின் வருடாந்த கொடியேற்றம்

இலங்கை செய்திகள்
Sri Lanka News

பு. கஜிந்தன்





வரலாற்றுச் சிறப்புமிக்க கோண்டாவில் ஈழத்து சபரிமலை சபரீச ஐயப்பன் தேவஸ்தானத்தின் வருடாந்த கொடியேற்றம் 06.12.2023 அன்று பக்திபூர்வமாக இடம்பெற்றது.

கருவறையில் வீற்றிருக்கும் ஈழத்து சபரிமலை சபரீச ஐயப்பன், மடசாமி மற்றும் கருப்பானசாமிக்கு விஷேட அபிஷேக, ஆராதனை கள், இடம்பெற்று கொடித்தம்பத்திற்கான பூஜைகள் இடம்பெற்றன.

பின்னர் வசந்த மண்டபத்தில் அருள்பாலித்த ஈழத்து சபரிமலை சபரீச ஐயப்பனுக்கு தீபராதனைகள் இடம்பெற்று, அங்கிருந்து எழுந்தருளிய எம்பெருமான் புலி வாகனத்தில் வீற்று கொடிமரத்தினை வந்தடைந்ததும் 10 மணி சுப மூர்த்தத்தில் மேளதாள, வாத்தியங்கள் முழங்க, சிவாச்சாரியார்களால் வேதபாராயண ஓதப்பட்டு கொடித்தம்பத்தில் ஆலயபிரதம குரு குருமாமணி கி.ஹரிஹரசுதச் சிவாச்சாரியரினால் மஹோற்சவ கொடியேற்றி வைக்கப்பட்டது. பின்னர் ஐயப்ப சுவாமி உள்வீதி மற்றும் வெளிவீதியூடாக வலம் வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார்.

இவ் மஹோற்சவத்தில் எதிர்வரும் 14.12.2023 அன்று இரதோற்சவம் இடம்பெற்று மறுநாள் தீர்த்த உற்சவம் நிறைவுற, மாலை கொடியிறக்கத்துடன் இனிதே திருவிழா நிறைவடையும்.

இதில் பலபாகங்களில் இருந்து வருகை தந்த குருமார்கள் பக்தர்கள் கலந்து கொண்டனர்.



# நயினை நாகபூசணி அம்பாள் ஆலயத்தில் பந்தற்கால் நாட்டும் நிகழ்வு



வரலாற்றுச் சிறப்புமிக்க யாழ்ப்பாணம் நயினாதீவு ஸ்ரீ நாக பூஷணி அம்பாளின் கும்பாபி ஷேக பெருவிழா விற்கான யந்திரபூஜை ஆரம்பமும் பந்தற்கால் நாட்டும் நிகழ்வும் பக்திபூர்வமாக இடம்பெற்றது.






இவ்வாலயத்தில் யந்திர பூஜை, பந்தற்கால் நாடும் கிரியைகள் 07-12-2023 அன்று இடம்பெற்று, 48 நாட்கள் மண்டாபிலாஷக கிரியைகள் இடம்பெற்று, எதிர்வரும் 22.01.2024 அன்றும், மறுநாள் 23.01.2024 வரை நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாளுக்கு எண்ணைக்காப்பு சாத்தும் நிகழ்வும் தைத்திரு நாளுக்கான சமய நிகழ்வும் இடம்பெற்று 24.01.2024 அன்று மஹாகும்பாபிஷேக பெரும்விழா இடம்பெறவுள்ளது.

இனிதே கும்பாபிஷேக பெருவிழாவிற்கான யந்திரபூஜை ஆரம்பமும் பந்தற்கால் நாட்டலுக்கான கர்மாகிரியைகள் இடம் பெற்றன.

இதில் பல பாகங்களில் இருந்து வருகைதந்த பக்தர்கள் கலந்து கொண்டதுடன் ஆலய அறங்காவலர்கள் மற்றும் மகாசபை உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

# கொடிகாமமத்தில் வன்முறைக்குழு தாக்குதல் – நகை மற்றும் பணம் என்பனவும் கொள்ளை





யாழ்ப்பாணம் - கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வெள்ளாம்போக்கட்டி ஜே/323 கிராம அலுவலர் பிரிவில் 06-12-023 புதன்கிழமை பிற்பகல் வீதியால் சென்ற இளைஞன் மீது வன்முறைக் குழுவொன்று தாக்குதல் நடத்தியதுடன்-குறித்த இளைஞனின் வீட்டிற்குச் சென்று பெறுமதியான உடமைகளை அடித்து நொறுக்கியதுடன் வீட்டில் இருந்த நகை, பணம் போன்ற பெறுமதியான பொருட்களையும் திருடிச் சென்றுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, தாக்குதலுக்கு இலக்கான இளைஞன் தனது நண்பனுடன் மோட்டார்சைக்கிளில் வீடு நோக்கிச் சென்ற போது வெள்ளாம்போக்கட்டி சீலன் வீதி பகுதியில் வைத்து வழிமறித்த குழுவொன்று இளைஞன் மீது கொலைவெறித் தாக்குதல் நடத்தியதுடன் - இளைஞன் பயணித்த மோட்டார் சைக்கிளையும் அடித்து சேதப்படுத்தியுள்ளது.

மேற்படி குழுவின் தாக்குதலில் இருந்து தப்பித்து இளைஞன் அருகில் உள்ள வீடு ஒன்றில் தஞ்சம் புகுந்த நிலையில் வன்முறைக் கும்பல் அந்த வீட்டின் முன்பாக பொருத்தப்பட்டிருந்த பாதுகாப்புக் கேமராக்களையும் அடித்து சேதப்படுத்தியுள்ளது.

தொடர்ந்து வெள்ளாம்போக்கட்டி பகுதியில் உள்ள இளைஞனுடைய வீட்டிற்கு சென்று வெளிக்கதவு, கண்ணாடிகள், தொலைக்காட்சி, குளிர்சாதனப்பெட்டி உள்ளிட்ட பெறுமதியான பொருட்களை அடித்து சேதப்படுத்தியதுடன் வீட்டில் வைக்கப்பட்டிருந்த 7 இலட்சம் ரூபாய் பணம் மற்றும் நகைகள் ஆகியவற்றையும் திருடிக் கொண்டு மேற்படி கும்பல் தப்பித்துள்ளது.

இது தொடர்பாக கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ள நிலையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். காயப்பட்ட இளைஞன் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.


EASY FURNITURE
ஈஸி ஃபர்னிச்சர்
Markham Convention Centre
McNicoll Ave
ARMDALE
Dynamic Dr
Tapscott Rd
ORDER TODAY 416-293-9204
easyfurniture
easyfurnitureca
MON - FRI 11:00AM - 8:00PM
SAT & SUN 11:00AM - 6:00PM
Winter
Special Sale
நம்பி வாங்க!
சந்தோஷமா போங்க...
3 Pcs Sofa Set
Sofa & Love Seat $649
3 Pc Sofa $749
Single Bed $145
8 Pcs Bedroom Set
Queen Bed
Dresser
Mirror
5 Pcs Bedroom Set $1299
3 Pcs Sofa Set Air Leather Recliners
Sofa & Love Seat $1049
Bunk Bed $449
8 Pcs Bedroom Set
Queen Bed
Dresser
Mirror
5 Pcs Bedroom Set $1349
8 Pcs Bedroom Set
Queen Bed
Dresser
Mirror
5 Pcs Bedroom Set $1399
Folding Bed $149
Including Free Ottoman
Sectional Sofa $849
Sofa Bed $649
Queen Size Leather Bed $199
5 Pcs
Dining Table $399
Bunk Bed with Storage $899
7 Pcs
Dining Table $549
5 Pcs
Dining Table $399
Coffee Table $89
L Sectional Sofa $399
Sami Madam
Price Starting from $99
We Can Make Special Order
Free Ottoman
Starting From $59
Coffee Table $89
5" Single Foam $59
Dreamopedic Single Mattress $149
Rest-O-Pedic Queen $249
Velvet Rose Queen Mattress $299
Wardrobe
Starting From $199
3500 McNicoll Ave, Unit 5, Scarborough, ON M1V 5C7
நாங்களே உற்பத்தி செய்து விரும்பிய அளவுகளில் செய்து கொடுக்கிறோம்

MORTGAGE FINANCIAL SOLUTIONS

RESIDENTIAL · COMMERCIAL · INDUSTRIAL · VACANT LAND · CONSTRUCTION




Our Services

• 1st & 2nd Mortgages • Purchase • Refinance • Renewal • Switches • Equity line of Credit
• Pre-approvals •Self-employed • Multi-rental properties • New immigrants

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

1585 Markham Rd, Unit #406,
Toronto, ON. M1B 2W1
Canada

www.nesan.ca

WE DEAL WITH ALL BANKS

Powered By
MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Brokeerage #10330 / Licence # M15001465

Scotiabank · TD Canada Trust · RFA · FIRST NATIONAL FINANCIAL LP · MCAP · HOME TRUST · EQUITABLE BANK · radius financial · RMG mortgages

# நல்லிணக்க செயல்முறைக்கு நேர்மை மற்றும் சமமான நடத்தை தேவை

**- எழுதியவர் ஜெஹன் பெரேரா**

பெரும்பாலான சிறுபான்மையினர் பெரும்பான்மையினரின் அதிகாரத்தைப் பற்றிய ஒருவித அச்சத்தில் வாழ்கின்றனர். மிக மோசமான நிலையில், பெரும்பான்மையினர் சிறுபான்மையினர் மீது கலவரம் போன்ற வன்முறைகளைக் கட்டவுழ்த்துவிட முடியும். சிறுபான்மையினர் எதிர்ப்புத் தெரிவித்தாலும், அவர்கள் பாதிக்கப்படும் நிலையில் உள்ளனர்.

சனநாயக நாடுகளில், சிறுபான்மையினர் எப்போதும் பெரும்பான்மை ஆட்சியின் சிக்கலை எதிர்கொள்வார்கள்.

ஏனெனில் எது முக்கியம் என்பது குறித்த பெரும்பான்மையினரின் பார்வை சிறுபான்மையினர் முக்கியமானதாகக் கருதுவதை விட முன்னுரிமை பெறுவார்கள். எனவே, சிறுபான்மையினர் சமமான குடிமக்களாக நடத்தப்படுவதற்கு சட்டத்தின் ஆட்சி மற்றும் நேர்மையான கருத்துக்கள் மிக முக்கியமானவை, 19 ஆம் நூற்றாண்டின் அரசியல் கோட்பாட்டாளர் யோன் ஸ்டூவர்ட் மில் **(John Stuart Mill)** "பெரும்பான்மையினரின் கொடுங்கோன்மைக்கு" எதிராக எச்சரித்தார், மேலும் "ஒரு மாநிலத்தின் மதிப்பு, நீண்ட காலத்திற்கு, அதை உருவாக்கும் தனிநபர்களின் மதிப்பாகும்" என்றும் வலியுறுத்தினார்.

அனைத்துக் குடிமக்களுக்கும் சனநாயகக் கொள்கைகளை நிலைநிறுத்துவதில் நிறுவன ரீதியிலான பாதுகாப்புகள் மூலம் சமத்துவத்தையும் நீதியையும் உறுதி செய்வது மிக முக்கியமானது. இலங்கையின் அண்மைய நிகழ்வுகள் இன மற்றும் மத சிறுபான்மையினர் மத்தியில் அச்சத்தையும் பதட்டத்தையும் தோற்றுவித்துள்ளன. ஞாயிறு உயிர்த்தெழுந்த நாள் குண்டுவெடிப்புத் தொடர்பாக கத்தோலிக்க திருச்சபையின் கவலைகளைப் புறக்கணித்தல், போதகர் ஜெரோம் ஃபெனாண்டோவின் கைது மற்றும் அரசமைப்புப் பேரவைக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளராக நிறுத்தப்பட்டதற்கு எதிரான எதிர்ப்பு ஆகியவை இதில் அடங்கும். போதகர் ஜெரோம் கைது என்பது ஒரு சிறிய சிக்கலாகவும், பிற மதங்களைப் பற்றியும், குறிப்பாக பெரும்பான்மை மதத்தைப் பற்றியும் அவர் பேசியதில் மிகைப்படுத்தப்பட்ட ஒரு நபரின் சிக்கலாகவும் தோன்றலாம். ஆனால் மத வெறுப்புணர்வைப் பரப்பியதற்காக ஐசிசிபிஆர் சட்டத்தின் **(ICCPR Act)** கீழ் அவர் கைது செய்யப்பட்டிருப்பது அனைத்து மத மற்றும் இனச் சிறுபான்மையினருக்கும் அரசாங்கம் அவர்களை அடக்கிப், பெரும்பான்மை சமூகத்தை நடத்துவதை விட, கடுமையாக நடத்தலாம் என்ற செய்தியைச் சொல்கிறது.

போதகர் ஜெரோம் முக்கிய கிறித்தவ தேவாலயங்களால் கூட சர்ச்சைக்குரியதாகக் கருதப்படும் சுவிசேஷ கிறித்தவர்களின் எண்ணிக்கையில் ஒரு சிறிய குழுவைச் சேர்ந்தவர். ஆனால் அவர் கைது செய்யப்பட்ட சூழ்நிலையானது சில நேரங்களில் இன மற்றும் மதச் சிறுபான்மையினர் மீதான அரசாங்கத்தின் வளர்ப்புத்தாய் மனப்பான்மையைக் குறிக்கின்றன. நாடு திரும்பியதும் கைது செய்யப்பட மாட்டார் என்று உயர் நீதிமன்றத்திடம் இருந்து உத்தரவு பெற்றிருந்த போதிலும் அவர் கைது செய்யப்பட்டார். இதற்கு முன்னரும் உள்ளூராட்சித் தேர்தலுக்கான நிதியை முடக்கக் கூடாது என்ற நீதித்துறை பிறப்பித்த உத்தரவை அரசாங்கம் கவனத்தில் கொள்ளாத நிலைப்பாடு நீதித்துறை உத்தரவுகளை அலட்சியப்படுத்துவதற்கு அரசாங்கம் அணியமாக இருப்பதைக் காட்டியுள்ளது. சட்டம் அனைவரையும் சமமாகப் பாதுகாக்கிறது என்ற அடிப்படையில் பொது மக்களிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்காக அரசாங்கம் அமைத்துள்ள பல "நல்லிணக்கப் பொறிமுறைகள்" செய்ய முயற்சிக்கும் நல்ல பணியை இது சிதைக்கிறது. இது மிகவும் வருந்தத்தக்கது.

சமச்சீரற்ற நீதி

போதகர் ஜெரோம் மீது சுமத்தப்பட்ட முக்கிய குற்றச்சாட்டு என்னவென்றால், அவர் தனது மதத்தை நிறுவியவர் மற்றவர்கள் பின்பற்ற வேண்டிய முன்மாதிரியாக இருப்பதாகக் கூறிப் பெரும்பான்மை மதத்தினரின் உணர்வுகளை புண்படுத்தினார் என்பதாகும். அதனடிப்படையில், மத நல்லிணக்கத்திற்கு மாறாக ஆத்திரமூட்டும் வகையில் கருத்துக்களை வெளியிட்ட குற்றச்சாட்டில் அவர் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டார். சந்தேகநபர் தனக்குச் சொந்தமான அற்புத குவிமாடத்தில் **(Miracle Dome)** செய்த பிரசங்கம் ஐ.சி.சி.பி.ஆர் சட்டத்தின் கீழ் குற்றம் இழைத்திருப்பதற்குப் போதுமான உண்மைகள் நீதிமன்றத்தில் அணைக்கப்பட்டுள்ளதாக நீதிபதி குறிப்பிட்டிருந்தார். சந்தேக நபரின் வாக்குமூலம் பவுத்தர்களுக்கும் ஏனைய மதங்களைப் பின்பற்றுபவர்களுக்கும் இடையில் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளதாக அரச தரப்பு அதற்கான உண்மைகளை நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ளதாகவும் நீதிபதி குறிப்பிட்டுள்ளார்.

மறுபுறம், ஒரு மரியாதைக்குரிய பவுத்த துறவிக்கு இழைக்கப்பட்டதை விட போதகர் ஜெரோம் நடத்தப்பட்ட விதம் மிகவும் கடுமையானது. தமிழ்ச் சமூகத்திற்கு எதிராக அச்சுறுத்தும் கருத்துக்களை வெளியிட்டதாகக் கூறப்படும் சுமனரத்தின தேரருக்கு எதிராக காவல்துறை நடவடிக்கை எடுக்காதது ஏன் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கேள்வி எழுப்பியுள்ளார்.. தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசனும் சுமனரத்தின தேரர் இன வெறுப்பையும் வன்முறையையும் தூண்டுகிறார் எனக் குற்றம் சாட்டியிருந்தார். "வணக்கத்திற்குரிய அம்பிட்டிய சுமனரத்தின **(Ampitiya Sumanarathana Thera.)** தேரர் கூறுகிறார்..."இல்லையென்றால் ஒவ்வொரு தமிழனும் வெட்டிக் கொல்லப்படுவார்கள். தெற்கில் உள்ள ஒவ்வொரு தமிழனையும் வெட்டிக் கொன்று விடுவோம்". இது ஐ.சி.சி.பி.ஆர் சட்டம் பிரிவு 3 ஐ தெளிவாக மீறுகிறது அல்லவா? இது சனாதிபதிக்கு" என நா.உ கணேசன் எக்ஸ் (**X**) இல் இடப்பட்ட ஒரு பதிவில் தெரிவித்துள்ளார்.

சிறுபான்மையினரின் உணர்வு அரசாங்கத்தால் புறக்கணிக்கப்படும் மேலும் இரண்டு முக்கியமான சிக்கல்கள் உள்ளன. உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்புச் சம்பவம் தற்போது நான்காவது ஆண்டில் அடியெடுத்து வைத்துள்ளது. முறையான விசாரணை எதுவும் இல்லை என்று குறிப்பிட்டுள்ள போப் பிரான்சிஸ், உண்மை மற்றும் நீதிக்கான தேடலைக் கைவிட வேண்டாம் என்று இலங்கையில் உள்ள கத்தோலிக்க திருச்சபையை வலியுறுத்தியுள்ளார். அடுத்தடுத்து வந்த அரசாங்கங்கள் இந்த விவகாரத்தை விசாரிக்கக் குழுக்களை நியமித்துள்ளன. தற்போதைய அரசாங்கம் அவ்வாறு செய்வதாக உறுதியளித்துள்ள போதிலும் குற்றவாளிகளைக் கைது செய்வதில் கணிசமான முன்னேற்றம் இல்லை. இக்குழுக்களின் அறிக்கைகளில் தங்கள் கடமைகளில் அலட்சியமாக இருந்தவர்கள் என்று பெயரிடப்பட்டவர்கள் பதவிகளில் தொடர்ந்து இருக்கின்றார்கள். பதவி உயர்வுகளும் பெற்று வருகின்றனர். குறிப்பிடத்தக்க வகையில், ஏநசவைந சுநளநயசஉா நிறுவனம் நடத்திய அண்மைய பொது கருத்துக் கணிப்பு, இலங்கை மக்கள்தொகையில் பாதிக்கும் மேற்பட்டவர்கள் - 53% - 2019 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களில் உள்ளூர் அரசியல் சக்திகள் ஈடுபட்டதாக நம்புகின்றனர். (தொடர்ச்சி 17ம் பக்கம்)

# அகவை எண்பது காணும் சிந்தனைப்பூக்கள் எஸ். பத்மநாதன்

**- குரு அரவிந்தன்**




சிந்தனைப்பூக்கள் பத்மநாதன் என்று தமிழ் இலக்கிய உலகில் அறியப்பட்ட உரையாளர், எழுத்தாளர் திரு. எஸ். பத்மநாதன் அவர்கள் இவ்வருடம் டிசெம்பர் மாதம் முத்து விழாக் கொண்டாடுகின்றார். இவர் இலங்கையின் வடக்கே யாழ்ப்பாணத்தில் உள்ள உரும்பிராய் என்ற ஊரில் பிறந்தார். ஆரம்ப கல்வியை உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயத்திலும், அதைத் தொடர்ந்து உரும்பிராய் இந்துக் கல்லூரி, ஸ்கந்தவரோதயா கல்லூரி, பேராதனை பல்கலைக் கழகம் ஆகியவற்றில் கல்வி கற்றார். பேராதனை பல்கலைக்கழகத்தில் புவியியல் சிறப்புப் பட்டமும், கொழும்பு பல்கலைக்கழகத்தில் கல்வி டிப்ளோமா பட்டமும் பெற்றவர். கனடாவில் ரொறன்ரோ வர்த்தகக் கல்லூரியில் 1993 ஆம் ஆண்டு 'பிரயாணமும் உல்லாசப் பயணமும்' என்னும் துறையில் டிப்ளோமா பட்டம் பெற்றுள்ளார்.

இலங்கையின் மலையகத்தில் உள்ள பதுளை, நுவரெலியா, பண்டாரவளை மாவட்டங்களில் சமூகக்கல்வி பாடசேவைக்கால ஆலோசகராகவும், பாடவிதான அபிவிருத்தி சபையில் நூலாக்கக் குழுவிலும், ஒஸ்மானியா கல்லூரியில் ஆசிரியராகவும், கோப்பாய் அரசினர் பயிற்சிக் கல்லூரியில் சமூகக் கல்வி விரிவுரையாளராகவும் பணியாற்றியுள்ளார். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் அறிவியல் அரங்கக் குழுவுடன் இணைந்து நிகழ்ச்சியை நடத்தியுள்ளார். இலங்கையில் இருந்து வெளிவரும் மல்லிகை, வீரகேசரி, தினபதி, ஈழநாடு, தினக்குரல் ஆகிய ஊடகங்களில் கல்வி, புவியியல் சம்பந்தமான கட்டுரைகள் எழுதியுள்ளார்.

1983 ஆம் ஆண்டு இலங்கையில் ஏற்பட்ட இனவழிப்பு நடவடிக்கை காரணமாகத் தனது குடும்பத்தின் பாதுகாப்புக் கருதி, 1985 ஆம் ஆண்டு கனடா நாட்டிற்குப் புலம் பெயர்ந்தார். கனடாவின் மொன்றியலில் தமிழர் ஒளி அமைப்பின் ஒருங்கிணைப்பாளராகவும் இருந்த இவர், இளங்கீற்று, தமிழ் ஒளி சஞ்சிகைகளில் இலக்கியப் பங்களிப்பும் செய்தார். சிறந்ததொரு உரையாளர் என்பதால், வான்தென்றல் வானொலியில் நிகழ்சிகளையும் செய்துள்ளார். ரொறன்ரோவில் ரேடியோ ஏசியா, கனடிய தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், கீதவாணி வானொலி, கனடியத் தமிழ் வானொலி போன்றவற்றில் நிகழ்ச்சிகளை நடத்தியிருக்கின்றார். தமிழருவி, நம்நாடு, ஈழநாடு, தமிழோசை, சுதந்திரன், முழக்கம், தமிழர் செந்தாமரை, தாய்வீடு, விளம்பரம், உதயன், மொன்சூன் ஜெர்னல் போன்ற பத்திரிகைளிலும், தமிழர் தகவல், தூறல், தளிர் ஆகிய சஞ்சிகைகளிலும் பல்துறை ஆக்கங்களை வெளியிட்டுள்ளார். இவர் பத்திரிகைகளிலும், இதழ்களிலும் அவ்வப்போது எழுதிய தனது கட்டுரைகளைச் 'சிந்தனைப்பூக்கள்' என்ற பெயரில் 5 பாகங்களாகத் தொகுத்து வெளியிட்டுள்ளார்.

ஐந்து தசாப்தங்களுக்கு மேலாக எழுத்துத் துறையில் ஈடுபட்டுள்ள இவர், உளவியல் மருத்துவத்துறையில் பல பெறுமதி வாய்ந்த கட்டுரைகளை எழுதி வருகின்றார். 2016 ஆம் ஆண்டு லண்டன் பத்திரிகை நடத்திய சர்வதேச கட்டுரைப் போட்டியிலும் முதலிடம் பெற்றுள்ளார். ஒன்ராரியோவில் தொண்டர் சேவைக்கான பல விருதுகளையும், , 2022 ஆம் ஆண்டு கனடா உதயன் பத்திரிகையின் தமிழ் இலக்கிய மேன்மை விருதையும் 2000 ஆம் ஆண்டு தமிழர் தகவலின் இலக்கிய சேவை விருதையும் பெற்றவர்.

15 வருடங்களுக்கான ஒன்ராறியோ தொண்டர் விருது, இலங்கை சமூக முன்னேற்றக் கழக சமாசத்தின் 'வித்யாஜோதி' விருது, தூறல் சஞ்சிகையின் வாழ்நாள் சாதனையாளர் விருது, கனடா எழுத்தாளர் இணையத்தின் இலக்கியவிருது, தமிழர் சேவை நிறுவனத்தின் 'பென்மனச் செல்வர்' விருது, சர்வதேச தமிழ் கலாச்சாரவிருது - ஒன்ராறியோ, போன்ற விருதுகளைப் பெற்ற இவர், கௌரவ டோலி பேகம், ஸ்காபரோ தென்மேற்கு மாகாண ஆட்சிமன்ற உறுப்பினரால் 'தமிழ் இலக்கிய, சமூகசேவை விருது' வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் காப்பாளராக இருக்கும் திரு. எஸ். பத்மநாதன் அவர்களுக்கு கனடா தமிழ் எழுத்தாளர் இணையம், 'ஒருவரை வாழும்போதே கௌரவிக்கும்' சிறந்த நோக்கத்தோடு, இவ்வருடம் 28-10-2023 ஆம் ஆண்டு வாழ்நாள் சாதனையாளர் விருது கொடுத்துக் கௌரவம் செய்திருந்தது குறிப்பிடத்தக்கது. திரு. எஸ். பத்தமநாதன் தம்பதியினர் நீண்டகாலம் ஆரோக்கியமாக வாழவேண்டும் என்றும், தமிழ் இலக்கியத்திற்கு அவர் மேலும் சிறப்பான பங்களிப்பு ஆற்ற வேண்டும் என்றும், கனடிய இலக்கிய ஆர்வலர்கள் சார்பாக நாங்களும் வாழ்த்துகின்றோம். வாழ்க நீடூழி!





125 வருட பாரம்பரிய காண்டம் நாடி ஜோதிடம்
N.P ராஜசேகர் தற்போது கனடா வில் வசிக்கிறார்.
மற்ற நாட்டில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம்

Contact - (416) 904-6278
21rajbhavan@gmail.com
16 Treeline Court Markham ONT
L3S 3T8 CANADA

1 வது காண்டம் : ஆண் வலது பெண் இடது கை பெருவிரல் ரேகை அல்லது ஜாதகத்தை கொண்டு ஜாதகம். பெயர் தாய். தந்தை. மனைவி. குழந்தைகள். சகோதர. சகோதரிகள் பொதுவான பலன் கூறுவது மற்றக் காண்டங்களை எடுக்க இந்தக் காண்டத்தை முதலில் அவசியம் எடுக்க வேண்டும்

2 வது காண்டம் : பணம், கண், குடும்பம், கல்வி, வாக்கு அதிர்ஷ்டகரங்கள் முதலியவைகளைக் கூறுவது

3 வது காண்டம் : சகோதர, சகோதரிகளின் எண்ணிக்கை அவர்களால் ஏற்படும் நன்மை தீமைகளைக் கூறுவது

4 வது காண்டம் : தாயார், மனை, நிலங்கள், வாகனம் வாழ்க்கையில் அடையும் சுகங்கள் மற்றும் மகிழ்ச்சிகளைக் கூறுவது

5 வது காண்டம் : குழந்தைகளின் பிறப்பு. புத்திரர்களால் ஏற்படும் நன்மைகள் குழந்தைகள் இல்லாததற்குக் காரணமும் கூறுவது

6 வது காண்டம் : வாழ்க்கையில் ஏற்படும் விரோதி, வியாதி, கடன், வழக்கு, எதிரிகளால் ஏற்படும் தொல்லைகள் முதலியவைகளைக் கூறுவது

7 வது காண்டம் : திருமண வாழ்க்கை, திருமணக்காலம், திருமணத்தைப் பற்றிய சில அடையாளக் குறிப்புகள் திருமணக் காலத்தைக் கடந்த காரணம், பொதுவான பலன்களும், திருமணம் ஆகியிருந்தால் கணவன் (அ) மனைவியைப் பற்றி கூறுவது

8 வது காண்டம் : ஆயுள்கால நிர்ணயம், நடுநடுவே ஏற்படும் கண்டம் விபத்து முதலியவைகளைக் கூறுவது

9 வது காண்டம் : தகப்பனார். செல்வம், யோகம், ஆலயதரிசனம், தர்மம், குருவினிடத்து உபதேசம் பெறுதல் முதலியவைகளைக் கூறுவது

10 வது காண்டம் : தொழில். வியாபாரம். உத்தியோகம், எந்த வியாபாரம் அல்லது தொழில் செய்தால் அதிக நன்மை கிடைக்கும் என்பதைக் கூறுவது

11 வது காண்டம் : இலாபம் எந்தெந்த வகையில் கிடைக்கும் என்பதையும், 2வது திருமணம் அதனால் அடையும் நன்மைகளையும் கூறுவது

12 வது காண்டம் : செலவு எவ்வகையில் ஏற்படும் என்பதையும். மோட்சம் அடுத்த பிறவியில் பிறக்கும் இடம், வாழும் தன்மை வெளிநாட்டுப்பயணம் முதலியவைகளையும் கூறுவது

பரிகார காண்டங்கள்

13 வது சாந்தி காண்டம் : பூர்வஜென்மத்தில் பிறந்த இடம். செய்த கர்மம். இவை அதனால் தற்போது அனுபவிக்கும் கஷ்டங்கள் அதை நீக்குவதற்கு உரிய பரிகாரமும் முதலியவைகளைக் கூறுவது

14 வது தீட்சை காண்டம் : மந்திரம். எந்த மந்திரம் ஜபித்து செய்து அணிந்து கொண்டால் தன்னுடைய காரியமும் குடும்ப காரியமும் வெற்றியடையும் என்பதைக் கூறுவது

15 வது ஒளஷத காண்டம் : வியாதிகளுக்கு எந்த மருந்து அல்லது மூலிகை சாப்பிடலாம் என்பதையும், சாப்பிடும் வகைகளையும் பத்தியங்களையும் விபரமாகக் கூறுவது

இவையல்லாமல் ஞான காண்டமும், தசாபுத்தி காண்டமும், பிரச்சினை காண்டமும், மகாசிவ வாக்கியமும் உள்ளது

குறிப்பு : ஜாதகம் அல்லது பிறந்த குறிப்பு உள்ளவர்கள் அதை கொண்டு வருவது நலம்

இலங்கை செய்திகள் Sri Lanka News

# இலங்கை நாடாளுமன்றத்தில் கல்வி, உயர்கல்வி அமைச்சுக்கள் மீதான விவாவதத்தில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி ஆற்றிய உரை



05-12-2023 அன்று நாடாளுமன்றத்தில் நடைபெற்ற கல்வி, உயர்கல்வி அமைச்சுக்கள் மீதான விவாவதத்தின் போது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆற்றிய உரையின் சாராம்சம் பின்வருமாறு;

ஆங்கில மொழி பொதுவாக எல்வோருக்கும் பரீட்சயமாக கொண்டு வருதற்குரிய பத்து வருட திட்டமொன்றை அறிமுகப்படுத்தியிருக்கிறீர்கள். அதற்காக கல்வியமைச்சர் மற்றும் ஏனைய துணை அமைச்சர்களையும் பாராட்ட விரும்புகிறேன்.

ஆங்கிலத்தில் கற்று ஆங்கிலத்தின் சாதகங்களை அறிந்தவன் என்ற வகையிலே அனைத்து மக்களுக்கும் அந்த வாய்ப்புக்கள் கிடைக்க வேண்டும் என்பது எனது விருப்பமாக இருந்தாலும், ஒரு நிபந்தனையை முன்வைக்க விரும்புகின்றேன். பல தசாப்தங்காள தமிழிலும் சிங்களத்திலும் கற்றுவந்தவர்களுக்கு திடீரென ஆங்கில மொழி பரீட்சயமாக வருவதற்கு சிறிது காலமெடுக்கும். காலங்காலமாக தாய்மொழியில் கற்று வந்தவர்களுக்கு சட்டக்கல்லூரியில் திடீரென - ஆங்கில மொழியில் பரீட்சை எடுக்க வேண்டும் என விதித்த நிபந்தனை முற்றிலும் தவறானதாகும். சட்டம் என்பது நுணுக்கங்களை கொண்ட விடயம். இந்த நிலையில் பரீட்சயம் இல்லாத புதுமொழியில் திடீரென திணிக்க முயல்வது பாதிப்புக்களை ஏற்படுத்தும். மாறாக சிறிய வயதிலிருந்தே ஆங்கிலத்தில் கற்கக் கூடிய வாய்ப்பை ஏற்படுத்தி நடைமுறைப்படுத்துவதே பொருத்தமாக இருக்கும். இதனை நீங்கள் கட்டாயம் கவனத்தில் எடுக்க வேண்டும்.

அடுத்ததாக, வடக்கு கிழக்கில் பாடசாலைகள் தொடர்பாக சொல்லும்போது, இன்று மாகாண சபைகள் இயங்குநிலையில் இல்லை. இந்த நிலையில் யாழ்ப்பாணத்தில் தெரிவுசெய்யப்பட்ட ஒரு கபினெட் அமைச்சர் வடக்கு கிழக்கு மாகாண கல்விசார்ந்த விடயங்களை தன்னுடைய சொந்த சொத்தாக பயன்படுத்தி மிக மோசமான தலையீடுகளை செய்து கொண்டிருக்கிறார்.

விசேடமாக இடமாற்றங்களில் இந்த தலையீடுகள் அதிகரித்துள்ளது.

2007/20 என்ற இடமாற்றச் சுற்றுநிருபம் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு மட்டுமல்ல முழு நாட்டுக்குமே பொதுவாக இருக்கக்கூடிய நிலையில், மாகாண சபைகளிலும் இவை நடைமுறையிலுள்ளன. ஆனால் வடக்கு கிழக்கில் மிக மோசமாக இருக்கின்றது. இதன் காரணமாக கல்வி நிர்வாகமே குழும்பிப்போகின்ற அளவுக்கு மிக மோசமான தலையீடுகளாக இருக்கின்றது.

ஆதலால் கல்வியமைச்சர் தலையிட்டு அரசியல் தலையீடுகள் அனைத்தும் நிறுத்தப்பட்டு முறைப்படி இடமாற்றச் சபையின் முடிவுகளை நடைமுறைப்படுத்துகின்ற ஒரு நிலைமையை உறுதிப்படுத்த வேண்டும். இந்த இடமாற்றச் சபைகளில் தொழிற்சங்கப் பிரதிநிதிகள், மற்றும் திணைக்களத் தலைவர்களும் பங்குகொள்கின்றனர். இங்கே சகல விடயங்களும் ஆராயப்பட்டே முடிவுகள் எடுக்கப்படும். ஆகவே அரசியல் தலையீடுகள் நடைபெறாதிருப்பதை நீங்கள் உறுதிப்படுத்தவேண்டும்.

அடுத்து, பாடசாலை அதிபர்கள் ஆசிரியர்கள் கடந்த வருடங்களில் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபட்டு, கடுமையான அழுத்தங்களை வழங்கிய நிலையில் அவர்களுக்கு வாக்குறுதிகள் வழங்கப்பட்டு - சுபோதினி ஆணைக்குழுவின் பரிந்துரைகளை மூன்று படிமுறைகளாக நடைமுறைப்படுத்துவதாக உறுதியளிக்கப்பட்டது. கடந்த காலங்களில் அதன் மூன்றில் ஒரு பகுதி மட்டுமே அவர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. ஆனால் இந்த வரவு செலவுத் திட்டத்தில் அவர்களுக்கு வழங்கவேண்டிய இரண்டாம் மற்றும் மூன்றாம் கட்டங்கள் தொடர்பாக எந்த விதமான விடயமும் இங்கு பதிவு செய்யப்படவில்லை. இவை முக்கியமாக கவனத்தில் எடுக்கப்படவேண்டிய விடயம்.

இன்றைக்கு அபிவிருத்தி அவசியமாக தேவைப்படும் நிலையில் கல்வியின் பங்களிப்பு என்பது மிகமுக்கியமானது. அது குழம்புவது என்பது ஆபத்தானதாகும். எனவே ஏற்கனவே நீங்கள் இணங்கிய விடயம் என்ற வகையில் மீண்டும் தொழிற்சங்க நடவடிக்கைகளுக்கு அவர்களைத் தள்ளாமல் நீங்களாகவே நடைமுறைப்படுத்துவதற்கு முன்வரவேண்டும் என்றும் இதனை தாமதமின்றி நிறைவேற்றவேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

பல்கலைக்கழகங்கள் சம்பந்தமாக சொல்லும்போது - இன்று மூளைசாலிகளின் வெளியேற்றம் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. கல்விமான்கள், தொழில்நுட்பவியல் சம்பந்தப்பட்டவர்கள் அனைவரும் நாட்டில் இருக்கக்கூடிய பொருளாதார நெருக்கடியைக் காரணமாக வெளிநாடுகளுக்கு செல்லுகின்ற ஒரு நிலைமை காணப்படுகின்றது. விசேடமாக - கல்வி சார் விடயத்தில் மட்டுமல்ல சுகாதாரத் துறையிலும் கணிசமானவர்களின் வெளியேற்றம் நடைபெறுகின்றன. இவை பெரும் பிரச்சினையான விடயமாகும். இதற்கு பிரதான காரணமாக வரிவிதிப்பு முறைகளில் மாற்றங்களை ஏற்படுத்தி கணிசமாக குறைக்க முடியும். இதன் மூலம் அவர்களை தொடர்ந்தும் இந்த நாட்டுக்குள் வைத்திருக்கக் கூடிய நிலைமையை உருவாக்கமுடியும். அதில் மாற்றங்களைக் கொண்டுவராதவிடத்து மூளைசாலிகள் வெளியேற்றம் பெரும் நெருக்கடியை ஏற்படுத்தப்போகின்றது.

விரிவுரையாளர்கள் தங்கள் உயர் பட்டத் தகைமைகளை வெளிநாடுகளில் சென்று பெறுவதற்கு பிணை ஒப்பந்தம் செய்து செல்லவேண்டும். இந்த பிணை ஒப்பந்தம் இறுக்கமாக நடைமுறைப்படுத்தப்படுகின்றது. அதற்கு காரணம் பிணை ஒப்பந்தம் செய்வதற்கு வெளிநாட்டில் புலமைப்பரிசில் வழங்கப்படும் தொகையும் சேர்க்கப்படுகின்றது. ரூபாயின் பலவீனமான இன்றைய நிலையில் குறித்த பிணைத்தொகையானது அதிகளவானதாக இருக்கும் நிலையில் உயர் கல்வி கற்க விரும்பும் விரிவுரையாளர்கள் குறித்த தொகை பிணைக்குரிய உத்தரவாதத்தை வழங்கும் நபர்களை வழங்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக - தமது விரிவுரையாளர்கள் பதவிகளை துறந்து வெளிநாடுகளுக்கு செல்கின்ற நிலை ஏற்பட்டுள்ளது. இதனாலும் கல்வியலாளர்களை கணிசமாக இழக்கப் போகின்றோம். வெளிநாட்டு பல்கலைக்கழகங்கள் புலமைப்பரிசில் வழங்கும் தொகைகளுக்கும் சேர்த்து இத்தகைய பிணை ஒப்பந்தங்களில் பணம் அறவீடு சேர்த்துக்கொள்ளும் முறைமையும் நிறுத்தப்படவேண்டும் என்ற யோசனையை முன்வைக்க விரும்புகின்றேன்.

வெளிநாடு செல்கின்றவர்களும் நாட்டுக்கு திரும்பிவரக்கூடிய நிலையே உருவாக்க வேண்டுமே தவிர, வெளிநாடு செல்பவர்கள் நிரந்தரமாக திரும்பி வர முடியாத சூழலை ஏற்படுத்துவது முட்டாள் தனமாகும்.

யாழ் பல்கலைக்கழக கலைப் பிரிவில் குறைந்த அளவான ஆளணியே காணப்படுகின்றது. இதனால் விரிவுரையாளர்களுக்கு அதிக வேலைப்பழு காணப்படுகின்றது. அந்த பழு காரணமாக அவர்கள் ஆய்வு மற்றும் வெளிக்கள ஆய்வுகள் எதுவும் செய்யமுடியாத நிலையில் - வெறுமனே அந்தப் பாடத்துறையில் உள்ள பாடத்திட்டங்களை நிவர்த்தி செய்வதற்குரிய வேலைகளையே செய்துகொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட கல்விக் கலாசாரம் மிகமோசமாகவே அமையும். அந்தவகையில் இவ்விடயம் தொடர்பாக கலைப்பீட மாணவர் ஒன்றியம் எழுதிய கடிதம் ஒன்றையும் சபைக்கு சமர்ப்பிக்கின்றேன். இதனை கருத்தில் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

கொழும்பு பல்கலைக்கழகத்துக்கும் கொழும்புக்கு வெளியே இருக்கக்கூடிய பல்கலைக்கழகங்களுக்கும் பாரிய வேறுபாடுகள் காணப்படுகின்றன. அவை பாரபட்சங்களாக உள்ளன. விசேடமாக வடக்கு கிழக்கில் இருக்கும் பல்கலைக்கழகங்களில் பாரபட்சங்கள் மிக அதிகம். இந்த பாரபட்சம் மனித வலு ஒதுக்கீடுகளில் மிகப்பெரும் அளவில் காணப்படுகின்றது.

உதாரணமாக 2022 ற்கான சமூகவியல் புள்ளிவிபரம் எடுத்துக் காட்டுகின்றேன்.

அரசுக்கு புதிய ஆளணி ஒதுக்கீடுகளை செய்ய முடியாது விட்டாலும் இருக்கின்ற ஆளணியை சமமாகப் பிரிக்கின்ற முறைமையை செய்யாமல், வெறுமனே ஒருசில பல்கலைக்கழகங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து ஏனைய பல்கலைக்கழகங்களுக்கு கடும் சுமையை கொடுக்கின்ற வகையில் நடந்துகொள்வது ஓரம் கட்டும் செயற்பாடாகவே அமையும்.

என்னைப் பொறுத்த வரையில், பல்கலைக்கழகங்கள் சுதந்திரமான சிந்தனை கொள்ளக்கூடிய இடமாக இருக்க வேண்டும். நாட்டினுடைய ஒட்டுமொத்த எதிர்காலத்துக்கும் வளர்ச்சிக்கும் திறந்த சிந்தனை மையமாக அது இல்லாது விட்டால் அதன் நோக்கமே தோற்கடிக்கப்படுவதாகவே அமையும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமும் கிழக்கு பல்கலைக்கழகமும் கடுமையாக இராணுவ மயப்படுத்தப்படுகின்றது. இராணுவ தலையீடுகள் மிகவும் அதிகம். அவர்கள் தான் கணிசமான தீர்மானங்களை மேற்கொண்டு தடைகளை உருவாக்குகிறார்கள். பல்கலைக்கழகங்களில் அரசியல் சிந்தனைகளையும் திறந்த உரையாடலுக்கும் விடவேண்டும். ஆனால் யாழ்ப்பாணத்திலும் ஏனைய தமிழ் பல்கலைக்கழகங்களிலும் கடும் கட்டுப்பாடுகளை விதிக்கிறார்கள். அங்கே அரசியலே இருக்கக்கூடாது என்கின்ற அளவுக்குதான் இந்த கட்டுப்பாடுகள் இருக்கிறது. இது என்னைப்பொறுதத்தவரையில் பொருத்தமற்ற ஒரு விடயம். இந்தவகையில் இந்த மாற்றங்களையும் செய்ய வேண்டும் என்று வலியுறுத்த விரும்புகின்றேன்.

இதன் போது நாடாளுமன்ற உறுப்பினர் சுரேன் ராகவன் கருத்து தெரிவித்தபோது:

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலே சட்டத்தரணி சுவஸ்திகா பேசவிடாமல் தடுக்கப்ப்பட்டார். உண்மையிலே அங்கே இருப்பவர்கள் தான் தடுக்கிறார்களே தவிர வெளித்தரப்பாலோ இராணுவத்தாலோ சொல்லப்பட்ட விடயம் அல்ல என்னும் விடயத்தை சுட்டிக்காட்ட விரும்புகின்றேன், என்று குறிப்பிட்டிருந்தார்.

இதற்குப் பதிலளித்திருந்த கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.

தனிப்பட்ட முறையில் அந்த அம்மையார் தனது கருத்தைப் பதிவு செய்வதற்கு நான் எதிர்ப்பவன் அல்ல. அவரை உரையாற்ற அனுமதித்திருக்க வேண்டும் என்பதுதான் எனது தனிப்பட்ட கருத்து. ஆனால் - அதற்கு எதிர்ப்பு தெரிவித்ததற்கான நியாயம் என்னவென்றால், அந்த அம்மையாருடைய அரசியல் கருத்துக்களுக்கு நேர் மாறான கருத்தை அந்த பல்கலைக்கழகத்திலோ அல்லது இந்த நாட்டில் இருக்கக் கூடிய எந்தவொரு பல்கலைக்கழகங்களிலோ போய் சொல்ல முடியாது. அந்த அம்மையார் சொல்லும் கருத்தை எல்லா இடத்திலும் போய் சொல்ல முடியும். அதற்கு ஒரு தடையும் விதிக்காமல் வரவேற்பார்கள். ஆனால் இந்தக் கருத்துக்கு நேர்மாறான கருத்துதான் மிகப் பெரும் பெரும்பான்மையினரின் கருத்தாக வடக்கு கிழக்கில் இருக்கத் தக்கதாக, சுவஸ்திகா போன்றோரின் கருத்தை திணிப்பதற்கு பார்க்கிறார்களே தவிர, அதற்கு நேர் மாறான கருத்தை எந்தவொரு இடத்திலும் - குறிப்பாக வடக்கு கிழக்கிலும் சரி அதற்கு வெளியிலும் இருக்கும் பல்கலைக்கழகங்களிலும் சரி கதைக்க முடியாது.

ஆகவே, இதனைத்தான் நான் சொல்லுகின்றேன். இந்த சிந்தனை சுதந்திரத்தை எந்தவொரு தடையும் விதிக்காமல் முழுமையாக அமுல்படுத்த வேண்டும். அதை செய்யாமல் வெறுமனே ஒரே ஒரு கருத்தை மட்டும் திணிக்க முயல்வதை ஏற்கமுடியாது, என்று பதிலளித்திருந்தார்.

## நல்லிணக்க செயல்முறைக்கு நேர்மை மற்றும் சமமான நடத்தை தேவை

(16ம் பக்கத் தொடர்ச்சி)

தொலைதூர அடிவானம்:
சிறுபான்மையினரின் உணர்வுகள் புறக்கணிக்கப்பட்ட அல்லது மறுக்கப்பட்ட மற்றொரு சிக்கல் அரசியலமைப்புப் பேரவையில் நிரப்பப்படாத வெற்றிடம் தொடர்பானது. உயர் நீதித்துறை, தேர்தல்கள் ஆணைக்குழு, காவல்துறை ஆணைக்குழு, மனித உரிமைகள் ஆணைக்குழு, தேசிய கணக்காய்வு ஆணைக்குழு, அரசாங்க சேவைகள் ஆணைக் குழு மற்றும் இலஞ்சம் போன்ற சக்திவாய்ந்த மற்றும் முக்கியமான அரச நிறுவனங்களில் நேர்மையுள்ள சுயாதீ-னமான நபர்கள் மட்டுமே நியமிக்கப்படுவதை உறுதி செய்வதற்கான நாட்டின் மிக உயர்ந்த தரவரிசை கண்காணிப்பு அமைப்பாகும்.

எவ்வாறெனினும், நாடாளுமன்றத்தில் மூன்றாவது பெரிய கட்சியாக தமிழ்த் தேசி-யக் கூட்டமைப்பினால் நிரப்பப்பட வேண்டிய அரசியலமைப்பு சபையில் உள்ள வெற்றிடம், பிற மூன்றாவது பெரிய அரசியல் கட்சிகள் உள்ளன என்ற அடிப்படையில் அதற்கு வழங்கப்படவில்லை.

நாடாளுமன்றத்தில் உரையாற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், "அரசியலமைப்புப் பேரவையில் இழுபறி நிலை காணப்படுகின்றது, இது அனைவருக்கும் தெரியும். இன்னும் ஒரு இடம் காலியாக இருக்கும் போது, ஒரு முட்டுக்கட்டை நிலைமை நிலவுகிறது. அந்த இடம் நிரப்பப்பட்டிருந்தால் முட்டுக்கட்டை ஏற்பட்டிருக்காது. எனவே, இந்த நாட்டில் அனைவரும் சமம், அனைவருக்கும் சமமான பிரதிநிதித்துவம் உள்ளது என்று நீங்கள் கூறினாலும், மிக முக்கியமான அமைப்பான அரசியலமைப்புப் பேர-வையில் நீங்கள் இன்னும் எங்களின் இடத்தைப் பறித்துள்ளீர்கள் என்பதை நாடு அறிந்து கொள்ள வேண்டும். நீங்கள் எப்படி யாரையும் நேருக்கு நேர் பார்த்து, இது சரியான ஆளுகை என்று கூற முடியும்? எனவே இன்று நான் இதை ஒரு தீவிரமான சிக்கலாக எழுப்புகின்றேன். அரசியலமைப்புப் பேரவையில் வெற்றிடத்தை நிரப்புவது மாத்திரமன்றி, ஒரு பாரதூரமான தேசியச் சிக்கலாகவும் இது உள்ளது. இந்த நாட்டின் தேசிய வாழ்க்கையில் இருந்து நாங்கள் விலக்கி வைக்கப்பட்டுள்ளோம் என்று நாங்கள் பல தசாப்தங்களாக முறையிட்டு வருகி-றோம். அரசியலமைப்புப் பேரவையில் இருந்து விலக்கி வைக்கப்படுவது மற்றுமொரு எடுத்துக்காட்டாகும்."

அரசியலமைப்பு பேரவையில் அனைத்து இன, மத சமூகங்களும் அரசியல் பிரதிநிதித்துவத்தைப் பெறும் ஒரு பல்லின, பன்முக மதம் மற்றும் பன்மைத்துவ சமூகத்தின் அடிப்படைக் கொள்கை, தேசிய நல்லிணக்க செயன்முறை

அதன் உண்மையான அர்ப்பணிப்புக் குறித்து சர்வதே சமூகத்தை நம்பவைக்க கடுமையாக முயற்சிக்கும் அரசாங்கத்தால் மறுககப்படுகிறது. தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு சட்டமூலம் போன்ற புதிய சட்டங்களைக் அது கொண்டு வரவுள்ளது. ஆனால் நல்லிணக்கத்திற்கான அடிப்படை முன்நிபந்தனை, அதாவது சட்ட அமுலாக்க அதிகாரிகள் தங்களை நடத்தும் விதத்திலும் அந்த நிறுவனங்களுக்குத் தலைமை தாங்குபவர்கள் தேர்ந்தெடுக்கப்படும் விதத்திலும் நம்பிக்கையும் சிறுபான்மைக் கண்ணோட்டத்தில் திருப்திகரமாக இல்லை. என்னதான் வார்த்தைகள், புதிய சட்டங்கள் இயற்றப்பட்டாலும், நிறுவப்பட்ட நிறுவனங்களைப் பொருட்படுத்தாமல், நியாயம் இல்லாத நிலையில், அனைவரும் சமமாக நடத்தப்படாத நிலையில் தேசிய நல்லிணக்கம் என்பது தொலைதூ ரத்தில் உள்ள ஒரு கனவு போலவே இருக்கும்.

(இந்தக் கட்டுரையின ஆங்கில மூலத்தை **https://www.colombotelegraph.com/index.php/reconciliation-process-requires-fairness-equal-treatment/** என்ற இணையதளத்தில் படித்துக் கொள்ளலாம். தமிழாக்கம்: கனடா நக்கீரன்.)

கனடிய செய்திகள்
Canadian News

# கனடாவில் இடம்பெற்ற நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் 3வது பாராளுமன்றத்தின் 10வது அமர்வு

## இலங்கை அரசின் போர்க்குற்றச் செயல்களுக்கு தகுந்த தண்டனையை பெற்று கொடுக்க வேண்டும் என்ற ஒருமித்த குரல் அங்கு ஓங்கி ஒலித்தது

**- கனடாவிலிருந்து ஆர். என். லோகேந்திரலிங்கம் -**





கனடாவின் மார்க்கம் நகரில் அமைந்துள்ள அரச நூதன சாலை மாநாட்டு மண்டபத்தில் டிசம்பர் 1ம் நடைபெற்ற நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் 3வது பாராளுமன்றத்தின் 10வது அமர்வும் அரசாங்கத்தின் மூதவை உறுப்பினர்களின் அமர்வும் நேர்த்தியான முறையிலும் திட்டமிட்டட வகையிலும் பயனுள்ள உரைகளைக் கொண்டவையாகவும் திகழ்ந்தன என்பது குறிப்பிடத்தக்கது.









மேலும் அந்த அமர்வில் இடம்பெற்ற சிறப்பு விருந்தினர்களின் உரைகள் அனைத்தும் மிகுந்த கவனத்துடன் தயாரிக்கப்பெற்ற உரைகளாகவும் ஈழத்தமிழர்கள் அனுபவித்த வலிகள் துன்பங்கள் ஆகியவற்றுக்கு பதில் சொல்லும் வகையில் இலங்கை அரசை சர்வதேச குற்றவியல் நீதி மன்றத்திற்கு விசாரணைக்காக கொண்டு வகையில் தமிழ் மக்கள் மாத்திரமல்ல கொடுமைகளுக்கு எதிராக குரல் கொடுக்கும் அனைத்து தரப்பினரும் கூட்டாக செயற்பட வேண்டும் என்றும் இலங்கை அரசின் போர்க்குற்றச் செயல்களுக்கு தகுந்த தண்டனையை பெற்று கொடுக்க வேண்டும் என்ற ஒருமித்த குரல் அங்கு ஓங்கி ஒலித்தது என்றே கூற வேண்டும்.

அன்றைய அமர்வின் ஆரம்பத்தில் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் சபாநாயகர் திருமதி. முருகதாஸ் அமர்விற்கு தலைமை தாங்கும் வண்ணம் அழைக்கப்பெற்றார். தொடர்ந்து அரசாங்கத்தின் முன்னாள் அமைச்சரும் கனடாவில் சிறப்பாக செயற்பட்டு வருபவருமான நிமால் விநாயகமூர்த்தி அவர்கள் வரவேற்புரையாற்றினார். அவர் தனது உரையில் தமிழ்த் தேசியத்தின் மீதும் தாயகத் தமிழர்களுக்கு விடிவைப் பெற்றுத்தரவும் அரசியல் ரீதியாகவும் ஜனநாயக வழியிலும் இந்த அமைப்பில் இணைந்து செயற்பட்டு வருகின்ற உறுப்பினர்கள் அமைச்சர்கள் மற்றும் பிரதமர் அனைவருக்கு நன்றியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்தார்.

தொடர்ந்து நாடு கடந்த அரசாங்கம் என்ற அமைப்பின் கோட்பாடுகளை நன்கு அறிந்தவர்களும் அமெரிக்காவில் வாழும் சட்டத்தரணிகளுமான திருவாளர் ரொபேர்ட் அவெட்டிஸ்யன் - Mr. Robert Avertisyan - மற்றும் அசோக் அரோரா - Mr. Ashok Arora - மற்றும் கனடா வாழ் பேராசிரியர் சந்திரகாந்தன் ஆகியோர் சிறப்புரைகளை வழங்கினார்கள். அவர்களின் உரைகள் அனைத்தும் இணையவழி ஊடாக நூற்றுக்கணக்கான பார்வையாளர்களைச் சென்றடைந்தது என்றால் அது மிகையாகாது. அவர்கள் தமது உரைகளை இதயசுத்தியோடு வழங்கினார்கள் என்பதை பார்வையாளர்கள் நன்கு உணர்ந்து கொண்டனர்.



தொடர்ந்து, நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் மூதவை உறுப்பினர்கள் மற்றும் சபை உறுப்பினர்கள் அமைச்சர்கள் கலந்து கொண்ட கலந்துரையாடல்கள் இடம்பெற்றன. அதில் நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் செயற்பாடுகளை எவ்வாறு விரிவு படுத்துவது மற்றும் அங்கத்தவர்களின் தொகையை அதிகரித்து செயற்படுவது. மற்றும் தாயகத்தில் உதவிகள் தேவைப்படும் பொது மக்கள். முன்னாள் போராளிகள். அவர்களின் குடும்பங்கள் போன்றவற்றிக்கு வழங்க வேண்டிய உதவிகள் ஆகியவை தொடர்பாகவும் ஆராயப்பட்டன. அந்த கலந்துரையாடலில் பரிமாறப்பட்ட கருத்துக்கள் அனைத்து உறுப்பினர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

# கனடாத் தமிழ்க் கவிஞர் கழகத்தின் புதிய செயற்குழு

கனடாத் தமிழ்க் கவிஞர் கழகத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் அண்மையில் நடைபெற்றது. பின்வருவோர் 2023 - 2025 ஆம் ஆண்டுக்கான புதிய செயற்குழு உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

| | |
|---|---|
| தலைவர்: | பாவலர் குமரகுரு கணபதிப்பிள்ளை |
| செயலாளர்: | பாவலர் பவானி தர்மகுலசிங்கம் |
| பொருளாளர்: | பாவலர் மாவிலி மைந்தன் சின்னத்தம்பி சண்முகராஜா |
| துணைத் தலைவர்: | பாவலர் இராஜ்மீரா இராசையா |
| துணைச் செயலாளர்: | பாவலர் சுகந்தி மார்க்கண்டு |
| உறுப்பினர்கள்: | பாவலர் கந்த. ஸ்ரீபஞ்சநாதன் |
| | பாவலர் மதிபாஸ்கரன் கணபதிப்பிள்ளை |
| | கவிஞர் சயந்தன் பசுபதி |
| | கவிஞர் ரஜினி சுபாஷ்கரன் |
| கணக்காய்வாளர்: | பாவலர் அகணி சுரேஷ் |
| மலர்க்குழு: | இதழாசிரியர் பாவலர் மாவிலி மைந்தன் சி. சண்முகராஜா |
| குழு உறுப்பினர்கள், | பாவலர் சர்வாம்பிகை வாசுதேவன் |
| | பாவலர் சுகந்தி மார்க்கண்டு |

# மேல் மருவத்தூர் ஆதிபராசக்தி குரு மன்றத்தில் அமாவாசை பூசை



ஆதிபராசக்தி குரு மன்றத்தில் 12-12-2023 செவ்வாய்கிழமை அமாவாசை பூசை காலை 8:30 தொடக்கம் 12:00 மணிவரை சிறப்பாக நமைபெறவுள்ளது.

அனைத்து சக்திகளையும் அன்புடன் அழைக்கின்றனர்.

**80 நாஸ்டீன் வீதி ஸ்காபரோ கனடாவில் அமைந்திருக்கும் மேல்வருவத்தூர் ஆதிபராசக்தி குரு மன்ற சக்திகள்**

**(647) 436-9647**

TRADITIONAL CHINESE ACUPUNCTURE THERAPY

எல்லாவிமான வலிகளுக்கும்
ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை
மனத்தளர்ச்சி, தலைவலி
நீரிழிவு நோய், வயிற்றுவலி
மாதவிடதய் சம்மந்தமானவையும்
உடற்பருமன் குறைத்தல்

All Pain & Aches, Arthritis
Asthma, Sinusitis, Rhinitis Allergies
Stress, Migraine & All Types of Headaches
Diabetes, Gastric Pain, Ulcer
Menstruation
Weight Loss

முதலான சகலவிதமான நோய்களுக்கும்

Mrs. K. Vasanthakumar ஐ
Acupuncturist (R.A.C)
தொடர்புகொள்ளவும்.

(416) 754-4024

5200 Finch Ave., East -- Suit #349
Scarborough, ON M1S 4Z5



- நடராசா லோகதயாளன் -

# விண்வெளியில் சீனாவை எதிர்கொள்ள அமெரிக்கா தலைமையிலான நாடுகள் புது கூட்டு ஒப்பந்தம்

**சீ**னாவின் விண்வெளி ஆயுதமயமாக்கலை எதிர்கொள்ள அமெரிக்க தலைமையிலான AUKUS ஆழமான விண்வெளி மேம்பட்ட ரேடார் திறனை (DARC) பயன்படுத்த அமெரிக்கா, ஆஸ்திரேலியா மற்றும் பிரிட்டனின் பாதுகாப்புத் தலைவர்கள் கூட்டு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளனர்.

இது ஓர் புதிய மைல்கல் ரேடார் முன்முயற்சியாக அமெரிக்கா, இங்கிலாந்து மற்றும் ஆஸ்திரேலியாவை ஆழமான விண்வெளியில் உள்ள பொருட்களை சிறப்பாகக் கண்டறியவும், கண்காணிக்கவும் மற்றும் அடையாளம் காணவும் அனுமதிக்கும் நோக்கில் அமெரிக்கா, ஆஸ்திரேலியா மற்றும் பிரிட்டனின் பாதுகாப்புத் தலைவர்கள் டிசம்பர் முதலாம் திகதி அன்று கலிபோர்னியாவில் சந்தித்தபோது ஒப்புக்கொண்ட ஒப்பந்தங்களில் இந்த விடயமும் ஒன்றாகும் என தற்போது சுட்டிக்காட்டப்படுகின்றது.

மூன்று நாடுகளின் பாதுகாப்புத் தலைவர்கள் அமெரிக்க தொழில்நுட்பத் துறையின் மையமான சிலிக்கான் பள்ளத்தாக்கில் உள்ள அமெரிக்க இராணுவத்தின் பாதுகாப்பு தொழில்நுட்ப மையத்தில் கூடியுள்ளனர். இதில் உயர் தொழில்நுட்பத்தின் இராணுவ பயன்பாடுகளில் ஒத்துழைப்பதற்கான ட்ரோன்கள் முதல் மின்னணு போர் வரை இந்தோனேசியா - பசிபிக் பகுதியில் சீனா வேகமாக வளர்ந்து வருவதனை எதிர்கொள்ள ஒரு பரந்த முயற்சியாக இது கருதப்படுகின்றது.

அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் லாயிட் ஆஸ்டின் ஆஸ்திரேலிய பாதுகாப்பு அமைச்சர் ரிச்சர்ட் மார்லஸ் மற்றும் பிரித்தானிய பாதுகாப்பு செயலர் கிராண்ட் ஷாப்ஸ் ஆகியோரை சந்தித்தார். வளர்ந்து வரும் உலகளாவிய அச்சுறுத்தல்களை எதிர்கொள்வதில் உள்ள நெருக்கடி, சீனா திறன்களை அதிகரிப்பதில் இருந்து அந்தந்த மற்றும் கூட்டு ஆயுதப் படைகளை வலுப்படுத்த ஆழமான விண்வெளி ரேடார், செயற்கை நுண்ணறிவு மற்றும் குவாண்டம் கணினி அமைப்புகளில் உயர் தொழில்நுட்ப ஒத்துழைப்பை உள்ளடக்கிய விரிவான விவாதங்களை இதன்போது அமெரிக்கத் தரப்பில் அவர் நடத்தியுள்ளார்.

ஆஸ்திரேலியா, ஐக்கிய இராச்சியம் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கு இடையேயான இந்தோ - பசிபிக் பிராந்தியத்திற்கான பாதுகாப்பு கூட்டாண்மையான மூன்று நாடுகளின் யுருமுருளு ஏற்பாட்டின் ஒரு பகுதியாக இந்த ஆராய்வுகள் நடத்தப்பட்டுள்ளன.

மேம்படுத்தப்பட்ட முத்தரப்பு ஒத்துழைப்பு, சீனாவின் வளர்ந்து வரும் பாதுகாப்புச் செலவுகள் மற்றும் இந்தோ - பசிபிக் பிராந்தியத்தில் சீனா இராணுவப் பிரசன்னத்தை வேகமாக விரிவுபடுத்துவது பற்றிய கவலைகளால் இயக்கப்படுகிறது. இந்த ஒத்துழைப்பில் அமெரிக்கா தனது நட்பு நாடுகளுடன் ஒத்துழைப்பதற்கு முக்கியத்துவம் அளிக்கும் முக்கியத்துவத்தை வலியுறுத்தி, பாதுகாப்பு செயலர் லாயிட் ஆஸ்டின் ஊடகங்களுக்கு அளித்த அறிக்கையில், "அகஸ் என்பது ஒரு தலைமுறைக்கு ஒருமுறை கிடைக்கும் வாய்ப்பாகும், இது அமைதி மற்றும் அமைதியை மேம்படுத்தும் என்பதை காட்டுகிறது.

பூமியில் இருந்து 22 ஆயிரம் மைல்கள் (36,000 கிலோமீட்டர்) தொலைவில் உள்ள விண்வெளியில் உள்ள பொருட்களை வகைப்படுத்தும் AUKUS நாடுகளின் திறனை அதிகரிக்கும் 24/7, அனைத்து வானிலை திறன்களையும் DARC வழங்க உள்ளதாகவும் இதற்கு மூன்று தரை ரேடார்களை அமைப்பது, ஒரு கூட்டு உலகளாவிய வலையமைப்பின் முக்கியமான விண்வெளி போக்குவரத்து மேலாண்மைக்கு உதவும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதில் யு.எஸ், யு.கே மற்றும் ஆஸ்திரேலியாவின் தனித்துவமான புவியியல் நிலைப்பாடு, பாதுகாப்பு அல்லது சிவிலியன் விண்வெளி அமைப்புகளுக்கு சாத்தியமான அச்சுறுத்தல்களைக் கண்டறிவது உட்பட, உலகளாவிய கவரேஜை DARC வழங்க முடியும் என்பதைக் குறிக்கிறது. மேற்கு ஆஸ்திரேலியாவில் கட்டப்படும் முதல் ரேடார், 2026ல் செயல்படும், மற்றவை 2030க்குள் இயக்கப்படும் எனவும் கூறப்பட்டுள்ளது.

விண்வெளியில் பொருளாதார மற்றும் இராணுவ சார்பு அதிகரிப்பது எதிரிகளுக்கு கவர்ச்சிகரமான இலக்காக இருக்கும் பாதிப்பை உருவாக்குகிறது.

DARC இன் பாதுகாப்பு நலன்கள் குறித்து, UK பாதுகாப்புச் செயலர் Grant Shapps, "உலகம் மேலும் போட்டியிட்டு, விண்வெளிப் போரின் ஆபத்து அதிகரித்து வருவதால், இங்கிலாந்தும் நமது நட்பு நாடுகளும் நமது நாடுகளைப் பாதுகாப்பாக வைத்திருக்க தேவையான மேம்பட்ட திறன்களை எங்களிடம் வைத்திருப்பதை உறுதி செய்ய வேண்டும்".

அதிகரித்த உயர் தொழில்நுட்ப ஒத்துழைப்பை ஆஸ்திரேலிய பாதுகாப்பு மந்திரி ரிச்சர்ட் மார்லஸ், இந்த சந்திப்பு "AUKUS இன் தூண் வரலாற்றில் ஒரு முக்கியமான தருணமாக கருதப்படும், மேலும் இது எங்கள் மூன்று நாடுகளுக்கும் இடையே மேம்பட்ட தொழில்நுட்பங்களின் பகிர்வு மற்றும் மேம்பாடு ஆகும்" என்றும் கூறியுள்ளார்.

விண்வெளியில் இன்றைய செயல்பாடு உலகளாவிய இராணுவ சக்திகளுக்கு மட்டுப்படுத்தப்படவில்லை. உண்மையில், பல நாடுகள் தடைசெய்யலாம், செயல்பாடுகளை மறுக்கலாம் அல்லது உடல்ரீதியாக அழிக்கலாம் விண்வெளி அமைப்புகள் மற்றும் அவற்றைக் கட்டளையிடும், கட்டுப்படுத்தும் தரை வசதிகள். ஒப்பீட்டளவில் நுட்பமற்ற ஆப்டிகல், ரேடார், சிக்னல் கண்காணிப்பு அமைப்புகளிலிருந்து கூட, ஒரு நாட்டின் செயற்கைக்கோளின் நிலை மற்றும் வேகம் பற்றிய அறிவை இப்போது பெறலாம்.

சீனா, வான் மற்றும் தியேட்டர் ஏவுகணை பாதுகாப்பு ரேடார்கள் மூலம் குறைந்த பூமியின் சுற்றுப்பாதையில் (LEO) பொருட்களை துல்லியமாக கண்டறிய விண்வெளி அடிப்படையிலான கண்காணிப்பு அமைப்புகளை களமிறக்க முடியும்.

விண்வெளி அச்சுறுத்தல்கள் அமெரிக்க மற்றும் அதன் நட்பு நாடுகளின் விண்வெளி அமைப்புகளுக்கு நேரடி அச்சுறுத்தல். விண்வெளி அமைப்புகள் வெளிநாட்டு பயன்பாட்டிலிருந்து இராணுவப் படைகளுக்கு அச்சுறுத்தல்கள் போன்ற வடிவத்தை எடுக்கலாம்.

# முல்லைத்தீவில் லஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் இரு கிராம சேவகர்கள் இடைநீக்கம்

**இரு கிராம சேவகர்களிற்கும் உயிரோடு இருக்கும் தந்தையர் இறுதிப் போரின்போது மரணித்து விட்டதாக சான்றுப் பத்திரங்கள்பெறுவதற்காக தலா ஒரு லட்சம் வழங்கிய ஐரோப்பிய நாடு ஒன்றிற்கு புலம்பெயர்ந்த இரு இளைஞர்கள்.**

**போ**ரினால் மிகவும் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்டத்தில், வெளிநாட்டில் நிரந்தரமாகத் தங்கும் உரிமை பெறும் நோக்கில் சிலருக்கு சட்டவிரோதமாக உதவி செய்ததான குற்றச்சாட்டில் கிராம சேவகர்கள் இருவர் பணியிலிருந்து இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இருந்தபோதும் இவர்களுக்கு திணைக்கள ரீதியில் அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் பெறப்பட்ட பதிலில் கண்டறியப்பட்டுள்ளது.

இலங்கையில் நீடிக்கும் அசாதாரண சூழ்நிலைகள் (இனப் பிரச்சனையின், பொருளாதார நெருக்கடி) காரணமாக ஏதோ ஒரு வகையில் நாட்டை விட்டு பிரஜைகளின் வெளியேற்றம் தொடர்கின்றது. குறிப்பாக வடக்கு கிழக்கு பகுதிகளில் இருந்து ஐரோப்பிய நாடுகள் உள்ளிட்ட வெளிநாடுகளிற்கு புலம் பெயர்கின்ற நிலைமைகள் தீவிரமடைந்துள்ளன. இதன் காரணமாக வெளிநாட்டிற்கு புலம்பெயர்ந்து செல்பவர்கள் தங்களை அந்த நாட்டில் நிரந்தமாகத் தங்கும் நோக்கில் பிராஜா உரிமையை பெறுவதற்காக பல்வேறு விதமான முயற்சிகளில் ஈடுபடுவது வழக்கமாகிவிட்டது.

இதற்காக அவர்கள் உள்நாட்டில் இருந்து பெற்றுக்கொள்ள வேண்டிய ஆவணங்களை அவசர அவசரமாக செயல்பாடுகளில் ஈடுபடுகின்றனர். அந்தந்த நாடுகளின் தேவைகளுக்கு இசைவாக தகுதிகளை பூர்த்தி செய்யக்கூடிய வல்லமை மிக்க ஆவணங்களை தயார் செய்து அவை ஆதாரபூர்வமாக தோன்றுவதாகவும் இருக்கும் வகையில் அவற்றை பெற்றுக்கொள்வதற்காக அரச, தனியார் கட்டமைப்புக்களின் அதிகாரிகளிற்கு லஞ்சம் வழங்கும் நிலைமைகள் காணப்படுகின்றது.

இந்தப் பின்னணியில் முல்லைத்தீவில் இருந்து ஐரோப்பிய நாடு ஒன்றிற்கு புலம்பெயர்ந்த இரு இளைஞர்கள் தமக்கான நிரந்தர வதிவிட உரித்தைப் பெறுவதற்காக குறிப்பிட்ட நாட்டினால் கோரப்பட்ட நிபந்தனையை பூர்த்தி செய்ய வேண்டியிருந்தது. இதற்காக இவர்கள் தாங்கள் வசித்த கிராமத்தின் உத்தியோகத்தர்களை அனுகி ஆவணங்களை தயார் செய்ய முனைந்துள்ளனர். அதற்கு அமைவாக இரு கிராம சேவகர்களிற்கும் தலா ஒரு லட்சம் ரூபாவை வழங்கி உயிரோடு இருக்கும் தந்தையர் இறுதிப் போரின்போது மரணித்து விட்டதாக சான்றுப் பத்திரங்களை தயாரித்துள்ளனர்.

இத்துடன் புலம்பெயர் இளைஞர்களின் தேவை பூர்த்தியாகி அப்பணி நிறைவேற்றபோதும் அந்த இளைஞர்களின் உறவுகளிடையே ஏற்பட்ட குடும்பத் தகராறின் காரணமாக விடயம் அம்பலமாகியது.

இலங்கையில் மரணம் ஒன்று வைத்தியசாலையில் நிகழுமாயின், அது திடீர் மரண விசாரணை அதிகாரி மற்றும் சட்ட வைத்திய அதிகாரிகளின் பரிந்துரையின் பெயரில் மரணச் சான்றிதழைப் பெறவும் அதுவே காலம் கடந்த இறப்பு பதிவாகின் கிராம சேவகரின் பரிந்துரையின் அடிப்படையில் திடீர் மரண விசாரணை அதிகாரியின் சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும் என்ற சட்ட ஏற்பாடு காணப்படுகின்றது. இதற்கமையவே புலம்பெயர்ந்த இளைஞர்கள் காலம் கடந்த இறப்பு பதிவு என்ற வகையறைக்குள் கிராம சேவகர்கள் ஊடாக சான்றுப் பத்திரத்தை பெற்றுக்கொண்டுள்ளனர்.

இந்த விடயம் முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்திற்கு தெரிய வந்தபோது உரிய இரு கிராம சேவகர்களும் பணி இடை நிறுத்தம் செய்யப்பட்டதோடு திணைக்கள ரீதியல் நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டது. இவை தொடர்பில் கட்டுரையாளரால் தகவல் அறியும் சட்டத்தின் கீழ் விண்ணப்பிக்கப்பட்ட வினாக்களிற்கு மாவட்டச் செயலகம் பதிலளித்தது.

அந்த பதிலில் "திணைக்கள ரீதியில் இரு கிராம சேவகர்களிற்கும் தாபன விதிக் கோவை 2ஆம் தொகுதி 48ஆம் அத்தியாத்தின் பிரகாரம் பணி இடை நிறுத்தப்பட்டு தொடர் நடவடிக்கை இடம்பெறுகின்றது.என பதிலளிக்கப்பட்டுள்ளது.

சுயலாபத்திற்காக இருக்கும் பெற்றோரை, இறந்துவிட்டதாகக் கூறி சான்றிதழ் பெறுவதற்கான முயற்சி தமிழ் மக்களிடையே பெரும் அதிர்ச்சியையும் முகச்சுழிப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

இந்த விடயம் பல வழிகள் மூலம் கொழும்பிலுள்ள தூதரக வட்டாரங்களின் பார்வைக்கு சென்றுள்ளது என்றும், அவர்கள் அதை தமது நாடுகளுக்கு தெரியப்படுத்தியுள்ளதாகவும் அறிய முடிகிறது.



இலங்கை செய்திகள்
Sri Lanka News

# மன்/புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியின் சிறப்பாக இடம்பெற்ற புத்தாக்க கண்காட்சி




- மன்னார் நிருபர் (07.12.2023)

மன்/புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியின் 2023 ஆம் ஆண்டுக்கான இயந்திர தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க கண்காட்சி பாடசாலை அதிபர் அருட்சகோதரர் சந்தியாகு FSC தலைமையில் வியாழக்கிழமை (07) பாடசாலை பொது ஒன்றுகூடல் மண்டபத்தில் இடம்பெற்றது.

புதிய தொழில் நுட்பங்களை மாணவர்கள் தேடி கற்று அதன் ஊடாக கல்வியை விருத்தி செய்யும் முகமாகவும் அதன் ஊடாக மாணவர்களின் எதிர்காலத்தை விருத்தி செய்ய வேண்டும் என்ற நோக்குடனும் குறித்த கண்காட்சி ஒழுங்கமைக்கப்பட்டு இடம் பெற்றது.



குறித்த கண்காட்சி வைபவரீதியாக ஆரம்பிக்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராக மன்/புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியின் முன்னாள் அதிபரும் டிலாசால் அருட் சகோதரர்களுக்கான வடமாகாண இணைப்பாளர் அருட்சகோதரர் ஸ்ரனிஸ்லாஸ் FSC, சிறப்பு விருந்தினராக மன்னார் வலய உதவி கல்வி பணிப்பாளர் (கணிதம்) நவனீதன் மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப ஆசிரிய ஆலோசகர் ஞானசீலன் அக்கடமி இணைப்பாளர் மோகன் குருஸ் ஓய்வு பெற்ற வலயக்கல்வி பணிப்பாளர் சுகந்தி செபஸ்ரியான் சட்டத்தரணி மடுத்தீன் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

குறித்த கண்காட்சியில் 6-12 வரையிலான மாணவர்கள் உருவாக்கிய, கண்டுபிடித்த 100 மேற்பட்ட கருவிகள், மற்றும் புத்தாக்க பொருட்கள் காட்சி படுத்தப்பட்டிருந்தது.

குறிப்பாக அபிஷான் எனும் மாணவனால் கண்டுபிடிக்கப்பட்டு மாவட்ட மாகாண ரீதியாக முதலிடம் பெற்ற ளுஆயசவ டீநன எனும் கருவி பலராலும் பாராட்டப் பட்டமை குறிப்பிடத்தக்கது.

# போதைப் பொருள் கடத்திய இளைஞனுக்கு விளக்கமறியல்



(7-12-2023)

பாடசாலை மாணவர்கள் இளைஞர்களுக்கு நீண்ட காலமாக போதைப்பொருட்களை விநியோகித்து வந்த ஆலா என்ற இளைஞனை விளக்கமறியலில் வைக்குமாறு கல்முனை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

கடந்த திங்கட்கிழமை (04-12-2023) இரவு விசேட தகவல் ஒன்றினை அடுத்து அம்பாறை மாவட்டம் பெரியநிலாவணை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஜே.எஸ்.கே. வீரசிங்க வழிநடத்தலில் பொலிஸ் குழுவினர் மருதமுனை கடற்கரை பிரதேசத்தில் சிவில் உடையில் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.



இதன் போது குறித்த ஆலா என்ற பறவையின் செல்லப் பெயர் கொண்ட 39 வயதுடைய முஹம்மது இஸ்மாயில் அஸ்மீர் இயற்பெயருடைய இளைஞரை பொலிஸார் சுற்றி வளைத்துள்ளனர். இவ்வாறு சுற்றி வளைக்கப்பட்ட இளைஞன் தடுமாறிய நிலையில் அருகில் உள்ள கடலுக்கு சென்று பாய்ந்து தப்பி செல்ல முயற்சித்தார்.

இந்நிலையில் நீச்சல் தெரியாது திணறிய ஆலா என்ற இளைஞனை கைது செய்த பொலிஸ் குழு 100 கிராம் கஞ்சாவை உடமையில் இருந்து மீட்டுள்ளனர்.

பின்னர் மறுநாள் செவ்வாய்க்கிழமை (5) சட்ட நடவடிக்கைக்காக கல்முனை நீதிமன்ற நீதிவான் எம்.எஸ்.எம் சம்சுதீன் சம்சுதீன் முன்னிலையில் ஆஜர்படுத்தியபோது எதிர்வரும் டிசம்பர் மாதம் 15 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

# பழி வாங்கும் நோக்கிலேயே தெல்லிப்பழை வாள்வெட்டு சம்பவம் இடம்பெற்றது – கைதானவர்கள் வாக்குமூலம்



தெல்லிப்பளையில் கடந்த திங்கட்கிழமை நடந்த வாள்வெட்டுச் சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் மாவட்டக் குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸாரால் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தாக்குதலுக்குப் பயன்படுத்திய வாகனமும் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர்கள் வள்ளிபுனம், முத்து ஐயன்கட்டு, கிளிநொச்சி ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்கள் என்றும், இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் 3பேர் தேடப்பட்டு வருகின்றனர் என்றும் மாவட்டக் குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த திங்கட்கிழமை தெல்லிப்பளையில் ஹையேஸ் வாகனம் ஒன்றில் வந்த கும்பல் வீதியில் மோட்டார் சைக்கிள்களில் பயணித்த இளைஞர்கள் மீது வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது. அதில் ஒருவர் காயமடைந்திருந்தார். தாக்குதல் நடத்தி விட்டுத் தப்பிச் சென்றவர்களைத் துரத்திச் சென்று பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தியபோதும், அவர்கள் அங்கிருந்து தப்பிச் சென்றிருந்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் மாவட்டகுற்றத் தடுப்புப் பிரிவுப் பொறுப்பதிகாரி மேனன் வழிகாட்டலில் உப பொலிஸ் பரிசோதகர் பிரதீப் தலைமையிலான குழுவினர் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.


விசாரணைகளின் அடிப்படையில் சந்தேகநபர்களைக் கிளிநொச்சிப் பகுதியில் வைத்து நேற்றுக் கைது செய்தனர்.

6 மாதங்களின் முன்னர் வினோதன் என்பவர் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்குப் பழிவாங்கும் நோக்குடன் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளமை ஆரம்ப விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

ஹையேஸ் வாகனத்தில் இருந்த துப்பாக்கிச் சூட்டு அடையாளங்களை மறைக்கவும், பாகங்களை மாற்றவும் முயன்றுள்ளமையும் கண்டறியப்பட்டுள்ளது.

தலைமறைவாகியுள்ள மூவரைக் கைது செய்யும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும், கைது செய்யப்பட்டவர்கள் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவார்கள் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

# அரச உத்தியோகத்தர்களை கடமைபுரிய விடாது இடையூறு ஏற்படுத்தும் சங்கானை சந்தை வியாபாரிகள் குறித்து பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு


VALIKAMAM WEST PRADESHIYA SABHA


வலிகாமம் மேற்கு பிரதேச சபைக்கு உட்பட்ட சங்கானை மரக்கறி சந்தையில் வியாபாரம் செய்யும் வியாபாரிகளை பதிவு செய்து அவர்களை அடையாளப்படுத்தி வியாபார நடவடிக்கைகளை தடையின்றி மேற்கொள்வதற்கு இலகுவாக்குவதற்கு பிரதேச சபை வியாபாரிகளின் விபரங்களை பதிவு செய்யும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார்கள்.

இதற்கு தடையேற்படுத்தும் வகையில் வியாபாரிகள் சிலரும் அவர்களுடன் இணைந்த வெளியாட்கள் சிலரும் இணைந்து பதிவுகளை மேற்கொண்டுவரும் பிரதேச சபையின் அரச உத்தியோகத்தர்களுடன் வாய்த்தர்கத்தில் ஈடுபட்டதுடன் அவர்களை தாக்குவதற்கும் முயற்சித்தும் உள்ளார்கள். இது தொடர்பில் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டை பதிவு செய்துள்ளார்கள்.

சந்தையில் வியாபாரம் செய்யும்போது சில பிரச்சினைகள் பொதுமக்கள் மத்தியில் ஏற்படுவதால் பிரதேச சபை இதனை கருத்தில் எடுத்து பதிவு நடவடிக்கைகளை மேற்கொண்டு வியாபாரிகளை அடையாளம் காண்பதற்கும் அவர்கள் வியாபார நடவடிக்கைகளை இலகுபடுத்துவதற்கும் இந்த நடவடிக்கைகளை பிரதேச சபை மேற்கொண்டு வருகிறது.

இத்தகைய நடவடிக்கைகளை குழப்பும் வகையில் சில வியாபாரிகள் தரக்குறைவான வார்த்தை பிரயோகங்களை கூறி தாக்க முற்பட்டு அரச உத்தியோகத்தர்களது பணியை செய்யவிடாது தடுத்துள்ளார்கள்.


இதற்கு எதிராக பொலிசார் சட்ட நடவடிக்கை எடுத்து அரச உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பை உறுதிபடுத்தவேண்டும் என கோரிக்கை முன்வைத்துள்ளார்கள்.


மு/விசுவமடு மகா வித்தியாலயம்
M/VISUVAMADU MAHA VIDYALAYAM

# சாத்திரம் கூறும் மாகாண கணக்காய்வு – மாகாணக்கல்விப் பணிப்பாளரிடம் கேட்கப்பட்ட கேள்விக்கு விசுவமடு அதிபர் பதில்!

முல்லைத்தீவு வலயத்தில் உள்ள விசுவமடு பிரதேசத்தை சேர்ந்த பிரபல பாடசாலை ஒன்றில் கடந்த ஆண்டு 10ம் மாதமளவில் இடம்பெற்ற மணிவிழா முறைகேடுகள் தொடர்பாக பழைய மாணவர் சங்கம் உட்பட பலரும் முறைப்பாடுகள் செய்த நிலையிலும் இன்றுவரை மாகாண, வலய கல்வி பணிப்பாளர்கள் எந்தவித நடவடிக்கையும் எடுக்காத நிலையில், மேற்கொண்டு எழுதப்பட்ட தகவல் அறியும் உரிமைச் சட்ட படிவத்திற்கு குதர்க்கமான பதில் பாடசாலை அதிபரால் வழங்கப்பட்டுள்ளது.

இப்பதிலில் குறித்த பாடசாலை அதிபர் தாம் அனுமதிக்கள் எதுவும் பெறவில்லை எனவும், காசோலை ஊடாக கொடுப்பனவுகள் இடம்பெறவில்லை எனவும், பெறுவனவுகளுக்கு பற்று சீட்டுகள் எதுவும் வழங்கவில்லை எனவும், இந்நிகழ்விற்கும் பாடசாலை அபிவிருத்தி சங்கத்திற்கும் எவ்வித சம்பந்தமில்லை எனவும் குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் கல்வி அமைச்சின் சுற்று நிருபங்களுக்கு புறம்பாக இடம்பெற்ற இந்நிகழ்விற்கு மாகாண கணக்காய்வு வாய்மொழி மூலமாக தவறில்லை எனவும், எழுத்து மூலமாக ஆதாரங்கள் எதுவும் இல்லை என அதிபர் குறிப்பிட்டுள்ளது அடி முதல் நுனி வரை வடக்கு மாகாண கல்வித்துறையில் ஊழல் நிரம்பியிருப்பதை வெளிச்சம் போட்டு காட்டுகிறது.


மு/விசுவமடு மகா வித்தியாலயம்
M/VISUVAMADU MAHA VIDYALAYAM

இவ்வாறு சாத்திரம் கூறி ஊழலை மறைப்பவர்கள் அதிகாரிகளாக இருக்கும் வரை வடக்கு கல்வி அழிவதை யாராலும் தடுக்க இயலாது.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# மன்னாரில் இருந்து பயணிகளுடன் சென்ற அரச பேருந்துகள் நிறுத்தப்பட்டு ஆவணங்கள் சோதனை



- மன்னார் நிருபர் (6-12-2023)

மன்னார் பேருந்து தரிப்பிடத்தில் இருந்து 06-12-2023 புதன்கிழமை காலை போக்கு வரத்துச் சேவையில் ஈடுபட்ட அரச பேருந்துகள் காலை 7.45 மணியளவில் மன்னார் நகர சுற்றுவட்டப் பகுதியில் மன்னார் வீதி போக்குவரத்து பிரிவு பொலிஸாரினால் நிறுத்தப்பட்டு ஆவணங்கள் சோதனையிடப்பட்டுள்ளது.

மக்களினால் தொடர்ந்தும் முன் வைக்கப்பட்டு வரும் குற்றச்சாட்டுகளுக்கு அமைவாக குறித்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

இந்த நிலையில் 06-12-2023 காலை அரச பேருந்து ஒன்று நகர சுற்றுவட்ட பகுதியில் திடீரென நிறுத்தப்பட்ட போது பிரேக் லைட் ஒளிராத நிலை காணப்பட்டது.



இதன் போது குறித்த பேருந்தின் ஆவணங்களை சரி பார்த்த போதும் ஆவணங்கள் இருக்காத நிலை காணப்பட்டது.

இந்த நிலையில் தண்டம் விதிக்கும் வகையில் நடவடிக்கைகள் முன் னெடுக்கப்பட்டது. இதனால் பேருந்துகள் சில மணி நேரம் காத்திருந்தமையினால் மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்துள்ளனர்.

மேலும் சில பேருந்துகள் சோதனை செய்யப்பட்ட நிலையில் உரிய ஆவணங்கள் காணப்படாத நிலையில் பிரேக் லைட் ஒளிராத நிலை காணப்பட்டது.

இந்த நிலையில் பயணிகள் மற்றும் அலுவலகங்களுக்கு கடமைக்குச் செல்வோர் என பலரும் தாமதங்களை எதிர் கொண்ட நிலையில் மன்னார் சாலை அதிகாரிகள் வருகை தந்து பொலிஸாருடன் கலந்துரையாடலில் ஈடுபட்ட நிலையில் பேருந்துகளின் பிரேக் லைட் உள்ளிட்ட அடையாளம் காணப்பட்ட பிரச்சினைகளை உடன் நிவர்த்தி செய்யுமாறு பொலிஸாரினால் வலியுறுத்தப்பட்டது.

இதேவேளை அரச பேருந்துகள் பொலிஸார் இடைமறிப்பது இல்லை. ஆவணங்களும் பார்ப்பது இல்லை. ஆவணங்கள் அனைத்தும் அலுவலகத்தில் உள்ளது. ஆனால் பயணிகளுடன் சென்ற பேருந்தை நிறுத்தி ஆவணங்களை காட்டுமாறு கோரினர். மேலும் சாரதியின் ஆசன பட்டி உள்ளதா, பிரேக் லைட் ஒளிர்கின்றதாக என பரிசோதித்தனர்.

மூன்று பேருந்துகளுக்கு எதிராக தண்டமும் விதித்துள்ளனர். இவ்வாறு பல தடவைகள் இடம் பெற்றுள்ளது. இதனால் பயணிகள் பாதிக்கப்படுவதாகவும் மன்னார் சாலை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# மெசிடோ நிறுவனத்தின் ஏற்பாட்டில் இலங்கை மத்திய வங்கியின் அனுசரணையில் மன்னார் சிறிய தொழில் முயற்சியாளர்களுக்கான உற்பத்தி செலவு முகாமைத்துவ பயிற்சி

- மன்னார் நிருபர் (06.12.2023)

இலங்கை மத்திய வங்கியின் நிதி அனுசரணையில் மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனம் (மெசிடோ) ஏற்பாட்டில் உற்பத்தி செலவுகள் தொடர்பான முகாமைத்துவம் மற்றும் விலை நிர்ணயம் தொடர்பான பயிற்சிப்பட்டறை மெசிடோ நிறுவனத்தின் பணிப்பாளர் யாட்சன் பிகிறாடோ தலைமையில் 06-12-2023 புதன்கிழமை இடம் பெற்றது.



பொருளாதார நெருக்கடி மத்தியில் சிறு தொழில் முயற்சியில் ஈடுபடும் பெண் தொழில் முயற்சியாளர்களுக்கான தொழில் வழிகாட்டல் மற்றும் உற்பத்தி தொடர்பான தெளிவு படுத்தலை வழங்கும் முகமாக குறித்த நிகழ்வு ஒழுங்கமைக்கப்பட்டு இடம் பெற்றது.



குறித்த நிகழ்வில் விசேட அழைப்பின் பெயரில் வடமாகாண மத்திய வங்கியின் கிளை உதவி முகாமையாளர் திருமதி. மாலினி அச்சுதன் மற்றும் இலங்கை கைத்தொழில் அதிகார சபையின் மன்னார் மாவட்ட பணிப்பாளர் ஜே.எம்.ஏ. லெம்பேட், மெசிடோ நிறுவனத்தின் கள ஒருங்கிணைப்பாளர் விவேகி மற்றும் விரிவுரையாளர் எம்.ஏ. பௌர்சாத் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

மன்னார் மாவட்ட பிரதேச செயலக பிரிவை சேர்ந்த மீன்பிடி, விவசாயம், கைவினை பொருள் உற்பத்தி உள்ளடங்களாக பல்வேறு சுய தொழில்களில் ஈடுபடும் 30க்கும் அதிகமான பெண் தொழில் முயற்சியாளர்கள் குறித்த நிகழ்வில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# சர்வதேச எய்ட்ஸ் தினத்தையொட்டி மன்னாரில் விழிப்புணர்வு ஊர்வலம்

- மன்னார் நிருபர் (06.12.2023)

சர்வதேச எய்ட்ஸ் தினத்தையொட்டி "சமூகத்தை வலுப்படுத்துவோம் "எய்ட்ஸ்" ஐ தடுப்போம்" எனும் தொனிப்பொருளில் மன்னார் மாவட்டத்தில் எய்ட்ஸ் பற்றிய விழிப்புணர்வு நடவடிக்கைகள் புதன்கிழமை (6) காலை முன்னெடுக்கப்பட்டுள்ளது.



மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் பிராந்திய பாலியல் நோய்கள், எயிட்ஸ் கட்டுப்பாட்டு பிரிவின் ஏற்பாட்டில் குறித்த விழிப்புணர்வு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் இருந்து பறித்த ஊர்வலம் முன்னெடுக்கப்பட்டது.

குறித்த பேரணி மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலை வீதியூடாக மன்னார் பொலிஸ் நிலைய பிரதான வீதியை சென்றடைந்தது. பின்னர் அங்கிருந்து மன்னார் பஸார் வீதியூடாக பொது விளையாட்டு மைதான வீதியை சென்றடைந்து மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையை சென்றடைந்தது.

குறித்த ஊர்வலத்தில் மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி. வினோதன், எய்ட்ஸ் கட்டுப்பாட்டு பிரிவு வைத்திய அதிகாரி, மற்றும் வைத்தியர்கள் பணியாளர்கள், தாதியர்கள், சுகாதார பணியாளர்கள், சுகாதார பரிசோதகர்கள்.

மற்றும் மதத் தலைவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இதன் போது மக்கள் அதிகமாக காணப்படும் இடங்களில் குறித்த ஊர்வலம் மற்றும் விழிப்புணர்வு நடவடிக்கை துண்டு பிரசுரங்கள் விநியோகம் இடம் பெற்றது.

# கிளிநொச்சியில் வட மாகாண பண்பாட்டு விழா

வட மாகாண பண்பாட்டு விழா 06-12-2023 அன்று இடம்பெற்றது. வட மகாண கலை, கலாச்சார பண்பாட்டினை வெளிப்படுத்தும் பண்பாட்டு பேரணியுடன் குறித்த விழா ஆரம்பமானது.

கிளிநொச்சி கரடி போக்கு சந்தியில் வாகன ஊர்தி பேரணி ஆரம்பமானது. தொடர்ந்து காக்கா கடை சந்தியில் பண்பாடு, கலை, கலாச்சாரத்தை வெளிப்படுத்தும் பண்பாட்டு பேரணி ஆம்பமாகி விழா மண்டபம் வரை சென்றது.

குறித்த பண்பாட்டு பேரணியை மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், மாவட்ட செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள் உள்ளிட்ட விருந்தினர்கள் வரவேற்றனர்.

இதன்போது, தமிழ், சிங்கள, இஸ்லாமிய, கிறிஸ்தவ பண்பாடுகளை வெளிப்படுத்தும் வகையில் பொம்மலாட்டம், மயிலாட்டம், பொய்கால் குதிரை, தமிழ் இன்னியம் உள்ளிட்ட விடயங்களை உள்ளடக்கி ஆரம்ப பேரணி இடம்பெற்றது.

தொடர்ந்து பண்பாட்டு அருங்காட்சியகம் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபரால் திறந்து வைக்கப்பட்டது.

இதன்போது, ஓவியங்கள், பாரம்பரிய பயன்பாட்டு பொருட்கள், புத்தகங்கள், ஒளி ஒலி நாடாக்கள் என பல அம்சங்கள் கண்காட்சி கூடத்தில் காட்சிப்படுத்தப்பட்டதுடன் விற்பனையும் இடம்பெற்றது.

இன்றும் நாளையும் குறித்த கண்காட்சி இடம்பெறவுள்ளதுடன், மாணவர்கள், பெற்றோர் என பலரும் பார்வையிட்டு வருகின்றனர். இதேவேளை அரங்க நிகழ்வுகளும் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.




# மன்னாரில் 14 வருடங்களுக்குப் பின்னர் இராணுவ சிப்பாய்க்கு மரண தண்டனை — மன்னார் மேல் நீதிமன்றத்தால் தீர்ப்பு

(6-12-2023)

மன்னார் பரப்புக்கடந்தான் இராணுவ முகாமில் கடந்த 2009 ஆம் ஆண்டு இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டின் போது கடமையில் இருந்த 2 ராணுவ வீரர்கள் உயிரிழந்ததுடன், ஒருவர் காயமடைந்த சம்பவத்துடன் கைது செய்யப்பட்டு மன்னார் மேல் நீதிமன்றத்தில் விசாரணைகளின் இடம் பெற்று வந்த நிலையில் குறித்த குறித்த குற்றம் நிரூபிக்கப்பட்ட நிலையில் சம்பவத்துடன் தொடர்புடைய இராணுவ சிப்பாய்க்கு 14 வருடங்களின் பின்னர் மன்னார் மேல் நீதிமன்றம் 6-12-2023 அன்று மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளார்.

மன்னார் பரப்புக்கடந்தான் இராணுவ முகாமில் 02 அக்டோபர், 2009 அன்று இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் இராணுவ சேவையில் இருந்த போது இரண்டு இராணுவத்தினர் கொல்லப்பட்டதோடு ஒருவர் படுகாயமடைந்தார்.

குறித்த வழக்கு விசாரணை தொடர்ந்து மன்னார் மேல் நீதிமன்றத்தில் இடம் பெற்று வந்தது.

முருங்கன் பொலிஸாரினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணை தீர்ப்புக்காக 06-12-2023 அன்று மன்னார் மேல் நீதிமன்றத்தில் நீதிபதி எம்.எம்.எம். மிகால் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது.


இதன் போது இரண்டு மனிதப் படுகொலை செய்யப்பட்டமை உறுதி செய்யப்பட்ட நிலையில் மேல் நீதிமன்ற நீதிபதியால் குறித்த இராணுவ சிப்பாய்க்கு மரண தண்டனை வழங்கி தீர்ப்பளிக்கப்பட்டது.

இத தீர்ப்பு வழங்கும் போது மேல் நீதிமன்றத்தின் அனைத்து மின் விளக்குகள் அணைக்கப்பட்டு நீதிமன்றத்தின் கதவுகள் பூட்டப்பட்டு தீர்ப்பு எழுதப்பட்டது.

எழுதப்பட்டதன் பின்னர் எழுதப்பட்ட பேனா நீதிபதியால் உடைக்கப்பட்டது. குற்றவாளியை போகம்பரை சிறைச்சாலைக்கு அனுப்பும்படி கட்டளையிடப்பட்டது.

# கனடா வாழ் வீணைமைந்தன் அவர்களின் ‘நடிகர் திலகம் சிவாஜியும் தமிழ் சினிமாவும்’ என்னும் அரியதோர் நூல்

கனடா மொன்றியலில் வசித்துவரும் எழுத்தாளர் கே. ரி சண்முகராஜா ஐயா அவர்கள் “வீணைமைந்தன்” என்ற புனைபெயரில் பல வருடங்களாகத் தொடர்ந்து எழுதிவருபவர், பலராலும் அறியப்பட்டவர். இவரது படைப்புக்களில் ஒன்றான “நடிகர் திலகம் சிவாஜியும் தமிழ் சினிமாவும்” என்ற இந்த நூலை அண்மையில் வாசித்திருந்தேன். அந்த வகையில் இந்த நூலைப் பற்றிய சில விடயங்களை இங்கு பகிர்ந்து கொள்ளலாம் என நினைக்கின்றேன்.




நடிகர் திலகம் சிவாஜிகணேசனையும், அவரது சிறந்த நடிப்புத்திறத்தையும், தமிழ்ச்சினிமாவில் அவருக்கு இருந்த இடத்தினையும் அறிந்துகொள்வதற்குரிய ஆவணநூல்களுள் ஒன்றாக அமைகின்ற இந்த நூலானது அண்மையில் இந்தியாவிலும், ஈழத்திலும், கனடா ரொறன்ரோவிலும் வெளியிடப்பட்டது. முன்னூற்றித் தொண்ணூற்றாறு பக்கங்களைக்கொண்ட இந்த நூல் மணிமேகலைப்பிரசுரத்தால் வெளியிடப்பட்டுள்ளது. இந்த நூலுக்கான அணிந்துரைகளை திரைக்கலைஞர் கலைமாமணி சிவகுமார் அவர்களும், மூர்த்த பன்னாட்டுச் செய்தியாளர் சிவா பரமேஸ்வரன் அவர்களும் எழுதியுள்ளனர்.

இந்த நூலுக்குரிய வாழ்த்துரையை கனடா உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியரும். இந்த நூலில் அடங்கியுள்ள அத்தியாயங்களை தொடர்ச்சியாக தனது பத்திரிகையில் பிரசுரம் செய்து உதவியருமான ஆர்.என். லோகேந்திரலிங்கம் அவர்கள் எழுதியுள்ளார். மேலும் இந்த நூலில் வாசித்தோரில் நேசித்தோர் என்ற பகுதியும் இடம்பெற்றுள்ளது. இந்த நூலுக்குள் அடக்கப்பட்டுள்ள விடயங்கள் பத்திரிகையில் கட்டுரையாக வெளிவந்த காலங்களில் அதற்குப் பாராட்டுக்களைத் தெரிவித்தவர்களது குறிப்புக்களே இந்தப் பகுதிக்குள் அடக்கப்பட்டுள்ளன.

நடிகர்திலகம் சிவாஜிகணேசன் தமிழ்ச் சினிமாவுக்கு வந்தபின்னர் அதிக படங்கள் அடுத்தடுத்து வந்ததாகவும், நேரில் காணாத பல கடவுளர்களைக் கண்முன் காட்டிய பெருமையும், வரலாற்று நாயகர்களை அவர்களுக்கே உரிய வடிவிலும் குணாம்சங்களோடும் காட்டிய சிறப்பும் நடிகர் திலகத்திற்கே உரியது என்றும் கூறிச்செல்லும் நூலாசிரியர் நடிகர் திலகம் சிவாஜிகணேசனின் முதற்படமான பராசக்தி தொடக்கம் அவர் நடித்த பெரும்பான்மையான படங்களில் அவரின் நடிப்புத்திறத்தோடு நடை, உடை, பாவனை, பேச்சு, உச்சரிக்கும் விதம், பாடல்கள், பாடல்கள் வெளிப்படுத்தும் உணர்வு, அவருக்கு ஜோடியாக நடித்த நடிகைகள் அவர்களின் நடிப்பின் பொருத்தம் எனப் பல்வேறு விடயங்களைப் பற்றியெல்லாம் இந்த நூலில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் நடிகர்திலகம் ஏற்றுநடித்த பாத்திரங்கள் தன்னை வசப்படுத்திய வகையை அடிப்படையாக வைத்து அவருக்கு ஒவ்வொரு பெயர் கொடுத்து “அண்ணன் கணேசன் தொடக்கம்” “சிங்கத்தமிழனடா சிவாஜிகணேசன்” வரையாக ஐம்பது தலைப்புக்களில் நடிகர் திலகம் பற்றி எழுதியுள்ளார். ஒவ்வொரு படத்திலும் அவர் வரும் தோற்றப்பொலிவோடு படங்களும் போடப்பட்டுள்ளன. இந்த நூலின் இருபத்தாறாம் பக்கத்தில் நடிகர் திலகத்தினது உருவப்படமொன்று உயிரேட்டம் உடையதாக மிக யதார்த்தமாகவும், அழகாகவும் ஓவியக்கலைஞர் திரு. த. சௌந்தர் அவர்களால் வரையப்பட்டு சேர்க்கப்பட்டுள்ளது.

மேலும் இந்த நூலின் சிறப்பு, இதில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள், இளைய தலைமுறைக்கு எந்தவகையில் பயனுடையதாக இருக்கும் என்பதோடு இந்த நூலுக்குரிய ஆசிரியரை வாழ்த்தியும் அதேநேரம் நடிகர்திலகத்தை முழுமையாக அறிந்துகொள்ள இந்த நூல் உதவுகிறதா என்ற வினாவுக்கும் விடையளிக்கும் விதமாக இந்தியாவிலுள்ள பிரசித்தி பெற்ற தினமலர், தினத்தந்தி, துக்ளக் மற்றும் தினகரன் போன்ற பத்திரிகைகளில் இந்த நூல் சம்பந்தமாகக் எழுதப்பட்ட பின்னூட்டமும் இந்த நூலில் இணைக்கப்பட்டுள்ளது. அவற்றில் கூறப்பட்ட சில விடயங்களை இங்கு எடுத்துக் கூறின் இந்த நூலைப்பற்றிய மேலும் பல விடயங்களை அறிய முடியும் என்றவகையில் அப்பத்திரிகைகளில் கூறப்பட்டுள்ள கருத்துக்களைப் பார்க்கின் 11-01-2023 அன்று வெளியான தினமலர் “நடிகர் சிவாஜிகணேசன் பற்றிய நினைவுகளையும், அவரைச் சந்தித்து உரையாடிச் சேகரித்த செய்திகளையும், பிரபல வார இதழ்களில் வெளியான குறிப்புக்களையும் வைத்துத் தொகுத்து எழுதப்பட்ட இந்த நூலானது நடிகர்திலகம் சிவாஜிகணேசனது விழிகளின் வசீகரக்கூர்மை, இராஜகம்பீரத் தோற்றம், சிம்மக்குரல், ஒன்பதுவகை பாவங்களை கொண்ணூறு விதமாக நடித்துக்காட்டும் ஆற்றல் பற்றியெல்லாம் குறிப்பிடுகின்றது அத்தோடு சாமானியர்கள் முதல் சரித்திர நாயகர்கள் வரை சிவாஜி ஏற்றுநடித்த பாத்திரங்களையும், அவர் பெற்ற வெற்றிச் சாதனைகள் பற்றியும் இந்த நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது” என்கின்றது தினமலர்.

இந்த நூல் பற்றி தினத்தந்தி (02-10-2023) கூறுகையில், “இந்த நூல் சிவாஜிகணேசனது சினிமா வாழ்க்கைச் சம்பவங்களை புதிய கோணத்தில் படைத்திருக்கிறது என்றும் அவரது சாகாவரம் பெற்ற வசனங்களை அப்படியே தந்திருக்கின்றது என்றும் சிவாஜிகணேசன் தொடர்பான அரசியல் நிகழ்வுகளும் பதிவுசெய்யப்பட்டுள்ளன” என்கின்றது.

மேலும் இந்த நூல் பற்றி “துக்ளக்” (04-10-2023) கூறும்போது, “இந்தியத் திரையுலகை புரட்டிப்போட்ட நடிகர்திலகம் சிவாஜிகணேசனின் ஆளுமை குறித்து அணுவணுவாக இரசித்து, லகித்து, ஆய்ந்து நிறையத் தகவல்களை இந்த நூலில் பதிவுசெய்துள்ளார் நூலாசிரியர் என்றும் இந்நூலை இவர் உருவாக்க கடுமையான தேடல்களைச் செய்துள்ளார் என்பதற்கு இவர் எங்கிருந்தெல்லாம் தகவல்களைப் பெற்றுள்ளார் என்பதையும் துக்ளக் தனது பின்னூட்டத்தில் ஒவ்வொன்றாகச் சொல்லியுள்ளமை நூலாசிரியரின் கடுமையான தேடரல்களுக்குச் சான்றுகாட்டி நிற்கின்றது. அத்தோடு முன்னர் குறிப்பிடப்பட்டது போலவே இந்த நூலானது சிவாஜிகணேசனின் பெருமையையும், புகழையும், நடிப்பாற்றலையும், அவர் ஏற்றுநடித்த பாத்திரங்களைத் துல்லியமாக வெளிப்படுத்திய விதத்தையும் அடுத்த தலைமுறைக்கும் டுத்துக்காட்டும் மேலும் ஒரு ஆவணமாக இருக்கிறது என்றும் துக்ளக் கூறியுள்ளது.

மேலும் இந்த நூல்பற்றித் தமிழ்நாட்டிலிருந்து வெளிவரும் நாளிதழான தினகரன் (12-03-2023) கூறுகையில் “நடிகர்திலகம் சிவாஜிகணேசன் பற்றி எண்ணற்ற புத்தகங்கள் வந்துள்ளன. அந்த நூல்களுள் இதுவும் குறிப்பிடத்தக்க ஒன்று” என்றும் சிவாஜிகணேசன் பற்றி எத்தனையோபுத்தகங்கள் வந்தாலும் எதுவுமே சிவாஜிகுறித்த சித்திரத்தை முழுமையாக வழங்கிவிடவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளது.

புலம்பெயர் தேசத்தில் 35 வருடங்கள் வாழ்ந்த நூலாசிரியரின் தேடல்களையும் அவர் நடிகர்திலகத்தின் மீது கொண்டபற்றையும் ஈர்ப்பையும் இங்கு குறிப்பிடப்பட்ட எல்லாப் பத்திரிகைகளும் போற்றியுள்ளன என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

“நடிகர் திலகம் சிவாஜியும் தமிழ்ச்சினிமாவும்” என்ற பெயரை அட்டைப்படத்தில் பார்த்ததும் அங்கு சிவாஜிகணேசனின் வாழ்க்கைக் குறிப்பும் சினிமாத்துறைக்குள் புகுவதற்கு அவர்பட்ட பாடுகளோடு அத்துறையில் அவர் வளர என்னென்ன விடயங்கள் செய்தார் என்ற விடயங்கள் ஒரு ஒழுங்கான முறையில் உள்ளடக்கப்பட்டிருக்கும் என எதிர்பார்ததேன். தலைப்புக்கு ஏற்ப. உள்ளே பார்த்தபோது இந்த நூல் சற்று வித்தியாசமான பார்வையில் விரிவதைஅவதானிக்க முடிந்தது. நடிகர் திலகத்தின் வாழ்க்கைச் சம்பவங்களை நூலாசிரியர் ஆங்காங்கு சொல்லிச் சென்றாலும் அது ஒரு வரண்முறைக்குள் அமையவில்லை. இதற்குக் காரணம் இது வேறுபட்டகாலங்களில் வேறுபட்ட தலைப்புக்களில் அவரைக் காட்டமுயன்றமை என்பதுவும் இங்கு புரிந்துகொள்ள முடிந்ததுதான்.

இந்நூல் மூலமாக வீணைமைந்தன் ஐயா அவர்கள் நடிகர்திலகம் சிவாஜிகணேசனையும் அவர் நடிப்பையும் அணுஅணுவாக இரசித்துள்ளமை தெரிகிறது இதனால்த்தான் அவர் நடிகர்திலகத்திற்கு பிரஞ்சுஅரசின் செவாலியே விருது கிடைத்தபோது கனடாவில் இருந்து லாஸ் - ஏஞ்சல்ஸ் வரை தேடிச்சென்று தனது கையால் வாழ்த்துமடல் எழுதி அதை அவருக்கு வாசித்தே வழங்கினார் போலும். இந்த நூலில் அந்த நிகழ்வில் எடுக்கப்பட்ட படமும் இணைக்கப்பட்டுள்ளது.

எப்படி இருப்பினும் முன்னர் கூறியது போல் இந்த நூலானது நடிகர் திலகம் பற்றியும், அவரின் நடிப்புத்திறம் பற்றியும் அறிந்துகொள்ளவோ அன்றி ஆய்வுசெய்யவோ நிச்சயம் உறுதுணையாக இருக்கும் என்பதில் ஐயம் இல்லை.

முக்கியமாக ஒருநூலிலேயே அந்த நூலுக்குரிய பின்னூட்டங்கள் எப்படிவரமுடியும் என்ற கேள்வி இக்கட்டுரையை வாசிப்பவர்களுக்கு ஏற்படும். அதற்காகக் குறிப்பிடுகின்றேன். இந்த நூலின் ஒருதொகுதி பின்னூட்டங்கள் அற்றது. அதுவே இந்தியாவில் முதன்முதல் வெளியிடப்பட்டது. இன்னும் ஒரு தொகுதி பின்னூட்டங்கள் கிடைத்தவுடன் அவற்றையும் சேர்த்து இணைக்கப்பட்டதாக உள்ளது.

பின்னூட்டங்கள் உள்ளதே என்கையில் கிடைத்ததல் அவற்றையும் உள்ளடக்கக்கூடியதாக இங்கு எனது பார்வை அமைந்திருந்தது என்பதையும் இங்கு குறிப்பிட விரும்புகின்றேன்.

**- உமா மோகன் (M.A) - மொன்றியால்**

## கடந்தவையும் கடப்பவையும் - (79)

***காணும் கடைகளிலே கண்டதையும் வாங்கிக்கொண்டு
போகும் வழிதோறும் உண்டபடி போனவர்க்கு - பொறுமையுடன்***

***நின்று நிதானித்து குளிர்களியை வாங்குதற்கு
அன்று எளிதாக இருக்கவில்லை - சனக்கூட்டம்***

***அலைமோதும் அவ்விடத்தை நெருங்கவே முடியாது
தொலைதூரப் பார்வையிலே திருப்பியே வருகிறார்கள்***

***கனதூரம் நடக்கவைத்தார் என்ற கோபம்
மனதோரம் இருந்திட்டாலும் வெளிக்காட் டவிரும்பாது திரும்பியாச்சு***

***மறுநாள் நினைத்ததற்கு மாறாக வண்டி
குறித்த நேரம் வந்து நிற்க - மனம்***

***மகிழ்ந்தபடி ஏறியாச்சு நிதானமாக - என்றும்
பிறந்தவீடு போவதென்றால் எல்லோருக்கும் குதூகலம்தான்***

***போகும் பாதையது பழையது ஆனபோதும் - அங்கு
காணும் காட்சிகள் பெரும்பாலும் புதியனவே எங்களுக்கு***

***குன்றும் குழியும் இல்லாத வீதிகள் - ஆங்காங்கு
நன்றாகக் கட்டப்பட்ட பெருங்கடைகள்***

***வண்ண வண்ணப் பூச்சோடு ஆலயங்கள்
கண்ணைக் கவரும் பென்னம்பெரு வீடுகள் - இடையிடையே***

***பிரமாண்ட வடிவில் கல்யாண மண்டபங்கள் - இவை
எமதிடத்தில் காந்தர்வக் கலியாணம் குறைந்ததுவோ***

***என்றதொரு சிந்தனையைத் உண்டுபண்ண - பதிய
மண்டபங்கள் நல்லதுதான் - ஆனாலும்***

***முற்றத்துக் கன்னிக்காலும் மரத்தினால்
உற்றவர் சேர்ந்து கட்டும் பந்தல்களும் - அங்கு***

***வெள்ளைகட்டி மணிதொடுத்து அமைக்கும் நல்ல மணவறைகளும் - வீட்டில்***

***பலர்கூடிச் சுட்டுக்கொள்ளும் பலகாரவகைகளும்
இரவிரவாய் வெட்டிக் கொள்ளும் காய்கறி வகைகள்***

***அதிகாலை வேளைகேட்கும் அண்டாக்களின் சத்தங்களும்
பலநாட்கள் வந்துபோகும் புதுஇடத்துத் தொடர்புகளால்***

***சிலவேளை ஒன்றுசேரும் மனங்களென்று
பலதிற்கும் முற்றுப்புள்ளி வைத்தாற்போலத் தெரிகிறது மண்டபங்கள் - இன்று***

***வெளிநாடு உள்நாடு இரண்டிலுமே
எளிதான திருமண முறைகள் வந்து - பழைய***

***கல்யாண முறை களையிழந்து நிற்பதனால் - மனதில்
சின்னதாய் ஒருகவலை இருக்கத்தான் செய்கிறது - என***

***இப்படியே நினைத்ததுக் கொண்டு இருந்தபோது
எப்பொழுதும் மனம் விரும்பும் வல்லைப்
பிள்ளையார்***

***முன்னாலே கொண்டுவந்து நிப்பாட்ட - அங்கு
மெள்ளமாய் இறங்கி அவரையும் வணங்கி***

***அடுத்தபக்க ஆஞ்சநேயரையும் கும்பிட்டுத் திரும்புகையில் - தோளில்
பிடித்தபடி அக்கா ஒருவர் எப்போதோ பழகியவர்***

***நிப்பாட்டிக் கதைக்கிறார் கனநேரம் கனகதைகள்
சற்றேனும் எதிர்பாராச் சந்திப்பால் மனமகிழ்ந்து - பின்***

***விடைபெற்றுச் சென்று தன் வண்டிக்குப் போனவர்
இடைநடுவில் திரும்பி வந்து ‘இப்பொழுது புரிகிறதா’ ?என்று கேட்டார்***

***அவர் கேட்டபோது புரியவில்லை - அதனால்
அவர் முன் ‘எதுவுமே புரியவில்லை’ என்று சொல்ல***

***ஒரு விதமாய் சிரித்துவிட்டு- அவர்
மறுபடியும் திரும்புகையில்
புதியதொரு நினைப்போடு பயணமது தொடர்கிறது...***

***(தொடரும்)***

**-- உமா மோகன் -- மொன்றியால் - கனடா --**

# கனடாவிற்கு வருகை தரும் சர்வதேச மாணவர்களை சிறப்பாகப் பாதுகாப்பதற்கான திட்டங்களை அறிமுகப்படுத்தும் கனடிய அமைச்சுக்கள்

வெளிநாடுகளிலிருந்து கனடாவிற்கு வருகை தரும் சர்வதேச மாணவர்களை சிறப்பாகப் பாதுகாப்பதற்கான திட்டங்களை அறிமுகப்படுத்தும் கனடிய அமைச்சுக்களின் உயர் அதிகாரிகள் பலர் அண்மையில் ஒட்டாவா மாநகரில்கூடி ஆராய்ந்தனர். அவற்றுள் கனடாவின் குடிவரவு மற்றும் பிரஜாவுரிமைகள் மற்றும் அகதிகளுக்கான அமைச்சு முக்கிய பங்கு எடுத்திருந்தது. இந்த திட்டங்கள் தொடர்பாக அண்மையில் மேற்படி அமைச்சின் மாண்புமிகு அமைச்சர் மார்க் மில்லர் ஊடகவியலாளர்களிடம் தனது கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டார். அவர் அங்கு உரையாற்றுகையில் பின்வருமாறு தெரிவித்தார்.

"எமது கனடா தேசமானது சர்வதேச மாணவர்களுக்கான சிறந்த இடமாகும், இங்குள்ள உயர்தர கல்வி நிறுவனங்களுக்கு நன்றி. நான் அவர்களைப் பாராட்டுகின்றேன். எங்கள் வரவேற்கத்தக்க, மாறுபட்ட சமூகம் மற்றும் சிலருக்கு பட்டப்படிப்புக்குப் பிறகு நிரந்தரமாக வேலை செய்ய அல்லது குடியேறுவதற்கான வாய்ப்புக்களை வழங்குகின்றது. இங்கு வருகின்ற சர்வதேச மாணவர்கள் நாடு முழுவதும் உள்ள கல்வி வளாகங்கள் மற்றும் கல்வி நிலையங்களில் கற்கைநெறிகளில் ஈடுபட்டுள்ளனர். அவர் தங்கள் கனடிய வாழ்க்கையில் கனடாவில் தங்கள் படிப்பைத் தொடரும்போது, போதுமான வீடுகளை பெற்றுக்கொள்ளல் போன்ற சில கடுமையான சவால்களை அனுபவித்திருக்கிறார்கள்.

அத்துடன் மாணவர்களுக்கான அனுமதி விண்ணப்பதாரர்களுக்கான வாழ்க்கைச் செலவுக்கான நிதித் தேவை உயர்த்தப்படும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார். இதனால் சர்வதேச மாணவர்கள் கனடாவில் வாழ்வதற்கு நிதி ரீதியாக சமாளிக்க முடியும் நிலைக்கு வருவார்கள். உள்ளனர். முன்னோக்கி நகரும்,

அனுமதி விண்ணப்பதாரர்களுக்கான வாழ்க்கைச் செலவுத் தேவை 2000 களின் முற்பகுதியில் இருந்து மாறவில்லை, அது ஒரு விண்ணப்பதாரருக்கு $10,000 ஆக நிர்ணயிக்கப்பட்டது. எனவே, நிதித் தேவைகள் காலப்போக்கில் வாழ்க்கைச் செலவுடன் ஒத்துப்போகவில்லை, இதன் விளைவாக மாணவர்கள் தங்கள் நிதி போதுமானதாக இல்லை என்பதை அறிய மட்டுமே கனடாவுக்கு வருகிறார்கள். 2024 ஆம் ஆண்டில், ஒரு விண்ணப்பதாரர் தங்களிடம் $20,635 இருப்பதைக் காட்ட வேண்டும், இது டுஐஊழு இன் 75மூ ஐக் குறிக்கும், இது அவர்களின் முதல் ஆண்டு கல்வி மற்றும் பயணச் செலவுகளுடன் சேர்த்து. ஜனவரி 1, 2024 அன்று அல்லது அதற்குப் பிறகு பெறப்பட்ட புதிய படிப்பு அனுமதி விண்ணப்பங்களுக்கு இந்த மாற்றம் பொருந்தும்.

இது மாணவர்களின் பாதிப்பு மற்றும் சுரண்டலைத் தடுக்க உதவும் என்றாலும், விண்ணப்பதாரரைப் பொறுத்து மாற்றத்தின் தாக்கம் மாறுபடும் என்பதை நாங்கள் அங்கீகரிக்கிறோம். அடுத்த ஆண்டு, கனடாவில் தங்கள் படிப்பைத் தொடர சர்வதேச மாணவர்களுக்கு உயர்தர சேவைகள் மற்றும் ஆதரவை வழங்கும் கற்றல் நிறுவனங்களை அங்கீகரிப்பதற்காக ஒரு புதிய கட்டமைப்பை உருவாக்க எதிர்பார்க்கிறோம்.




இன்றைய அறிவிப்பு, 2023 ஆம் ஆண்டு அக்டோபர் 27 ஆம் தேதி அறிவிக்கப்பட்ட சர்வதேச மாணவர் திட்டத்தில் முக்கியமான சீர்திருத்தங்களைத் தொடர்ந்து, சர்வதேச மாணவர்களுக்கு உயர்தர சேவைகள் மற்றும் ஆதரவை வழங்கும் கற்றல் நிறுவனங்களை அங்கீகரிப்பதற்காக ஒரு புதிய கட்டமைப்பை உருவாக்குகிறது. வீட்டு வசதிகள் உட்பட போதுமான ஆதரவை வழங்கக்கூடிய மாணவர்களின் எண்ணிக்கையை மட்டுமே கற்றல் நிறுவனங்கள் ஏற்றுக்கொள்ளும் என எதிர்பார்க்கிறோம்.

கனடாவிற்கு வரும் சர்வதேச மாணவர்களை வரவேற்பதில், மாணவர்கள் நம் நாட்டிற்கு வரும்போது அவர்களுக்கு ஆதரவாக இருப்பதை உறுதி செய்ய வேண்டிய பொறுப்பு எங்களுக்கு உள்ளது. செப்டம்பர் 2024 கல்வி ஆண்டுக்கு முன்னதாக, கல்வி அனுபவத்தின் ஒரு பகுதியாக நியமிக்கப்பட்ட கற்றல் நிறுவனங்கள் போதுமான மற்றும் போதுமான மாணவர் ஆதரவை வழங்குவதை உறுதிசெய்ய, விசாக்களை கட்டுப்படுத்துவது உட்பட தேவையான நடவடிக்கைகளை எடுக்க நாங்கள் தயாராக இருக்கிறோம். இந்த முடிவை அடைவதற்கு, மாகாண மற்றும் பிராந்திய அரசாங்கங்கள், கற்றல் நிறுவனங்கள் மற்றும் பிற கல்வி நிறுவனங்களுடன் இணைந்து பணியாற்றுவது இன்றியமையாதது, எனவே கனடாவில் சர்வதேச மாணவர்கள் வெற்றிபெறுவதை எம்மால் உறுதிசெய்ய முடியும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

·வகுப்பறைகளில் மாணவர்கள் கற்கும் போது சர்வதேச மாணவர்கள் வளாகத்திற்கு வெளியே பணிபுரிய அனுமதிக்கப்படுவார்கள் அவர்கள் பணிபுரியும் மணிநேரங்களின் எண்ணிக்கையில் வாரத்திற்கு 20 மணிநேர வரம்பு மீதான விலக்கு ஏப்ரல் 30, 2024 வரை நீட்டிக்கப்படும். ஏற்கனவே கனடாவில் உள்ள சர்வதேச மாணவர்களும் விண்ணப்பதாரர்களும் டிசம்பர் 7, 2023 முதல் படிப்பு அனுமதிக்கான விண்ணப்பத்தை ஏற்கனவே சமர்ப்பித்தவர்கள், அதுவரை வாரத்திற்கு 20 மணிநேரத்திற்கு மேல் வேலை செய்ய முடியும். எதிர்காலத்தில் இந்த விடயத்தில் மேலும் சாதகமான மாற்றங்களைச் செய்யவுள்ளோம். அதாவது சர்வதேச மாணவர்களுக்கான கல்வி கற்கும் இடத்திற்கு வெளியோ பணிபுரியும் நேரத்தை வாரத்திற்கு 30 மணிநேரமாக வகுப்பு இருக்கும் போது விரிவுபடுத்துவது தொடர்பாகவும் ஆராய்ந்து வருகின்றோம் என்றார்.

# கனடாவிலிருந்து வெளிவரும் "இலக்கியவெளி" சஞ்சிகையின் மொழிபெயர்ப்புச் சிறப்பிதழின் வெளியீட்டு விழா சிறப்புற நடைபெற்றது









எழுத்தாளர் அகில் அவர்களை ஆசிரியராகக் கொண்டு கனடாவிலிருந்து வெளிவரும் "இலக்கியவெளி" சஞ்சிகையின் மொழிபெயர்ப்புச் சிறப்பிதழின் வெளியீட்டு விழா கடந்த வாரம் ஸ்காபுறோவில் அமைந்துள்ள ஒன்ராரியோ தமிழிசைக் கலாமன்ற மண்டபத்தில் சிறப்புற நடைபெற்றது. விழாவிற்கு கலாநிதி நா. சுப்பிரமணியன் ஐயா அவர்கள் தலைமை தாங்கினார்கள். எழுத்தாளரும் ஆசிரியருமான தங்கராஜா சிவபாலு அவர்கள் நிகழ்ச்சித் தொகுப்பாளராக நேர்த்தியாகச் செய்தார்.

சிறுகதைகள். கவிதைகள். கட்டுரைகள் என பல படைப்புக்கள் வெவ்வேறு மொழிகளிலிருந்து தமிழுக்கு மொழிபெயர்ப்பு செய்யப்பெற்று அந்த சிறப்பிதழில் அடக்கப்பெற்றிருந்தன. வாழ்த்துரைகள் மற்றும் சிறப்புரைகள் வெளியீட்டுரை என பல ஆக்கபூர்வமான உரைகளை அழைக்கப்பெற்ற பேச்சாளர்கள் ஆற்றி.

விழாவை அழகுற நகர்த்திச் சென்றார்கள்.

நூற்றுக்கணக்கான பார்வையாளர் விழாவில் கலந்து கொண்டு சஞ்சிகையின் பிரதிகளைப் பெற்றுச் சென்றார்கள்.

இங்கு காணப்படும் படங்கள் அங்கு எடுக்கப்பெற்றவையாகும்.

# நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் 3வது பாராளுமன்ற 10வது அமர்வின் தொடர் கூட்டங்கள் கடந்த 2ம் 3ம் திகதிகளில் ரொறன்ரோ ஹோட்டல் மண்டபம் ஒன்றில் நடைபெற்றது

நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் 3வது பாராளுமன்றத்தின் 10வது அமர்வின் தொடர் கூட்டங்கள் கடந்த 2ம் 3ம் திகதிகளில் ரொறன்ரோவில் அமைந்துள்ள ஹோட்டல் மண்டபம் ஒன்றில் நடைபெற்றது. காலை தொடக்கம் மாலை வரை நடைபெற்ற இரண்டு நாள் அமர்வுகளில் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர். அமைச்சர்கள். மற்றும் உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டு தங்கள் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டனர்.

இரண்டு நாட்களும் அமர்வுகளுக்கு சபாநாயகர் திருமதி முருகதாஸ் தலைமை தாங்கினார்.

பல்வேறு அமைச்சுக்கள் தொடர்பாக நடைபெற்ற விவாதங்களில் பல உறுப்பினர்கள் கடுமையான வாதங்களை முன்வைத்தனர். முக்கியமாக பிரதமர் அமைச்சுக்கள் கவனிக்க வேண்டிய விடயங்களை பிரதமர் அலுவலகம் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்து வீணான கால தாமதத்தை ஏற்படுத்தி வருவதாகவும் இதனால் பயனாளிகள் பாதிக்கப்படுவதாகவும் முக்கிய விடயங்களாக முன்வைக்கப்பட்டிருந்தன.








மண்டபத்தில் நேரடியாகக் கலந்து கொண்டவர்களோடு இணைந்து இணைய வழியாகவும் பிரதமரும் ஏனைய அமைச்சர்களும் உறுப்பினர்களும் கலந்து கொண்டு தங்கள் கருத்துக்களை முன்வைத்தனர்.

மேற்படி இரண்டு நாள் அமர்வுகளில் எடுக்கப்பட்ட முடிவுகள் பயனுள்ள வகையில் அமையும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளதாக கலந்து கொண்டு சில அங்கத்தவர்கள் ஊடகங்களோடு பகிர்ந்து கொண்டனர்.



# இவ்வார ராசிபலன்

## 08-12-2023 வெள்ளி தொடக்கம் 14-12-2023 வியாழன் வரையும்




**மேஷம்:** விரும்பிய பொருள் சேரும் வாரம். வி.ஐ.பியின் தொடர்பு கிடைக்கும். பயணத்தால் அனுகூலம் உண்டு. ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. உறவுகளின் ஒத்துழைப்பு கிடைக்கும். நண்பர்களால் நன்மை உண்டு. விவேகம் வெற்றி தரும். குடும்ப ஒற்றுமை மேம்படும். கடன் தொல்லை அகலும். தெளிவான முடிவுகள் உதயமாகும். எதிர்காலத் தேவைகள் பூர்த்தியாகும். பிள்ளைகளின் அன்பு அதிகரிக்கும். எண்ணங்கள் ஏற்றம் பெறும். பாதிப்புகள் அகலும். பிரார்த்தனையால் பலன் உண்டு. தொலைதூரத் தொடர்பு லாபம் தரும். விலை உயர்ந்த பொருட்களில் முதலீடு உண்டாகும். பொருளாதாரம் உயரும். பழைய சம்பள பாக்கிகளும் வந்து சேரும். உத்தியோகப் பெண்களுக்கு பதவி உயர்வு கிட்டும். கணவன், மனைவி ஒற்றுமை வளரும். வெற்றிப்பாதையில் அடி எடுத்து வைப்பீர்கள். திட்டமிட்ட காரியங்களில் ஒன்றிரண்டு நடந்தேறும். போட்டிகள் உருவாகி மறையும். பயணம் தவிர்ப்பது நல்லது. பொருளாதார ஏற்றம் பெறும். முகப்பொலிவு கூடும். உடல்நலம் சிறக்கும். தெம்பும், தைரியமும் கூடும். புதிய தொழில் முயற்சியை தள்ளிப் போடவும். திருமணமாகாத மங்கையருக்கு திருமண பாக்கியம் கைகூடும். கொடுக்கல், வாங்கலில் சுமூக நிலை ஏற்படும். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். பங்குச்சந்தை லாபம் கிட்டும். பணிவான பேச்சுக்கள் தேவை. இளைஞர்களுக்கு படிப்பிற்கு ஏற்ப உத்தியோகம் கிட்டும். பித்ருக்கள் சாபம் நீங்கும். புதிய வாகனங்களில் முதலீடு உண்டாகும். செய்த்தொழிலில் முன்னேற்றம் உண்டு. சேமிப்பு உயரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ பிரம்மசக்தி, அதிர்ஷ்ட எண்: 2,9,5,4

அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: N,C




**ரிஷபம்:** சச்சரவுகள் அகலும் வாரம். ஒரு சிலருக்கு கவுரவப் பதவிகள் தேடி வரும். அரசியல்வாதிகள், ஆன்மீகவாதிகள், உத்தியோகஸ்தர்கள் ஏற்றம் பெறுவார்கள். குலதெய்வ வழிபாடு மேன்மை தரும். வேண்டும் வரம் கிட்டும். தன்னம்பிக்கையும், துணிச்சலும் மேலோங்கும். கணவன், மனைவி உறவில் களிப்புறவு உண்டாகும். திட்டமிட்ட காரியங்கள் வெற்றி முகமாகும். பண நடமாட்டம் கூடும். செய்த்தொழில் சிறப்படையும். இனிப்பான செய்திகள் வரும். நீண்ட நாளைய நோய் விலகும். வெளிநாட்டு தொடர்பு ஆதாயம் தரும். கலைஞர்களுக்கு ஒப்பந்தம் குவியும். இல்வாழ்வில் இனிமை கூடும். தென்றல் வீசும். எதிர்ப்புக்கள் விலகும். பெண்களுக்கு மன அமைதியும், மகிழ்ச்சியும் கிட்டும். வெளிவட்டாரப் பழக்க வழக்கங்கள் நலம் தரும். இல்லத்தில் மனமகிழ்ச்சி கிட்டும். பணப்புழக்கம் சரளமாகும். கடன்சுமை குறையும். நலமே விளையும் இனிய வாரமாகும். வியாபாரத்தில் எதிர்பார்க்கும் லாபம் கிட்டும். இயற்கை காட்சிகளை கண்டு இன்புறுவீர்கள். புதிய வேலை முயற்சி பலிதமாகும். தெய்வ நம்பிக்கை அதிகரிக்கும். நல்ல சம்பவங்கள் நடைபெறும். அந்நிய தேச பயணம் உண்டு. இரும்பு தொழில் ஏற்றம் தரும். ஆபரணச் சேர்க்கையுண்டு. பாராட்டுக்கள் கூடும். கடன் விஷயத்தில் கவனம் தேவை. உறவினர் வருகையால் கலகலப்புக் குறையும். செயல்பாட்டில் கவனம் தேவை. எண்ணங்கள் பலிதமாகும். தாய் வழி தகராறுகள் குறையும். கனவுகள் பலிதமாகும். கௌரவம் உயரும். கடன் சுமை குறையும். காதலர்களுக்குள் கசப்பு நீங்கும். பேச்சில் நிதானம் தேவை. பூமி வாங்கும் யோகம் உண்டு. நண்பர்களால் நன்மை உண்டு. ஏற்றுமதி தொழில் லாபம் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: குபேர பகவான், அதிர்ஷ்ட எண்: 4,9,5,1

அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,H




**மிதுனம்:** பெண்களால் ஆதாயம் கிடைக்கும் வாரம். தேவைகள் பூர்த்தியாகும். மதிநுட்பத்தோடு செயல்பட வேண்டும். கலைத்தொழில் கவனம் தேவை. மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். மனை வாங்கும் சிந்தனை உதயமாகும். பாதகமான சூழ்நிலை அகலும். பக்குவமான பேச்சு பயன் தரும். ஏற்றமும், மாற்றமும் அதிகரிக்கும். நீண்ட நாள் பிரச்சனை முடிவுக்கு வரும். நல்லோர்களின் வாழ்த்து அதிகரிக்கும். பயணத்தால் அனுகூலம் உண்டு. சுபச்செய்தி வரும். கால்நடைகளால் பலன் உண்டு. ஸ்டேஷனரி தொழில் லாபம் தரும். பிள்ளைகளால் செலவு அதிகரிக்கும். ஆடை, அணிகலன் சேரும். மனச்சஞ்சலம் ஏற்படும். பகையாளியிடம் எச்சரிக்கை தேவை. பழையக் கடன் பஞ்சாயத்து மூலம் தீர்வுக்கு வரும். வாகனத்தால் கவனம் தேவை. வம்பு தும்புகள் ஒழியும். வெளிவாட்டாரப் பழக்கம் அதிகமாகும். வேலையாட்களிடம் கவனம் தேவை. மாற்று இனத்தவரால் ஆறுதல் அதிகரிக்கும். சாதனையான எண்ணங்கள் உதயமாகும். மற்றவர்களிடம் மரியாதை உயரும். பெற்றோர்களின் பாராட்டு கிட்டும். கலைந்த குடும்பம் ஒன்று சேரும். மனைவியால் மருத்துவச் செலவு உண்டு. கலகலப்பான செய்திகள் வந்து சேரும். உத்தியோகத்தில் உற்சாகம் கூடும். எதிரிகள் ஏமாற்றம் அடைவர். ஆரோக்யம் அதிகரிக்கும். ஆக்கப்பூர்வமான எண்ணம் உதயமாகும். கமிஷன் தொழில் லாபம் தரும். அடுத்த நபரால் ஆதாயம் உண்டு. எதிர்பார்த்த தொழில் பெரும் லாபம் தரும். இல்லம் தேடி வாய்ப்பு வரும். மற்றவர்களால் அனுகூலம் உண்டு. மாணவர்கள் உற்சாகம் கூடும். விலை உயர்ந்த பொருட்களில் முதலீடு உண்டாகும். தொலைதூர தொடர்பு லாபம் தரும். பாக்கெட்டில் காசும் கரையாது. தொட்டது துலங்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: வீரமுக ஆஞ்சநேயர், அதிர்ஷ்ட எண்: 2,4,9,1

அதிர்ஷ்ட நிறம்: வைலட், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,K




**கடகம்:** பிள்ளைகளால் பெருமை சேரும் வாரம். கையிருப்புகள் கரையும். உறவினர்களால் சஞ்சலம் ஏற்படும். புது முயற்சிகள் தாமதமாகும். பங்குச்சந்தை லாபம் தரும். பணியில் மாற்றம் ஏற்படும். பயணத்தில் கவனம் தேவை. குடும்ப ஆரோக்யம் சீராகும். கூட்டுத்தொழில் சுமாராக இருக்கும். வியாபாரிகளுக்கு கவனம் தேவை. தொழிலாளர்களுக்கு உயர்வுகள் கிடைக்கும். திருப்புமுனையான காலம். தங்க நகைகள் சேரும். உடல்நலனில் அக்கறை தேவை. செல்வாக்கு உயரும். மாணவர்களுக்கு எச்சரிக்கை தேவை. நல்ல செய்திகள் நாடி வரும். முயற்சிகள் வளர்ச்சி அடையும். கௌரவத்தில் கவனம் தேவை. கலக்கமான மனநிலை காணப்படும். பயணம் அனுகூலம் தரும். திட்டமிட்ட காரியம் வெற்றி பெறும். எண்ணம் வண்ணமயமாகும். எதிர்ப்புக்கள் தவிடுப் பொடியாகும். நண்பர்களால் மதிப்பு உயரும். அதிகாரியின் பாராட்டு கிடைக்கும். புகழ்ச்சி அதிகரிக்கும். பணியில் இடமாற்றம் ஏற்படும். ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. உதவிகள் குவியும். நீண்ட கால எண்ணம் நிறைவேறும். போதிய தனவரவு இருக்கும். மாலை நேரத்தில் கவனம் தேவை. பொறுப்புகள் கூடும். சேமிப்பு அதிகமாகும். புதிய சிந்தனை உதயமாகும். கண்ணாடி பொருட்கள் சேதம் உண்டாகும். கடவுள் பிரார்த்தனை கை கொடுக்கும். பணவரவு உண்டு. அத்தியாவசிய செலவுகள் ஏற்படும். உற்சாகம் அதிகரிக்கும். உயர்வுகள் தாமதமாகும். தன சேர்க்கை உண்டு. மனநிம்மதி குறையும். அலைச்சல் அதிகரிக்கும். இக்கட்டான சூழ்நிலைகள் அகலும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். உழைப்பு கடுமையாக இருக்கும். பெரியவர்களை அனுசரித்து செல்வது நல்லது. பாக்கிகள் வசூலாகும். பணியாட்களிடம் கவனம் தேவை.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீபொன்னியம்மன், அதிர்ஷ்ட எண்: 9,5,4,1

அதிர்ஷ்ட நிறம்: கருப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,T


ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள் 'ராஜயோகம்'

Dr. K. RAM.Ph.D (USA)

தொடர்புக்கு: 0091-9840160068 9940431377




**சிம்மம்:** வெற்றிச் செய்தியை தொட்டு ரசிக்கும் வாரம். கலை ஆர்வம் பெருகும். பொருளாதார வளம் மேம்படும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். எதிரிகள் பலம் குறையும். வீடு, மனை யோகம் உண்டு. வழக்கு வெற்றி தரும். புதிய கடன் வாங்க நேரிடும். மனதில் உற்சாகம் கூடும். உறவினர்கள் வருகை ஏற்படும். குழந்தைகளால் மகிழ்ச்சி உண்டு. செல்வாக்கு உயரும். முன் கோபம் தவிர்க்கவும். மாணவர்களுக்கு உற்சாகம் கூடும். வர்த்தக தொழில் லாபம் தரும். நீண்ட நாளைய கனவு நிறைவேறும். பொருளாதார சிக்கல் நீடிக்கும். ஆடம்பரச் செலவு அதிகரிக்கும். பால்ய நண்பர்களைச் சந்திக்க நேரிடும். மருத்துவர்களுக்கு நற்பெயர் கிட்டும். புதிய சொத்து சேரும். மாற்று இன உதவி கிட்டும். ஆடை, அணிகலன் சேரும். பெண்களுக்கு யோகம் கூடும். குழப்பங்கள் நீங்கும். கலைத்துறை முன்னேற்றம் கொடுக்கும். எதிரிகள் பலம் குறையும். நல்லவர் நட்பு கிட்டும். தாய்வழி உறவில் கவனம் தேவை. தோற்றப் பொலிவு கூடும். பணத்தட்டுப்பாடு ஏற்படும். கணவன், மனைவி சச்சரவு ஏற்படும். அரசு வாய்ப்பு தடைப்படும். செயல் திறமை அதிகரிக்கும். கொடுத்த வாக்கை, காப்பாற்றுவீர்கள். அலைபேசித் தகவல் ஆதாயம் தரும். புது முயற்சிகள் பலன் தரும். ஆன்மீகப் பயணம் மேற்கொள்வீர்கள். காதலர்களுக்குள் கசப்பு நீங்கும். கடன்சுமை குறையும். கனவுகள் பலிதமாகும். கௌரவம் உயரும். ஆசைகள் நிறைவேறும். பணியில் இடமாற்றம் ஏற்படும். திட்டமிட்ட காரியம் வெற்றி பெறும். அதிகாரியின் பாராட்டு கிடைக்கும். விரோதங்கள் விலகும். வெளிநாட்டுத் தொடர்பு ஆதாயம் தரும். விலை உயர்ந்த பொருட்களில் முதலீடு உண்டாகும். தெம்பும், தைரியமும் கூடும். திருமணமாகாத மங்கையருக்கு திருமண பாக்கியம் கைகூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: காட்டேரி முனிசாமி, அதிர்ஷ்ட எண்: 4,6,7,1

அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: R,L




**கன்னி:** புகழும், புண்ணியமும் கிடைக்கும் வாரம். கருத்து வேறுபாடுகள் விலகும். சகோதர வகையில் சகாயம் கிடைக்கும். விரயம் குறையும். வியாபாரம் சிறக்கும். மனைவி பிள்ளைகளிடம் மதிப்பு உயரும். திடீர் பயணம் ஏற்படும். தொழில் வளர்ச்சி கூடும். ஆடம்பர செலவுகள் அதிகரிக்கும். பயணத்தில் கவனம் தேவை. வயிறு உபாதைகள் வந்து போகும். களவு போன பொருள் திரும்ப கிடைக்கும். வார்த்தைகளில் கவனம் தேவை. சோம்பல் அதிகரிக்கும். பதவி உயர்வு தாமதமாகும். சாதனையை சந்திப்பீர்கள். பொருள் வரவு ஏற்படும். பெண்களின் ஆலோசனை பெருமை சேர்க்கும். புதிய தொழில் வாய்ப்பு ஏற்படும். பொது வாழ்வில் புகழ் கூடும். பெற்றோர்களால் பெருமை சேரும். முயற்சிகள் பலிதமாகும். நல்ல செய்திகள் நாடி வரும். நீண்ட நாளைய கனவு நிறைவேறும். தடைகள் அகலும். உயர்பதவி யோகமுண்டு. உற்சாகம் களைகட்டும். மாற்றங்களை சந்திப்பீர்கள். பேச்சுத்திறமை அதிகரிக்கும். ஏற்றுமதி தொழிலில் கவனம் தேவை. ஆலய தரிசனம் அமைதி தரும். வெளியூர் பயணம் உண்டு. மனக்குழப்பம் நீங்கும். திருமண வாய்ப்பு கூடிவரும். பேச்சில் நிதானம் தேவை. ஞாபக மறதி ஏற்படும். உறவினர் வழியால் செலவுகள் அதிகரிக்கும். வீண் பழி அகலும். பொன், பொருள் சேரும். எதிரிகளால் தொல்லை உண்டாகும். பழைய கடன் வசூலாகும். வெளிநாட்டுத் தொடர்பு ஏற்படும். திறமையால் பெருமை சேரும். பேச்சில் இனிமை கூடும். கலைத்தொழிலில் நிலை உயரும். விளையாட்டுத் துறையால் வெற்றிக் கிட்டும். பொருளாதார சிக்கல் நீடிக்கும். நீண்டநாள் பிரச்சனை முடிவுக்கு வரும். வர்த்தகத் தொழில் லாபம் தரும். பயணம் பலன் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: நவகிரஹம், அதிர்ஷ்ட எண்: 8,4,5,1

அதிர்ஷ்ட நிறம்: இந்திர நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: B,Q




**துலாம்:** வகையான வாழ்வும் முறையாக கிடைக்கும் வாரம். விரயங்கள் அதிகரிக்கும். பணவரவு கூடும். கணவன், மனைவி உறவில் ஒற்றுமை வளரும். திட்டமிட்ட காரியங்கள் வெற்றியாகும். கொடுக்கல், வாங்கலில் சுமூக நிலை ஏற்படும். பணப்புழக்கம் சீராக இருந்து வரும். தடைகள் விலகும். ஞாபகத் திறன் அதிகரிக்கும். மாணவர்களுக்கு சாதகமான காலம். முயற்சிகளில் தாமதம் ஏற்படும். வியாபாரம் வெற்றி தரும். உத்தியோகத்தில் உயர்வு உண்டு. ஞாபகத்திறன் அதிகரிக்கும். தனலாபம் கூடும். உடல்நலனில் அக்கறை தேவை. குடும்பத்தில் அமைதி நிலவும். நண்பர்கள் உதவி கிட்டும். நீண்ட நாளைய நோய் விலகும். பணவரவு திருப்தி தரும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். இல்லத்தில் அமைதி கூடும். சுமூகமான சூழ்நிலை பெருகும். ஆண்களின் அதிகாரம் உயரும். பெண்களால் பெருமை சேரும். வறுமையின் வாட்டம் குறையும். பெருமை மிக்க காலம். மாலை நேரத்தில் கவனம் தேவை. வெளியூர் பிரயாணம் வெற்றி தரும். வெகுமானம் கிடைக்கக் கூடிய காலம். வழக்குகள் சாதகமாகும். இனம் புரியாத சந்தோஷம் ஏற்படும். வாய் பேச்சில் நிதானம் தேவை. வறுமையின் வாட்டம் குறையும். எதிர்ப்புகள் உருவாகி மறையும். பொன்னான காலம். சுபச்செலவு அதிகரிக்கும். சாதகமான வாய்ப்பு அமையும். குழப்பங்கள் அகலும். முன்கோபம் தவிர்க்கவும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். நீண்ட நாள் பிரச்சனை முடிவுக்கு வரும். செயல்களில் கவனம் தேவை. பழைய பாக்கி வசூலாகும். வணிகத்தொழில் வளம் கூடும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். உதவும் குணம் அதிகரிக்கும். பழையக் கடன் தீரும். புதிய நட்பு உருவாகும். முற்போக்கு சிந்தனை வரும். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: சிவபெருமான், அதிர்ஷ்ட எண்: 2,4,9,8

அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: G,E




**விருச்சிகம்:** புகழும், பொருளும் பெருகும் வாரம். வழக்குகளில் வெற்றி உண்டு. நண்பர்களால் நன்மை உண்டு. வாழ்வில் வசந்தம் உண்டு. வயிற்று உபாதைகளும் உண்டு. வரவுகளால் திருப்தி உண்டு. வாழ்க்கையில் மேன்மை உண்டு. வாகனத்தால் செலவு உண்டு. பெற்றவர்களின் வாழ்த்து உண்டு. கடன் வாங்க நேரிடும். நன்மைகள் பெருகும். கல்வியில் கவனம் தேவை. குடும்ப குழப்பம் தீரும். பணப்பற்றாக்குறை நீங்கும். வாகன மாற்றம் ஏற்படும். ஷேர் மார்க்கெட்டில் லாபம் தரும். உத்தியோக இடமாற்றம் ஏற்படும். விளையாட்டுத் துறையில் வெகுமதி கிடைக்கும். பிள்ளைகளால் அலைச்சல் உண்டு. உடல்நலனில் அக்கறை தேவை. தனம் சேரும். மனைவியின் கோபம் அதிகரிக்கும். ஏற்றங்கள் அமையும். தோற்றப் பொலிவு கூடும். மாற்றத்தை விரும்புவீர்கள். மனக்கட்டுப்பாடு அவசியம். பணத்தட்டுப்பாடு நீங்கும். குடும்ப மேன்மை உண்டாகும். உடல்சோர்வு ஏற்படும். பிள்ளைகளின் அன்பு அதிகரிக்கும். ஆக்கம் அதிகரிக்கும். தெளிவான முடிவுகள் உதயமாகும். காரியம் கைகூடும். செல்வச் செழிப்பு உயரும். விவேகம் கைகொடுக்கும். வெற்றி வீடு தேடி வரும். பிரபலங்களை சந்திக்கும் வாய்ப்பு ஏற்படும். மின்சாரத்தில் கவனம் தேவை. புத்துணர்ச்சியோடு செயல்படுவீர்கள். ஆடம்பர நாட்டம் ஏற்படும். விவசாயிகளுக்கு ஏற்றமான காலம். பிராணிகளால் தொல்லை ஏற்படும். பெண்களால் பெருமை சேரும். இனிய தகவல் வந்து சேரும். முயற்சிகள் பலிதமாகும். வெளிநாட்டு பயணம் ஏற்படும். வியாபார விருத்தி ஏற்படும். பாக்கிகள் வசூலாகும். உறவுகளால் மதிப்பு கூடும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: விக்ரஹ விநாயகர், அதிர்ஷ்ட எண்: 8,5,4,3

அதிர்ஷ்ட நிறம்: இளம் பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: M,Y (தொடர்ச்சி _26_ பக்கம்)

# அன்பின் தொனி - 715

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**தேவகிருபை** - Grace of God

**தேவவார்த்தை ஜீவவார்த்தை**

அல்லேலூயா, வானங்களில் உள்ளவைகளே, கர்த்தரைத் துதியுங்கள், உன்னதங்களில் அவரைத் துதியுங்கள். அவருடைய தூதர்களே, நீங்கள் யாவரும் அவரைத் துதியுங்கள், அவருடைய சேனைகளே, நீங்கள் யாவரும் அவரைத் துதியுங்கள். சூரிய சந்திரரே, அவரைத் துதியுங்கள், பிரகாசமுள்ள சகல நட்சத்திரங்களே, அவரைத் துதியுங்கள். வானாதிவானங்களே, அவரைத் துதியுங்கள், ஆகாயமண்டலத்தின் மேலுள்ள தண்ணீர்களே, அவரைத் துதியுங்கள். அவைகள் கர்த்தரின் நாமத்தைத் துதிக்கக்கடவது, அவர் கட்டளையிட அவைகள் சிருஷ்டிக்கப்பட்டது. அவர் அவைகளை என்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் நிலைக்கும்படி செய்தார், மாறாத பிரமாணத்தை அவைகளுக்கு நியமித்தார். பூமியிலுள்ள வைகளே, கர்த்தரைத் துதியுங்கள், மகாமச்சங்களே, சகல ஆழங்களே, அக்கினியே, கல்மழையே, உறைந்தமழையே, மூடுபனியே, அவர் சொற்படிசெய்யும் பெருங்காற்றே, மலைகளே, சகலமேடுகளே, கனிமரங்களே, சகலகேதுருக்களே, காட்டுமிருகங்களே, சகல நாட்டு மிருகங்களே, ஊரும் பிராணிகளே, இறகுள்ள பறவைகளே, பூமியின் ராஜாக்களே, சகல ஜனங்களே, பிரபுக்களே, பூமியிலுள்ள சகல நியாயாதிபதிகளே, வாலிபரே, கன்னிகைகளே, முதிர்வயதுள்ளவர்களே, பிள்ளைகளே, கர்த்தரைத் துதியுங்கள். அவர்கள் கர்த்தரின் நாமத்தைத் துதிக்கக்கடவர்கள், அவருடைய நாமம் மாத்திரம் உயர்ந்தது, அவருடைய மகிமை பூமிக்கும் வானத்திற்கும் மேலானது. அவர் தம்முடைய பரிசுத்தவான்கள் யாவருக்கும், தம்மைச் சேர்ந்த ஜனமாகிய இஸ்ரவேல் புத்திரருக்கும் கொண்டாட்டமாக, தம்முடைய ஜனத்திற்கு ஒரு கொம்பை உயர்த்தினார். அல்லேலூயா.

**- சங்கீதம் 148: 1-14**

அல்லேலூயா, கர்த்தருக்குப் புதுப்பாட்டைப் பாடுங்கள், பரிசுத்தவான்களின் சபையிலே அவருடைய துதி விளங்குவதாக. இஸ்ரவேல் தன்னை உண்டாக்கினவரில் மகிழவும், சீயோன் குமாரர் தங்கள் ராஜாவில் களிகூரவுங்கடவர்கள். அவருடைய நாமத்தை நடனத்தோடே துதித்து, தம்புரினாலும் கின்னரத்தினாலும் அவரைக் கீர்த்தனம் பண்ணக்கடவர்கள். கர்த்தர் தம்முடைய ஜனத்தின் மேல் பிரியம் வைக்கிறார், சாந்த குணமுள்ளவர்களை இரட்சிப்பினால் அலங்கரிப்பார். பரிசுத்தவான்கள் மகிமையோடே களிகூர்ந்து, தங்கள் படுக்கைகளின்மேல் கெம்பீரிப்பார்கள். ஜாதிகளிடத்தில் பழிவாங்கவும், ஜனங்களைத் தண்டிக்கவும், அவர்களுடைய ராஜாக்களைச் சங்கிலிகளாலும், அவர்களுடைய மேன் மக்களை இருப்பு விலங்குகளாலும் கட்டவும், எழுதப்பட்ட நியாயத்தீர்ப்பை அவர்கள்பேரில் செலுத்தவும், அவர்கள் வாயில் கர்த்தரை உயர்த்தும் துதியும், அவர்கள் கையில் இருபுறமும் கருக்குள்ள பட்டயமும் இருக்கும். இந்தக் கனம் அவருடைய பரிசுத்த வான்கள் யாவருக்கும் உண்டாகும். அல்லேலூயா.

**- சங்கீதம் 149: 1-9**

அல்லேலூயா, தேவனை அவருடைய பரிசுத்த ஸ்தலத்தில் துதியுங்கள், அவருடைய வல்லமை விளங்கும் ஆகாய விரிவைப்பார்த்து அவரைத் துதியுங்கள். அவருடைய வல்லமையுள்ள கிரியைகளுக்காக அவரைத் துதியுங்கள், மாட்சிமை பொருந்திய அவருடைய மகத்துவத்திற்காக அவரைத் துதியுங்கள். எக்காள தொனியோடே அவரைத் துதியுங்கள், வீணையோடும் சுரமண்டலத்தோடும் அவரைத் துதியுங்கள். தம்புரோடும் நடனத்தோடும் அவரைத் துதியுங்கள், யாழோடும் தீங்குழலோடும் அவரைத் துதியுங்கள். ஓசையுள்ள கைத்தாளங்களோடும் அவரைத் துதியுங்கள், பேரோசையுள்ள கைத்தாளங்களோடும் அவரைத் துதியுங்கள். சுவாசமுள்ளயாவும் கர்த்தரைத் துதிப்பதாக. அல்லேலூயா.

**- சங்கீதம் 150: 1-6**

உத்தமத்திலே நடக்கிறான் திராட்சரசம் பரியாசஞ் செய்யும், மதுபானம் அமளிபண்ணும், அதினால் மயங்குகிற ஒருவனும் ஞானவானல்ல. ராஜாவின் உறுக்குதல் சிங்கத்தின் கெர்ச்சிப்புக்குச் சமானம், அவனைக் கோபப்படுத்துகிறவன் தன் பிராணனுக்கே துரோகஞ் செய்கிறான். வழக்குக்கு விலகுவது மனுஷனுக்கு மேன்மை, மூடனானவன் எவனும் அதிலே தலையிட்டுக்கொள்வான். சோம்பேறி குளிருகிறதென்று உழமாட்டான், அறுப்பிலே பிச்சை கேட்டாலும் அவனுக்கு ஒன்றுங்கிடையாது. மனுஷனுடைய இருதயத்திலுள்ள யோசனை ஆழமான தண்ணீர் போலிருக்கிறது, புத்திமானோ அதை மொண்டெடுப்பான். மனுஷர் பெரும்பாலும் தங்கள் தயாளத்தைப் பிரசித்தப்படுத்துவார்கள், உண்மையான மனுஷனைக் கண்டுபிடிப்பவன் யார்? நீதிமான் தன் உத்தமத்திலே நடக்கிறான், அவனுக்குப்பிறகு அவன் பிள்ளைகளும் பாக்கியவான்களாயிருப்பார்கள். நியாயாசனத்தில் வீற்றிருக்கும் ராஜா தன் கண்களினால் சகல பொல்லாப்பையும் சிதற ப்பண்ணுகிறான். என் இருதயத்தைச் சுத்தமாக்கினேன், என் பாவமறத் துப்புரவானேன் என்று சொல்லத்தக்கவன் யார்? வெவ்வேறான நிறை கல்லும், வெவ்வேறான மரக்காலும் ஆகிய இவ்விரண்டும் கர்த்தருக்கு அருவருப்பானவைகள். பிள்ளையானாலும், அதின் செய்கை சுத்தமோ செம்மையோ என்பது, அதின் நடக்கையினால் விளங்கும். கேட்கிறகாதும், காண்கிறகண்ணும் ஆகிய இவ்விரண்டையும் கர்த்தர் உண்டாக்கினார். தூக்கத்தை விரும்பாதே, விரும்பினால் தரித்திரனாவாய், கண் விழித்திரு அப்பொழுது ஆகாரத்தினால் திருப்தியாவாய். கொள்ளுகிறவன்: நல்லதல்ல, நல்லதல்ல என் பான், போய்விட்டபின்போ மெச்சிக்கொள்வான். பொன்னும் மிகுதியான முத்துக்களும் உண்டு, அறிவுள்ள உதடுகளோ விலையுயர்ந்த இரத்தினம்.

**- நீதிமொழிகள் 20: 1-15**


**தொடரும்...**

# ஈழத்துத் திருக்கோயில்கள்

வரலாறும் மரபும் 1077



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



## ஆரையம்பதி பரமநயினார் (ஐயனார்) கோயில் மட்டக்களப்பு

*"அரிஹர குமாரா அடியேன் அழைக்க*
*வருவா யுன்றன் மனமுவந் தென்முன்*
*மாயவன் சிவன் மகன் வருக வருக*
*நேயமாய்ப் பூரணை நினைவோன் வருக*
*புட்கலை மணாளா போற்றிட வருக வருகவே..."*

இந்துக்களின் வரலாறு பெரும்பாலும் புராணக்கதைகளை அடிப்படையாகக் கொண்டும் மரபு ரீதியாகவும் தொன்றுதொட்டு பின்பற்றப்படுகின்றது. ஐயனாருக்கும் ஐயப்பனுக்கும் உள்ள தொடர்பு என்ன? இருவரும் ஒருவரா,? என்ற கேள்வி இன்றுவரை அனேகமானவர்களிடையே காணப்படுகின்றது. உலகிலுள்ள ஐயப்ப பக்தர்கள் மார்கழி மாதத்தை ஐயப்பவிரதகாலமாகக் கொள்கின்றனர். இந்துசமயத்திலே காணப்படுகின்ற தெய்வ வழிபாட்டிலே அநீதியை அழித்து மக்களது துயர்துடைக்க அவதாரங்கள் தோற்றுவிக்கப்படுவதை புராணக்கதைகள் டுத்துரைத்துள்ளன. இவ்வாறான ஒரு சூழ்நிலையில்தான் காவற்தெய்வமாகப்போற்றப்பட ஐயனாரின் அவதாரமாக. ஐயப்பன் தோற்றம் பெற்றுள்ளார். மானிட அவதாரமெடுத்து மக்களைக் காக்கவந்த ஐயப்பன், மாயவன் சிவன் மகனான ஐயனாரின் அவதாரமாகப் போற்றப்படுகின்றார்.

தற்காலத்திலே மானிடவியல், சமூகவியல், ஒப்பீட்டுச்சமயம், தென்னாசிய வரலாறு ஆகிய துறைகளில் பல மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. இந்து சமய வழக்காறுகள், வழமைகள், இந்து சமூக அமைப்பிலே ஆலயங்களும், சமயமும் பெறும் பங்கு, குடும்பம், தொழில் போன்றவற்றோடு சமயம் கொண்டுள்ள தொடர்பு, போன்ற பல விடயங்களை கல்வித்துறைசார்ந்த அறிஞர்கள் பலமொழிகளிலும் எழுதி வருகின்றனர். தற்காலத்தில் மேற்குலகிலும் இந்துசமயத்தின் கூறுகள் பலவும் மேற்குலக மக்களால் பின்பற்றப்பட்டு வருவதோடு, வளர்ந்துவரும் விஞ்ஞானத்தின் ஆய்வுக்குட்பட்ட பொருளாகவும் இந்துசமயம் விளங்கி வருகின்றது. இவை யாவற்றினுடைய அடிநாதமாக விளங்குபவை இந்து ஆலயங்கள் எனின் அவை மிகையாகாது.

இந்துக்களின் வாழ்க்கையில் ஆலயங்கள் முக்கிய பங்கை வகிக்கின்றன. ஆலய வளர்ச்சியின் மூலம் மக்களிடையே ஆன்மீக வளர்ச்சி ஏற்பட்டு வந்தமையை வரலாறுகள் மூலம் அறிய முடியும். பண்டைக்காலத்திலே அரசர்களும், சான்றோர்களும், அறங்காவலர்களும், ஆலயங்களைப் பேணிப் பாதுகாத்து வந்துள்ளனர். ஆலயங்களின்மூலம் சமயஉண்மைகளையும், சமய வாழ்க்கை முறையையும் உணர முடிவதோடு, நல்லதொரு சமுதாயத்தை உருவாக்கும் சான்றோராகவும் விளங்க ஆலயங்கள் வழிகாட்டி வருகின்றன.

பாரம்பரியம் மிக்க இனமான தமிழர்களுடைய வரலாறு, பண்பாடு, கலாச்சாரத்தை அழித்தொழிக்க எண்ணுவோர், இந்து ஆலயங்களை அழிப்பதில் முதன்மை வகிக்கின்றனர். தற்காலத்திலும் தமிழீழ தாயகத்திலும், இலங்கையின் ஏனைய பகுதிகளிலுமுள்ள பல ஆலயங்கள் அழிவுக்குள்ளாகி இருப்பது கண்கூடு. இத்தகைய சூழ்நிலையில் ஆலய வரலாறுகளையும் அதனோடு தொடர்புடைய தமிழர் வரலாறு, மற்றும் தமிழர் பின்பற்றும் மரபுகளையும் அறிந்து பாதுகாப்பது அவசியமாகின்றது.

காவும் பொழிலும் கழிமுகமும், புள்ளணிந்து ஏரியும், இலங்கையின் சீரார் குணதிசையில், ஏரால் இயன்ற செந்நெல் இன்சுவை, தெங்கின் இளநீரும் தீம்பலாவின் கனிகளும் எங்கும் குறையாது வழங்கும் நன்னாடு, எனப் பல்லோராலும் போற்றப்படும் தகமை சான்ற திருநாடு மட்டக்களப்பு. இத்தகைய இயற்கை எழில்சூழ் மட்டக்களப்புத் திருநாட்டின் தென்பால், ஆரையம்பதி என்னும் அழகிய கிராமம் காணப்படுகின்றது. ஆரையம்பதியின் எல்லைகளாக தெற்கே தாழங்குடாவும், மேற்கே வாவியும், கிழக்கே கடலும், வடக்கே காத்தான்குடியும், அமைந்துள்ளன.

ஆரையம்பதியின் முகத்துவாரம் தெரு சனத்தொகை கூடிய பிரதேசமாகக் காணப்படுகின்றது. ஆரையம்பதியின் முகத்துவாரமாய் விளங்கியதால் முகத்துவாரம் தெரு எனக் காரணப்பெயர் ஏற்படலாயிற்று. ஸ்ரீ பரமநயினார் கோயிலென வழங்கும் ஐயனார்கோயில் முகத்துவாரம் தெருவிலுள்ளது. பரமநயினார் என்னும் பெயரானது, எல்லாம்வல்ல இறைவன் என்னும் பொருள் கொண்டதாகக் காணப்படுகின்றது. அத்தோடு பரமநயினார் என்னும் பெயர் எல்லாம் வல்லவரான ஐயனாரைக் குறிப்பதாகவும் அமைகின்றது.

ஐயனார் வரலாறு புராணக்கதைகளோடு தொடர்புடையதாகக் கூறப்பட்டுள்ளது. புராணக்கதைகள் மக்களுக்குச் சில விடயங்களை உணர்த்தவேண்டி எழுந்தவையாகக் கொள்ளவேண்டும். புராணக் கதைகள் புனைகதைகள் எனக் கருதுவதை விடுத்து, அவற்றிலே காணப்படும் சாரம் எவ்வாறு மக்கள் வாழ்க்கையை நெறிப்படுத்த அன்றுதொட்டு இன்று வரை உதவி வருகின்றது என்பதைக் கருத்திற் கொள்வது அவசியமாகின்றது.

புணக்கதைகளிலே அறிவியலின் கூறுகளும் புதைந்துள்ளதை மனதிற்கொள்ளவெண்டும். கற்றோரும் மற்றோரும் வாழ்வாங்கு வாழவேண்டி எழுந்தவையாகவே புராணக்கதைகள் காணப்படுகின்றன. புராணக்கதைகள் கற்பனைவளங் கொண்டவையாகக் காணப்படினும், தற்காலவாழ்வியலில் இவற்றின் கூறுகளை உய்த்துணர முடிகின்றது. புராணம் என்பதற்குத் தொன்மை, பழமை என்ற கருத்துக்களும் காணப்படுகின்றன. அனேகமான புராணக் கதைகளின் சாரமாக, மக்கள் மனங்களிலே காணப்படும் ஆணவம், கன்மம், மாயை இவற்றை அகற்றி, மக்கள் வாழ்வாங்கு வாழ வழிகாட்டும் தன்மைகொண்டனவாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

**- வளரும்...**


## இவ்வார ராசிபலன்

( 24 பக்கத் தொடர்ச்சி)




**தனுசு:** முன்னேற்றம் கிடைக்கும் வாரம். வாழ்த்துக்கள் கிட்டும். பெற்றோர் வழியில் பிரியம் கூடும். பிரியமானவர்களால் செலவு அதிகரிக்கும். திறமைகள் வெளிப்படும். மனநிம்மதி கூடும். கடன் வாங்க நேரிடும். பங்குச்சந்தையில் கவனம் தேவை. குடும்ப அன்யோன்யம் கூடும். மாற்று இனத்தவரால் நன்மை உண்டு. உறவுகளால் செலவுகள் அதிகரிக்கும். அயல்நாட்டுப் பயணம் உண்டு. வினோதமான எண்ணங்கள் பூர்த்தியாகும். உத்தியோகத்தில் உயர்வு கிடைக்கும். வியாபாரிகளுக்கு லாபம் அதிகமாகும். ஆன்மீகப் பயணம் மேற்கொள்வீர்கள். புது முயற்சிகள் பலன் தரும். அலைபேசி தகவல் ஆதாயம் தரும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். நம்பிக்கை துளிர்விடும். நல்லோர்களின் சந்திப்பு கிட்டும். ஆலோசனைகளால் ஆதாயம் உண்டு. இனம் புரியா சந்தோஷம் குடிக்கொள்ளும். உரிய நேரத்தில் உதவிகள் கிட்டும். பிரார்த்தனை பலன் கொடுக்கும். பொது வாழ்வில் புகழ் கூடும். பணவரவு திருப்தி தரும். உடன்பிறப்புக்களால் உதவி கிடைக்கும். மதிப்பும், மாரியாதையும் உயரும். குடும்பத்தினரிடம் அனுசரிப்பு கிட்டும். இடமாற்றம் நன்மை தரும். அரசுத்துறையில் ஆதாயம் உண்டு. பூர்வீகச் சொத்துக்கள் கிட்டும். அலைச்சல் அதிகரிக்கும். செல்வாக்கு மேம்படும். திருமண முயற்சி பலன் தரும். தொழில் வாய்ப்புக்கள் பெருகும். கணவன், மனைவி வாக்குவாதம் ஏற்படும். கலைஞர்களுக்கு வாய்ப்பு வரும். வேண்டாத உறவுகளை தவிர்க்கவும். விவசாய கோரிக்கைகள் நிறைவேறும். ஆசைகள் பூர்த்தியாகும். திடீர் பயணம் உற்சாகம் தரும். வாக்குவாதத்தை தவிர்ப்பது நல்லது. லஷ்மி கடாட்ஷம் பெருகும். பண நடமாட்டம் உண்டு. உழைப்பிற்கான பலன் கிடைக்கும். நீண்ட நாள் நோய் விலகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ மூகாம்பிகை, அதிர்ஷ்ட எண்: 1,5,6,9
அதிர்ஷ்ட நிறம்: சில்வர் கிரே (வெள்ளி), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,F




**மகரம்:** பொன்னும், பொருளும் சேரும் வாரம். நற்காரியங்களால் கீர்த்தி பெருகும். செய்த்தொழில் சிறப்படையும். கலைஞர்களுக்கு ஒப்பந்தம் குவியும். பிள்ளைகள் வழியில் மகிழ்ச்சி கிட்டும். ஒரு சிலருக்கு கவுரவப் பதவிகள் தேடி வரும். உத்தியோகஸ்தர்கள் ஏற்றம் பெறுவார்கள். புதிய வாகனங்களில் முதலீடு உண்டாகும். செய்த்தொழில் முன்னேற்றம் உண்டு. சேமிப்பு வளரும். பங்குச்சந்தை லாபம் தரும். கணவன், மனைவி உறவு இனிக்கும். நீண்ட தூரப் பயணம் லாபம் தரும். பணவரவு திருப்தி தரும். இளைஞர்களுக்கு படிப்பிற்கு ஏற்ப உத்தியோகம் கிட்டும். உடல்நலம் சிறக்கும். தெம்பும், தைரியமும் கூடும். புதிய தொழில் முயற்சியை தள்ளிப் போடுங்கள். கொடுக்கல், வாங்கலில் சுமூக நிலை காணப்படும். உத்தியோகப் பெண்களுக்கு பதவி உயர்வு கிட்டும். பழைய சம்பள பாக்கிகளும் வந்து சேரும். பொருளாதாரம் உயரும். புதிய வேலை வாய்ப்பு கிட்டும். பயணத்தால் வெகுமதி கிடைக்கும். ஆபரணப் பொருள் களவு போகும். அத்தியாவசிய செலவு அதிகமாகும். தேக ஆரோக்கியம் திருப்தி தரும். பெற்றோர் ஆலோசனை பயன் தரும். மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். தனவரவு தடைப்படும். எண்ணங்கள் மாறுபடும். செலவுகள் அதிகமாகும். உடல்நிலையில் கவனம் தேவை. உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கும். குதூகல எண்ணம் அதிகரிக்கும். செயலில் துணிவு கூடும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். எதிர்ப்புகள் ஓடி ஒழியும். வாகனச் செலவு ஏற்படும். பெரிய வாய்ப்புக்கள் தேடி வரும். பேச்சில் கம்பீரம் இருக்கும். பெற்றோரின் ஆசி கிடைக்கும். விருப்பமான தொழில் அமையும். விபரீத போக்கு மறையும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ ஆண்டாள் பரமேஸ்வரி, அதிர்ஷ்ட எண்: 4,9,6,8
அதிர்ஷ்ட நிறம்: இளம்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: G,E




**கும்பம்:** போட்டி, பொறாமைகள் விலகும் வாரம். பழைய கடன் வசூலாகும். பணியில் ஆர்வம் ஏற்படும். சுயத்தொழிலில் கவனம் தேவை. நண்பர்களால் நன்மை உண்டு. இசை ஆர்வம் கூடும். பிள்ளைகள் நலனில் அக்கறை தேவை. உணவுத்தொழில் உயர்வு பெறும். திட்டங்கள் எளிதாகும். பாராட்டுக்கள் உயரும். வெளிநாட்டு நபரால் வெகுமதி கூடும். குடும்ப ஒற்றுமை அதிகரிக்கும். குடும்ப பாசம் கூடும். தொழில் வளம் பெருகும். திட்டம் வெற்றி பெறும். நீண்ட நாள் ஆசை நிறைவேறும். மனோ தைரியம் அதிகரிக்கும். ஆபரணச் சேர்க்கை ஏற்படும். பிள்ளைவழிச் செலவுகள் அதிகரிக்கும். உடல்நலம் கவனம் தேவை. கவனமுடன் செயல்பட வேண்டும். பணவரவு உயரும். பொன் பொருள் சேரும். மருத்துவச் செலவு உண்டு. கமி'ன் தொழில் லாபம் தரும். மங்களச் செய்தி வரும். ஆடம்பர எண்ணம் அதிகரிக்கும். குடும்ப வளம் கூடும். புத்திரர்களால் மேன்மை உண்டு. குதூகலம் கூடும். பழைய கடன் தீரும். பங்குத்தொழில் கவனம் தேவை. பதவி வாய்ப்பு வரும். பூமியால் லாபம் உண்டு. பெண்களுக்கு யோகம் கூடும். ஸ்திர சொத்து சேரும். தெய்வ நம்பிக்கை உண்டாகும். நிர்வாகத்தில் நிதானம் தேவை. காதல் கை கூடும். பணி செய்யும் இடத்தில் பாராட்டு உயரும். எதிரிகள் ஏமாற்றம் அடைவர். வரவுகள் மிகுதியாகும். விரோதங்கள் விலகும். எதிர்கால சிந்தனை ஏற்றம் பெறும். வாய்ப்புக்கள் பெருகும். கனிவான பேச்சு அவசியம். எதிர்பார்த்த உதவி தாமதமாகும். சொத்துக்களில் வில்லங்கம் விலகும். தாய் வழி தகராறு குறையும். வாகனத்தால் செலவு ஏற்படும். காதல் கசக்கும். பணமும், பாராட்டும் சேரும். வரன் வாயில் தேடி வரும். உத்தியோக உயர்வு தாமதம் ஆகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: முருகப்பெருமான், அதிர்ஷ்ட எண்: 8,9,6,2
அதிர்ஷ்ட நிறம்: செம்மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: T,S




**மீனம்:** ஆளுமையான செயல்பாடுகள் அரங்கேறும் வாரம். இடமாற்றத்தால் இனிய தகவல் உண்டு. இரும்புத் தொழில் ஏற்றம் தரும். சூழ்நிலைகள் சாதகமாகும். வங்கி சேமிப்பு உயரும். விருந்தினர் வருகை உண்டு. பயணம் வெற்றி தரும். பால்ய நண்பர் சந்திப்பு கிட்டும். முதலீடுகளால் முன்னேற்றம் உண்டு. பணப்புழக்கம் சரளமாகும். உடன் பிறப்புக்களால் உதவி கிடைக்கும். விவேகமான பேச்சுக்களால் வீண் வம்பு அகலும். மாணவர்களுக்கு எச்சரிக்கை தேவை. நீண்ட நாளைய ஆசை நிறைவேறும். மனமகிழ்ச்சி கூடும். கௌரவமான காலம். மனை வாங்கும் யோகம் உண்டு. கல்வியில் கவனம் தேவை. உறவினர் வருகையால் உள்ளம் மகிழும். பறவைகளிடம் அன்பு அதிகரிக்கும். அலைபேசியால் அலைச்சல் உண்டாகும். தாய் வழி உறவில் விரிசல் ஏற்படும். தொலைபேசி தகவல் மகிழ்ச்சி தரும். சொத்துக்களால் லாபம் கிடைக்கும். புண்ணிய ஸ்தலம் செல்லும் வாய்ப்பு உருவாகும். பாகப்பிரிவினை ஏற்படும். தாய்ப்பாசம் அதிகரிக்கும். ஆதாயம் பெருகும். தொழில் ரகசியம் காப்பாற்றப்படும். பெற்றோர்கள் அன்பு அதிகரிக்கும். வியாபாரம் விருத்தியாகும். தொலைதூரப் பயணம் லாபம் தரும். புதிய முயற்சிகளை தள்ளி போடவும். கமிஷன் தொழில் லாபம் தரும். வெற்றிகள் குவியும், பாராட்டுக்கள் அதிகமாகும். சாதகமான வாய்ப்பு உருவாகும். அடுத்த நபரால் ஆதாயம் உண்டு. உடல்நலனில் அக்கறை தேவை. விருந்தினர் வருகை உண்டு. புண்ணியம் சேரும். ஆடம்பரத்தை விரும்புவீர்கள். ஆண்களின் அதிகாரம் உயரும். நட்பு பெருகும். பெரியவர்களின் ஆலோசனை பலன் தரும். பெருமைகள் சேரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பராசக்தியம்மன், அதிர்ஷ்ட எண்: 3,1,2,9
அதிர்ஷ்ட நிறம்: வெண்பட்டு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,C

# சிறிமா – சாஸ்திரி ஒப்பந்தத்தை அமுல்படுத்துவதில் இந்தியா தவறிழைத்துள்ளது

## ஒப்பந்தம் குறித்து சென்னை உயர்நீதிமன்றம் தீர்ப்பு

சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தத்தில் உள்ள விடயங்களை முழுமையாக அமுல்படுத்துவதில் இந்திய அரசு தவறிழைத்துள்ளது என சென்னை உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

சிறிமா சாஸ்திரி ஒப்பந்தம் 1964 ஆம் ஆண்டு இலங்கைப் பிரதமரான சிறிமாவோ பண்டாரநாயக்கவும் இந்தியப் பிரதமரான லால்பகதூர் சாஸ்திரிக்கும் இடையில் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட ஒப்பந்தமாகும். இந்த ஒப்பந்தத்தின் மூலம் 9 இலட்சத்து 75 ஆயிரம் இலங்கை வாழ் இந்திய வம்சாவளி மக்கள் தொகையில் 3 இலட்சம் பேருக்கு இலங்கைப் பிரஜாஉரிமை வழங்குவதென்றும் 5 இலட்சத்து 25 ஆயிரம் பேருக்கு இந்தியப் பிரஜா உரிமை வழங்குவதென்றும் எஞ்சிய 1 இலட்சத்து 5 ஆயிரம் மக்கள் குறித்து பிறகு பேசித் தீர்ப்பதைன இலங்கை இந்திய அரசாங்கங்கள் தன்னிச்சையாக முடிவினை மேற் கொண்டன.

இந்த ஒப்பந்தம் மேற் கொள்ளப்பட்டு 59 வருடங்களின் பின் ஒப்பந்தத்தை அமுல்படுத்துவதில் இந்திய அரசு தவறிழைத்துவிட்டதாக சென்னை உயர்நீதிமன்றம் தீர்ப்பினை வழங்கியுள்ளது. முவன்கந்த தோட்டத்தில் வசித்து வருகின்ற சுரேஷ் ஜீவரத்னம் என்ற இளைஞர் தாக்கல் செய்திருந்த வழக்கு தொடர்பாகவே சென்னை உயர்நீதிமன்றம் இந்தத் தீர்ப்பினை வழங்கியுள்ளது.

- ஜீவன் தொண்டமான் கோரிக்கை

இந்தத் தீர்ப்பினை அடுத்து சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தம் மூலம் இலங்கையில் இருந்து பலவந்தமாக நாடு கடத்தப்பட்ட இந்திய வம்சாவளி மலையகத்தமிழர்கள் மீண்டும் நாடு திரும்ப வேண்டும் என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும்இ நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் கோரிக்கைவிடுத்துள்ளார்.

அத்துடன், சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தம் மூலம் இழைக்கப்பட்டுள்ள வரலாற்று தவறை சரி செய்வதற்கு தமக்குள்ள பொறுப்பை இலங்கை மற்றும் இந்திய அரசுகள் நிறைவேற்ற வேண்டும் எனவும் அமைச்சர் தனது கோரிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

# காஸா நெருக்கடிக்கு இரு நாடுகளின் தீர்வு காணப்பட வேண்டும்

## நாடாளுமன்றில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசா

காசா நெருக்கடியில் பெரும்பாலான நாடுகள் பக்கச் சார்பாக நடந்து கொள்கின்றன. அவர்களில் இஸ்ரேலை ஆதரிப்பவர்கள். இருப்பினும் இரு தரப்பு கொலைகளையும் கண்டிக்க வேண்டும். காஸா நெருக்கடிக்கு இரு நாடுகளின் தீர்வு காணப்பட வேண்டும் என்பதும் இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீனம் ஆகிய இரண்டும் இணைந்து வாழ வேண்டும் என்பதும் எங்களின் கருத்து என்று இலங்கையின் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசா வியாழன் நாடாளுமன்ற அமர்வில் தெரிவித்தார்.

நாடாளுமன்ற அமர்வில் கலந்து கொண்டவேளை மத்திய கிழக்கு மற்றும் உலகெங்கிலும் சமாதானத்தை அடைவதற்கான ஒற்றுமையின் அடையாளமாக பாலஸ்தீன அடையாளம் மற்றும் வரலாற்றின் சின்னமான கறுப்பு வெள்ளை சால்வையை அணிந்து கொண்டு கலந்து கொண்டார்.

“நான் இந்த சால்வை அணிந்து வந்தபோது ஒரு எம்.பி என்னிடம் பாலஸ்தீனத்திற்கா அல்லது இஸ்ரேலுக்கா ஆதரவாவாக உள்ளீர்கள் என்று கேட்டார். நான் எந்தத் தரப்பையும் ஆதரிக்கவில்லை என்று சொன்னேன்இ ஆனால் உலக அமைதிக்கு அழைப்பு விடுக்கவே சால்வை அணிந்தேன்” என்று பிரேமதாச நாடாளுமன்ற அமர்வில் கூறினார்.

எனினும் பிரேமதாசவின் சால்வையில் ரவூப் ஹக்கீம் மற்றும் டிலான் பெரேரா போன்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் அணிந்திருந்த கொடி போன்று இருக்கவில்லை.

# மலேசியாவில் நடைபெற்ற சர்வதேச மனக் கணித போட்டியில் மன்னாரைச் சேர்ந்த மாணவர்கள் சாதனை

**- மன்னார் நிருபர் (7-12-2023)**





மலேசியாவில் நடைபெற்ற 80 இற்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்தவர்கள் பங்கு பற்றிய மனக் கணித போட்டியில் இலங்கை சார்பில் மன்னார் மாவட்டத்தில் இருந்து சென்ற 5 மாணவர்கள் சாதனை படைத்துள்ளனர்.

டிசம்பர் 3ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மலேசியாவில் சர்வதேச மனக் கணித போட்டி இடம்பெற்றது. இந்த போட்டியில் உலகளாவிய ரீதியில் 80 இற்கும் மேற்பட்ட நாடுகளை சேர்ந்த 2 ஆயிரத்து 500 மாணவர்கள் பங்குபற்றியிருந்தனர். இலங்கையை பிரதிநிதித்துவ படுத்தும் வகையில் 62 மாணவர்கள் இதில் பங்குபற்றினர்.

மன்னார் மாவட்டத்தை சேர்ந்த 5 மாணவர்களும் கலந்து கொண்டு மனக்கணித போட்டியில் பங்கு பற்றி வெற்றிக் கிண்ணங்களை வென்றுள்ளனர்.

அந்த வகையில் மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியைச் சேர்ந்த மாணவர்களான எஸ். சிறோன்றாஜ் னு பிரிவில் பங்கு பற்றி 2 ஆம் இடத்தையும், மாணவன் வி. செஸான் 3 ஆம் இடத்தையும், லஸால் கிட்ஸ் கேம்பஸில் கல்வி கற்கும் மாணவி ஜே. ரெறா ஜெசாரி 3வது இடத்தையும் யோசப் வாஸ் ஆங்கிலப் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவன் கே. அறிஸ்மித் 3வது இடத்தையும், தோட்டவெளி பாடசாலையில் கல்வி கற்கும் மாணவி ஆர். ரியானா 3 ஆம் இடத்தையும் பெற்று மன்னார் மாவட்டத்திற்கு பெருமை சேர்த்துள்ளனர்.

இவர்கள் மன்னார் UCMAS நிறுவனத்தின் நிர்வாகியும் ஆசிரியருமான ந. கேதீஸ்வரன் அவர்களின் வழிகாட்டலின் கீழ் இப்போட்டியில் பங்கு பற்றி வெற்றிக் கிண்ணங்களை வென்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.





# ஓய்வின்றி உழைத்து வரும் தூய்மைப் பணியாளர்கள் : சென்னை வெள்ளம்

முக்கிய சாலைகளில் வெள்ளநீர் வடிந்த நிலையில், அப்பகுதிகளில் மாநகராட்சி சார்பில் நேற்று தீவிர தூய்மைப் பணி தொடங்கியது. இதற்காக தூய்மைப் பணியாளர்கள் ஓய்வின்றி உழைத்து வருகின்றனர். சென்னை மாநகரப் பகுதியில் பெய்த வரலாறு காணாத மழை காரணமாக மாநகரமே கடந்த 4, 5 தேதிகளில் ஸ்தம்பித்தது. பல்லாயிரக்கணக்கான வீடுகள் மற்றும் கடைகளில் கழிவுநீர் கலந்த வெள்ளநீர் புகுந்தது.மழையால் மாநகராட்சியின் பேட்டரி வாகனங்கள் நீரில் மூழ்கியதாலும், கொடுங்கையூர், பெருங்குடிஆகிய குப்பை கொட்டும் வளாகங்களுக்கு லாரிகள் செல்ல முடியாதஅளவுக்கு சாலைகளில் மழை நீர்தேங்கி இருப்பதாலும், வீடு வீடாக குப்பை சேகரிப்பை கடந்த 3ம் தேதி முதல் மாநகராட்சி நிர்வாகம் நிறுத்தி இருந்தது.

இதனால் பொதுமக்கள் ஆங்காங்கே பொது இடங்கள், சாலையோர பகுதிகள், காலி இடங்களில் குப்பைகளை கொட்டி வந்தனர். இதனால் மாநகரில் பல இடங்களில் குப்பை குவியல்கள்




அதிக அளவில் இருந்தன. மேலும் வெள்ளம் வீடுகளுக்குள்புகுந்ததால் சேதமடைந்த சோபா, மெத்தை, துணிகள் போன்றவற்றை பொதுமக்கள் வெளியில் கொட்டி வருகின்றனர். மரங்கள் விழுந்து ஏற்பட்ட குப்பையும் ஆங்காங்கே சாலையோரங்களில் கிடக்கின்றன. தற்போது மழைநீர் வடிந்துவரும் நிலையில் நேற்று முதல் தீவிர தூய்மைப் பணியை மாநகராட்சி தொடங்கியுள்ளது.

இப்பணிகளை தலைமைப் பொறியாளர் (திடக்கழிவுமேலாண்மை) என்.மகேசன் நேரில் ஆய்வு செய்தார். சாலையோரங்களில் 4 நாட்களாக தேங்கிக் கிடந்த வீட்டு குப்பை,வெள்ளத்தால் அடித்து வரப்பட்ட குப்பைகள் போன்றவற்றை தூய்மைப் பணியாளர்கள் சேகரித்து வாகனங்களில் எடுத்துச் சென்று அகற்றினர்.மேலும் சேறு, சகதிகளையும் அகற்றி அப்பகுதிகளில் பிளீச்சிங் பவுடர்களை தூவினர். கோவை மாநகராட்சி பணியாளர்கள் புளியந்தோப்பு பகுதியில் தூய்மைப் பணிகளை மேற்கொண்டனர். மாநகராட்சி தூய்மை பணியாளர்களுக்கு உணவு ஏதும் வழங்கப்படவில்லை என வருத்தம் தெரிவித்தாலும், சென்னை மீட்கும் பணிக்காக உழைக்கிறோம் என்று பெருமையாக கூறினர். தீவிர தூய்மைப் பணி நேற்று தொடங்கினாலும், அவர்கள் கடந்த 4 நாட்களாகவே ஓய்வின்றி உழைத்து வருகின்றனர்.

இந்திய செய்திகள்

# புயல் சேதத்தை மதிப்பிட மத்திய குழு விரைவில் வருகை: மத்திய அமைச்சர் ராஜ்நாத் சிங் உடனான ஆலோசனைக்கு பிறகு முதல்வர் ஸ்டாலின் தகவல்



சென்னை உள்ளிட்ட 4 மாவட்டங்களில் புயலால் ஏற்பட்ட சேதத்தை மதிப்பிட மத்திய குழு விரைவில் வருகை தர உள்ளதாக மத்திய அமைச்சர் ராஜ்நாத் சிங்உடனான ஆலோசனைக்கு பிறகு முதல்வர்ஸ்டாலின் தெரிவித்தார்.மிக்ஜாம் வெள்ள பாதிப்புகளை பார்வையிட நேற்று மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் சென்னை வந்தார்.பாதிப்புகளை பார்வையிட்ட பிறகு, தலைமைச் செயலகத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலினை சந்தித்து ஆலோசனை நடத்தினார். அதன்பிறகு, முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறியதாவது:புயல், வெள்ள பாதிப்பை ஆய்வு செய்தமத்திய அமைச்சருக்கு தமிழக மக்கள் சார்பிலும், அரசு சார்பிலும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னையின் வரலாற்றில் இல்லாத அளவுக்கு பெய்த பெருமழையால் ஏற்பட்ட பாதிப்புகளிலிருந்து மீண்டு, சென்னை நகரமும், மக்களும் இயல்புநிலைக்கு வரத் தொடங்கியுள்ளனர். இந்த பெரும் இயற்கை சீற்றத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் போர்க்கால அடிப்படையில் தமிழக அரசு எடுத்து வருகிறது. தமிழக அரசின் முன்னெச்சரிக்கை நடவடிக்கையால், உயிரிழப்புகளும், பொருட்சேதங்களும் பெருமளவில் தவிர்க்கப்பட்டுள்ளது.சாலைகள், பாலங்கள், கட்டிடங்கள் போன்ற பொதுக் கட்டமைப்புகளுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகளை சீரமைக்கவும், நிவாரண உதவிகளை வழங்குவதற்கும் ஏதுவாக தேசிய பேரிடர் நிவாரண நிதியிலிருந்து ரூ.5060 கோடி நிதி வழங்கும்படி பிரதமருக்கு ஏற்கெனவே நான் கோரிக்கை விடுத்திருந்தேன். நமது கோரிக்கைகள் குறித்த கோரிக்கை மனுவை மத்திய அமைச்சரிடம் அளித்துள்ளேன். இழப்பீடுகளை மதிப்பீடு செய்ய மத்திய அரசின் குழு ஒன்று விரைவில் தமிழகம் வர உள்ளது. தமிழக அரசின் இந்த கோரிக்கைகளை பரிசீலித்து உரிய நிதியுதவியை மத்திய அரசுவிரைவில் வழங்கும் என மத்திய அமைச்சர் உறுதியளித்துள்ளார்.

நிவாரணப் பணிகளை முழுவீச்சில் தொடர்ந்து மேற்கொண்டு, அனைத்து பகுதிகளையும் இயல்பு நிலைக்கு விரைவில் கொண்டுவரத் தேவையான நடவடிக்கைகளை தமிழக அரசு தொடர்ந்து எடுக்கும். இவ்வாறு முதல்வர் பேசினார். தமிழகத்துக்கு ரூ. 450 கோடி விடுவிப்பு: பின்னர் மத்திய அமைச்சர் ராஜ்நாத்சிங் கூறியதாவது: தமிழகத்தில் ஏற்பட்டுள்ள உயிரிழப்புகளால் பிரதமர் மோடி மிகுந்ததுயரமடைந்துள்ளார். இந்த குழப்பமானசூழலை பிரதமர் மோடி கண்காணித்துவருவதுடன், முதல்வர் ஸ்டாலினுடனும் பேசியுள்ளார். மேலும், பாதிக்கப்பட்ட தமிழக மக்களுக்கு உதவ உத்தரவிட்டுள்ளார். இங்குள்ள சூழல் குறித்து தனிப்பட்ட முறையில் கண்காணிக்கவும், தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும் எனக்கு அவர்உத்தரவிட்டுள்ளார். ராணுவம், கடற்படை, விமானப்படை, கடலோர பாதுகாப்புப் படை, வானிலை ஆராய்ச்சி மையம், துணை ராணுவம் உள்ளிட்ட அனைத்து மத்திய அரசின் அமைப்புகள், வெள்ளத்தால் ஏற்பட்ட துயரை தணிக்கும் பணிகளை சிறப்பாக மேற்கொண்டு வருகின்றன. பாதிப்பு நிலவரத்தை அறிய, நான் ஹெலிகாப்டரில் சென்று ஆய்வு செய்தேன்.

அதன்பிறகு, முதல்வர் மு.க.ஸ்டாலினை சந்தித்து பேசினேன். தமிழக அரசு அதிகாரிகளுடனும் ஆலோசனை நடத்தினேன். இங்குள்ள சூழலை மாற்ற மத்திய அரசுதன்னால் இயன்ற முயற்சிகளை செய்யும். தேவைப்படும் பட்சத்தில் மேலும் விரிவுபடுத்துவோம். தமிழக நலனுக்காக மத்திய அரசு தன்னை பணித்துள்ளது. மக்களின் பாதிப்பை நீக்க மத்திய அரசு அமைப்புகள் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் மூலம் இதை அறிய முடியும்.மாநில பேரிடர் நிவாரண நிதிக்கு மத்திய அரசு, தமிழகத்துக்கு ரூ.450 கோடியை விடுவிக்க உள்துறை அமைச்சகத்துக்கு பிரதமர் உத்தரவிட்டுள்ளார். ஏற்கெனவே, முதல் தவணையாக ரூ.450 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது. சமீப காலமாக சென்னையில் வெள்ள பாதிப்புகள் மீண்டும் மீண்டும் ஏற்பட்டு வருகிறது.எனவே, தேசிய பேரிடர் தணிப்பு நிதியின் கீழ், சென்னை வடிகால் திட்டத்துக்கு ஒருங்கிணைந்த நகர்ப்புற வெள்ள மேலாண்மை நடவடிக்கைக்கு ரூ.561.29 கோடி மதிப்பிலான வெள்ளத் தணிப்பு திட்டத்துக்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

இதில், ரூ.500 கோடி மத்திய நிதியும் அடங்கும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.சந்திப்பின் போது, மத்திய இணைஅமைச்சர் எல்.முருகன், தமிழக அமைச்சர்கள் சாத்தூர் ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, தலைமைச் செயலர் சிவ்தாஸ் மீனா, டிஜிபி சங்கர் ஜிவால் உள்ளிட்டோர் பங்கேற்றனர்

# 3 நாட்களாக வெள்ளம் வடியாததால் வேளச்சேரி மக்கள் தவிப்பு: அமைச்சர் உதயநிதியிடம் சரமாரியாக கேள்வி கேட்ட ஆசிரியை சமூக வலைதளங்களில் வைரல்



சென்னை வேளச்சேரி பகுதியில் 3 நாட்களாக தேங்கியுள்ள மழைநீரால் மக்கள் வேதனையில் தவித்து வரும் நிலையில், ஆய்வு செய்ய சென்ற அமைச்சர் உதயநிதியிடம் பள்ளி ஆசிரியை சராமாரியாக கேள்வி எழுப்பியதும், உடன் இருந்த அமைச்சர்கள் நடந்து கொண்டதும் தொடர்பான வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.மிக்ஜாம் புயலால் பெய்த அதி கனமழையால் வேளச்சேரி, அதனை சுற்றியுள்ள பகுதிகள் மழைநீரால் சூழ்ந்துள்ளது.

வேளச்சேரி விஜயநகர் பேருந்து நிலையம், ரயில் நிலையம், கைவேலி, மடிப்பாக்கம் ராம்நகர், புழுதிவாக்கம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் கடந்த3 நாட்களாக மழைநீர் 4 அடிக்கு மேல் தேங்கியுள்ளது. பல அடுக்குமாடி குடியிருப்புகளில் முதல் தளம் வரை மழைநீர் சூழ்ந்துள்ளது.

இதனால், ஆயிரக்கணக்கான மக்கள் வெளியே வரமுடியாமல் வீடுகளுக்குள்ளேயே முடங்கியுள்ளனர். ஒருசிலர் தீவிரமாக முயற்சி செய்து வெளியே வந்து உறவினர்கள், நண்பர்களின் வீடுகளுக்கு செல்கின்றனர்.இந்நிலையில், நேற்று வேளச்சேரி பகுதியில்பாதிப்புகளை பார்வையிட அமைச்சர்கள் உதயநிதி ஸ்டாலின், கே.என்.நேரு, மா.சுப்பிரமணியன் ஆகியோர் வந்தனர். அப்போது பள்ளி ஆசிரியை ஒருவர், மழைநீர் தேங்குவதால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்தும், மழைநீரை உடனடியாக அகற்ற நடவடிக்கை எடுக்கக்கோரியும் உதயநிதியிடம் மனு கொடுக்க முயன்றார். அப்போது, அங்கிருந்தவர்கள் உதயநிதியிடம் நெருங்கவிடாமல் அந்த பெண்மணியை பின்பக்கமாக இழுத்ததாக தெரிகிறது.இதனால் ஆத்திரமடைந்த பள்ளி ஆசிரியர் இழுத்தவர்களின் கைகளை உதறிவிட்டு, ‘வாட் நான்சென்ஸ் இஸ் திஸ்’. எப்படி இழுத்து தள்ளுகிறார்கள் பாருங்கள்.

நான் ஒரு பள்ளி ஆசிரியை.இங்கே மழைநீரில் தவித்துக் கொண்டிருக்கிறேன். இப்படிதான் ஒரு பெண்ணை நடத்துவீர்களா என்று சராமரியாக உதயநிதியை பார்த்து கேள்விகளை எழுப்பிக் கொண்டிருந்தார்.அப்போது, அமைச்சர் மா.சுப்பிரமணியன் அந்த பெண்ணிடம் கேட்டதற்கு, “தண்ணீர் நிற்கிறது. 20 ஆண்டுகளாக நாங்கள் பாதிக்கப்பட்டு வருகிறோம்“ என்றார். மோட்டார் வைத்து தண்ணீரை அகற்ற சொல்கிறேன் என்று மா.சுப்பிரமணியன் தெரிவித்தார். ஒரு செகண்ட் சார் இருங்கசார், ஒரு செகண்ட் சார், பிளீஸ் சார் என்று ஆசிரியை சொன்னபோது, அவ்வளவு நேரம் எல்லாம் இருக்க முடியாது என்றபடி அந்த பெண்ணை தள்ளிவிட்டபடி உதயநிதியை அழைத்து சென்றார் கே.என்.நேரு.மூத்த அமைச்சரின் இந்த செயல் அங்கிருந்தவர்களை முகம் சுளிக்க வைத்தது.

இந்த வீடியோசமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது. வீடியோவை பார்ப்பவர்கள் அமைச்சர்களை கடுமையாக விமர்சனம் செய்து வருகின்றனர். அதேபோல், ‘வாட் நான்சென்ஸ் இஸ் திஸ் டிஎம்கே’ என்ற ஹேஷ்டேக் ட்ரெண்ட் ஆனது.மேலும் நாராயணபுரம் ஏரி நீர் வெளியேற்றத்தால் துரைப்பாக்கம் பல்லாவரம்ரேடியல் சாலை, வேளச்சேரி நெடுஞ் சாலை, வேளச்சேரி மடிப்பாக்கம் சாலைகளில் போக்குவரத்து தடை செய்யப்பட்டுள்ளதால் மக்கள் அவதிக்கு ஆளாகியுள்ளனர்.

மொன்றியல் நகரில்
உதயன் UTHAYAN
விளம்பரங்கள், மரண அறிவிததல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பகமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519

NEED MONEY?
பணப்பிரச்சனையா!
கவலை வேண்டாம்
-$ Loans
-$ Cash
-$ Debt Consolidation
-$ 1st and 2nd Mortgage
-$ Home Renovation Loan
-$ Equity Loans
கடன் தொல்லைகளிலிருந்து விடுதலை!
~ No Credit Check
~ Next Day Approval.
~ Quick & Easy
உடனடியான தீர்வுக்காக அழையுங்கள்..
Call now: 647-812-6350

Keith Sanmugathas
Broker
Sun Sanmugathas
Broker of Record
PROPERTY MAX
Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
Office: 416-291-3000
416-666-9464
www.iselldreamcondos.ca
416-291-0005
www.iselldreamhomes.ca

26ம் ஆண்டில்..
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN உதயன்

உதயம் 1444 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday December 8, 2023




# யாழ்ப்பாண மாவட்ட கூட்டுறவாளர் வீரசிங்கம் அவர்களுடைய 59ஆவது நினைவு தின நிகழ்வு

யாழ்ப்பாண மாவட்ட கூட்டுறவாளர் சபையின் ஏற்பாட்டில், கூட்டுறவுப் பெரியார் வீரசிங்கம் அவர்களுடைய 59ஆவது நினைவு தின நிகழ்வு யாழ்ப்பாணம் வீரசிங்கமண்டவத்தில் யாழ் மாவட்ட கூட்டுறவுச்சபையின் உபதலைவர் க.மகாதேவன் தலைமையில் இடம்பெற்றது.

இவ்நிகழ்வில் பிரதம அதிதியாக யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் அ.சிவபாலசுந்தரன் கலந்து கொண்டதுடன் கூட்டுறவுப்பெரியார் வீரசிங்கம் அவர்களுடைய திருவுருவ படத்திற்கான மலர்மாலை அணிவித்த துடன் நினைவேந்தலினை செலுத்தியதுடன் நினைப்பேருரை யும் நிகழ்த்தினார்.

(உள்ளே செய்தி 10ம் பக்கத்தில்)

# கனடாவிலிருந்து வெளிவரும் "இலக்கியவெளி" சஞ்சிகையின் மொழிபெயர்ப்புச் சிறப்பிதழின் வெளியீட்டு விழா சிறப்புற நடைபெற்றது



எழுத்தாளர் அகில் அவர்களை ஆசிரியராகக் கொண்டு கனடாவிலிருந்து வெளிவரும் "இலக்கியவெளி" சஞ்சிகையின் மொழிபெயர்ப்புச் சிறப்பிதழின் வெளியீட்டு விழா கடந்த வாரம் ஸ்காபுறோவில் அமைந்துள்ள ஒன்றாரியோ தமிழிசைக் கலாமன்ற மண்டபத்தில் சிறப்புற நடைபெற்றது. விழாவிற்கு கலாநிதி நா. சுப்பிரமணியன் ஐயா அவர்கள் தலைமை தாங்கினார்கள். எழுத்தாளரும் ஆசிரியருமான தங்கராஜா சிவபாலு அவர்கள் நிகழ்ச்சித் தொகுப்பாளராக நேர்த்தியாகச் செய்தார்.

(உள்ளே செய்தி 23ம் பக்கத்தில்)



# நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் 3வது பாராளுமன்றத்தின் 10வது அமர்வின் தொடர் கூட்டங்கள் ரொறன்ரோவில் அமைந்துள்ள ஹோட்டல் மண்டபம் ஒன்றில் நடைபெற்றன

நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் 3வது பாராளுமன்றத்தின் 10வது அமர்வின் தொடர் கூட்டங்கள் கடந்த 2ம் 3ம் திகதிகளில் ரொறன்ரோவில் அமைந்துள்ள ஹோட்டல் மண்டபம் ஒன்றில் நடைபெற்றன. காலை தொடக்கம் மாலை வரை நடைபெற்ற இரண்டு நாள் அமர்வுகளில் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர். அமைச்சர்கள். மற்றும் உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டு தங்கள் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டனர்.

இரண்டு நாட்களும் அமர்வுகளுக்கு சபாநாயகர் திருமதி முருகதாஸ் தலைமை தாங்கினார்.

(உள்ளே செய்தி 23ம் பக்கத்தில்)

# "உண்மையான" உலகத்தமிழ் பண்பாட்டுக் இயக்கத்தின் செயலாளர் நாயகம் ஜேர்மனி வாழ் துரை கணேசலிங்கம் 2024 ஜனவரியில் இலங்கை செல்கின்றார்

## இயக்கத்தின் யாழ்ப்பாணக் கிளையை மறுசீரமைக்கும் வகையில் கலந்துரையாடல்களையும் நடத்தவுள்ளார்



2024ம் ஆண்டு பிற்பகுதியில் அமெரிக்காவில் தனது 50வது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடவுள்ள உண்மையான" உலகத்தமிழ் பண்பாட்டுக் இயக்கத்தின் செயலாளர் நாயகம் ஜேர்மனி வாழ் துரை கணேசலிங்கம் 2024 ஜனவரியில் இலங்கை செல்கின்றார். அவர் தனது பயணத்தின் போது இயக்கத்தின் யாழ்ப்பாணக் கிளையை மறுசீரமைக்கும் வகையில் கலந்துரையாடல்களையும் நடத்தவுள்ளார்.

சுமார் 25வருடங்களுக்கு மேலாக உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் செயலாளர் நாயகமாக சிறப்புற பணியாற்றி உலகின் பல நாடுகளிலும் சிறப்பு மாநாடுகளை நடத்துவதற்கு ஒரு முக்கிய சக்தியாக விளங்கிய துரை கணேசலிங்கம். தனது யாழ்ப்பாண விஜயத்தின்போது உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கம் ஆரம்பிக்கப்பெற்ற யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் அதன் கிளைக்கு நூற்றுக்கணக்கான உறுப்பினர்களை இணைக்கும் வகையில் ஆலோசனைக் கூட்டங்களையும் நடத்தவுள்ளார்.

மேலும் கடந்த சில வருடங்களாக எமது உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் இலச்சினையை சட்ட விரோதமாக பாவித்து தமிழ்நாட்டிலும் மலேசியா-விலும் கூட்டங்களை நடத்தியும் மக்களை ஏமாற்றியும் செயற்பட்டு வரும் "போலியான" குழுவொன்று தொடர்பாகவும் தெளிவுபடுத்தும் முகமாக யாழ்ப்பாண பத்திரிகையாளர்களையும் வானொலிச் சேவைகளின் பிரதிநிதிகளையும் சந்தித்து உரையாடவுள்ளார் என்பதும் கவனிக்கத்தக்கது.

**Email contact: imtc1974@yahoo.com**

---------------------------------------------------------------------

ஊடகப் பிரிவு- உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கம்- தலைமையகம்
கனடா- 07-12-2023 .

(உள்ளே செய்தி 10ம் பக்கத்தில்)

# இலங்கையின் கிழக்குப் பல்கலைக் கழகத்தின் தமிழ்த்துறைப் பேராசிரியர் செ. யோகராசா அவர்கள் காலமானார்



இலங்கையின் கிழக்குப் பல்கலைக் கழகத்தின் தமிழ்த்-துறைப் பேராசிரியர் செ. யோகராசா அவர்கள் காலமானார் என்ற சோகத்தைத் தரும் செய்தி எமது ஆசிரியபீடத்திற்கு கிடைத்தபோது ஒரு நேர்மையான இலக்கிய விமர்சகரை இழந்து விட்டோமே என்ற ஏக்கம் உள்ளத்தை நிறைத்து நின்றது.

பேராசிரியரின் மறைவு குறித்து இலங்கையின் சமய சமூகக் காவலர் ஆறுதிருமுருகன் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் பேராசிரியர் அவமர்கள் ஒரு இனிய பண்பாளன் என்றும் எவருக்கும் உதவிடும் பண்பு கொண்டவர் என்றும் தனது அஞ்சலியைப் பகிர்ந்து கொண்டுள்ளார். ஆன்னாரின் மறைவிற்கு கனடா உதயன் ஆசிரிய பீடம் தனது ஆழந்த இரங்கலைப் பகிர்ந்து கொள்கின்றது.

416 283 6232
இப்பொழுது உங்கள் GEETHAVAANI RADIO வை தொலைபேசி அழைப்பில் கேளுங்கள்!

தமது நற்சேவையினால் தமிழ் மக்களின் உள்ளங்களை வெற்றி கொண்ட வீடு விற்பனை முகவர்கள்
Siva & Joy Real Estate Team
416-267-9700
Homelife/Future Reality Inc., Brokerage
Siva Shanmuganathan
Broker
Joy H.Selvanayagam
Broker